

## சமர்ப்பணம்

என் வாழ்வில்...
மார்கழிப் பனிமலராய்
மணம் வீசி...
தேன் மழைச் சாரலாய்
திகட்டாத நினைவுகள் தந்து...
வருடம் ஒரு முறை
வரும் வசந்தமாய்
வாஞ்சையைப் பரிசளித்து...
தன்னம்பிக்கையின்
தனி வடிவமாய் வாழ்ந்து...
இன்று...
தெய்வத்தின் திருவடிகளில்
தீபச்சுடராய் ஒளிர்கின்ற...
என் தாய்
வேதவல்லி அவர்களுக்கு...!

# மனதில் விழுந்த மழைத் துளியே..!

---

1



பூமிக்கும் வானுக்கும் இடையே வெள்ளிச்சரம் தொடுத்திருந்த மழை, வீதியெங்கும் வெண்முத்துச் சிதற லாய் விழுந்து, பச்சை மின்மினிகள் உதிர்வது போல், இலைகளின் சார லுடன் மண்ணில் பரவியது.

மழை தேவதையின் நடனத்தில், நீர்த்துளிகள் கொலு சாய் சப்தமிட்டு அழகாய் ஜதி பாடி, மலர்களின் நலம் விசாரித்துக் கொண்டிருந்தன.

சாலையிலிருந்தும் பயணிக்காத மரங்கள், குடை பிடிக்காமல் குளித்துக் கொண்டிருக்க, பால்கனியில் நின்று இயற்கையை ரசித்துக் கொண்டு இருந்த 'தீக்ஷண்யா', தன் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்.

கடந்து வந்த கல்லூரி நாட்கள், மனதில் கனவாய் விரிந்தன. அவள் இந்த வருடம்தான் 'பி.இ.' முடித்திருக் கிறாள்.

மேலே படிக்க வேண்டும்... தங்களுடைய கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியிலேயே வேலை பார்க்க வேண்டும் என்ற ஆவல், அவளுக்குள் பெரிதாய்...!

நீண்ட நேரமாய் இரைதேடி அலைப்புற்ற பறவையொன்று இளைப்பாறுவதைப் போல், எண்ணச் சுழல்களின் தாக்கத்திலிருந்து விடுபட்டுக் கனவுகள் கலைந்து, நினைவுக்குள் மெல்ல நுழைந்தாள், தீக்ஷண்யா.

எதிரில், வருணனின் வர்ஷிப்பாய் பொழிந்து கொண்டிருந்த மழையைப் பார்க்கும்போது, வானம் பூமிக்கு அளிக்கும் வரப்பிரசாதமாய்.. வருடலாய் மனதை நனைக்கும் வானப்பிரவாகமாய்த் தோன்றியது.

சுகமான அந்தச் சாரலில் தன்னை மறந்திருந்தாள் அவள்.

அப்போது "தீக்ஷாம்மா... உங்களை அப்பா வரச் சொன்னாங்க!" என்ற இடைமிட்டது, சமையல்காரம் மாவின் குரல்.

சிறு முறுவலுடன் திரும்பி, "நான் வரேன்னு போய் சொல்லுங்க, தனம்மா" என்றாள்.

தந்தை கேசவனின் அறைக்குள் சென்றபோது, அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தார் அவர்.

"என்னப்பா... கூப்பிட்டீங்களாமே? என்ன விஷயம்?" என்றாள் மென்மையாக.

"இங்கே வந்து என் பக்கத்துல உக்காரும்மா! உன் கிட்டே, முக்கியமா ஒரு விஷயம் பேசறதுக்காகத்தான் வரச் சொன்னேன். ம்... நம்ம கிரியைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"



"என்னப்பா இது திடீர் கேள்வி? கிரி, சின்ன வயசுல இருந்தே என்னோட பழகின ஒரு நல்ல ஃப்ரெண்ட், அவ்வளவுதான்! அவனைப் பத்தி நினைக்கிறதுக்கு வேற என்ன இருக்கு?" என்றாள் ஆச்சர்யத்துடன்.

"தீக்ஷாம்மா! நானும் ஈஸ்வரனும் ஒரு முடிவு எடுத்திருக்கோம். உனக்கும் கிரிக்கும் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு எங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப நாளா ஒரு ஆசை! கிரிக்கும் அதுல சம்மதம்தான்... உன்னோட விருப்பத்தைக் கேட்கலாம்னுதான் கூப்பிட்டேன்" என்றார் ஆர்வமாக.

தீக்ஷண்யாவின் கண்களில் ஆச்சர்ய மின்னல்!

கிரியைப் பற்றி, அவள் மனதில் வேறு விதமான எண்ணங்கள் என்றுமே இருந்ததில்லை... பெரிதாக, எந்த ஈடுபாடும் வந்ததுமில்லை!

அப்பா இன்று பேசிய விஷயம், அவளுக்குள் பெரும் வியப்பைத் தருவதாய்...

அவரிடம் திரும்பியவள், "என்னப்பா! நீங்களே இப்படிக் கேக்கறீங்க? உங்களுக்கு என்னோட ஆம்பிஷன்ஸ் பத்தி நல்லாத் தெரியும்.

"எம்.இ. பண்ணணும், நம்ம கம்பெனியிலேயே வொர்க் பண்ணணும்னு நான் விரும்பறதும் தெரியும்... அதுக்கு அப்பறம் பண்ணலாம்னு இருக்கேன்! எனக்குக் கல்யாணமெல்லாம் இப்ப வேணாம்ப்பா. நான் கொஞ்ச நாள் சுதந்திரமா இருக்கேன். அப்புறமா இதப் பத்திப் பேசலாம்" என்றாள் தீர்மானமான குரலில்.

"கல்யாணம் முடிஞ்சி கூட நீ படிக்கலாம்மா... நம்ப கம்பெனியிலேயே பொறுப்பேத்துக்கலாம்! யார் உன்னைத்

தடுக்கப் போறா? நானும் ஈஸ்வரனும் எல்லாமே பேசிட்டோம். எப்படியும் கிரியும் நீயும்தான் நம்ம கம்பெனி யோட வாரிசு! நீங்க ரெண்டு பேரும் கம்பெனியைப் பாத்துக்கிட்டா அப்புறம் நாங்க நிம்மதியா ரெஸ்ட் எடுப்போம்... யோசிச்சுச் சொல்லும்மா!" என்றார் கேசவன்.

அரை மனதாக "ம்... சரிப்பா. எனக்கு ஒரு நாள் டைம் கொடுங்க. நான் யோசிக்கணும்" என்று கூறிவிட்டுத் தன் அறைக்கு வந்தாள் தீக்ஷண்யா.

* * *

அவளுடைய அப்பா கேசவனும், ஈஸ்வரனும் நீண்ட காலமாகப் பெரிய கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி ஒன்றை நடத்தி வந்தனர்.

இரு குடும்பங்களுமே, ஆரம்ப காலத்திலிருந்தே, நல்ல நட்புடன் இருந்தனர்.

தாயை சிறு வயதிலேயே இழந்துவிட்ட தீக்ஷண்யாவுக்கு, ஈஸ்வரின் மனைவி யசோதாவை மிகவும் பிடிக்கும்... அவரும் அவளுடன் அன்பாய்ப் பழகுவார்!

அவர்களுடைய ஒரே மகன்தான், கிரிதர்!

தங்களிருவருக்கும் மணமுடிக்க வேண்டும் என்ற எண்ணம், தன் தந்தைக்கு இருப்பதே இதுவரை அவளுக்குத் தெரிந்ததில்லை.

இன்று பேசியபோதோ, ஆச்சரியமாக இருந்தது. கிரியை தன் இணையாக ஏனோ அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.



எப்போதுமே, அவளுக்குத் திருமணம், குடும்பம் இதெல்லாம் அவ்வளவாக ஆர்வம் இருந்ததில்லை.

அதே யோசனையுடன் சென்று பால்கனியில் நின்ற போது, மழையும் நின்றிருந்தது.

சாரலில் குளித்த மரங்கள், தென்றலில் தலை துவட்டிக் கொண்டு இருந்தன. காற்றில் குளிரின் சாரல் கலந்து தெரிந்தது.

அன்று மாலையே, ஐஸ்வர்யாவுடன் தண்டு மாரியம்மன் கோவிலுக்குச் சென்றபோது, அப்பா தன்னிடம் பேசிய விஷயத்தைப் பற்றி அவளிடம் கூறினாள் தீக்ஷண்யா.

ஐஸ்வர்யா, அவளுடன் ஒன்றாகப் படித்த உயிர்த் தோழி!

அவளும் "இதுல ஒன்னும் யோசிக்கறதுக்கு இல்லைடி தீக்ஷா! கல்யாணம் செஞ்சிக்கிட்டு, அங்கிள் சொல்ற மாதிரி ரெண்டு பேரும், கம்பெனியிலே பொறுப்பேத் துக்க வேண்டியதுதானே?" என்றாள் இயல்பாக.

"ப்ச்... அதுக்கில்லை, ஐஷு! எனக்கு, கிரியைப் பாத்தா ஒரு ஃப்ரெண்டாத்தான் நினைக்கத் தோணுதே தவிர, வேற மாதிரி எண்ணமே வரலை. அதான் இவ்வளவு யோசிக்கிறேன்."

"ஏய்... நம்ம அப்பா, அம்மா எல்லாரும் எப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க? கல்யாணம் ஆனாக் காதல் தானா வந்திடப் போகுது! நானும் கிரிதரைப் பாத்திருக்கேன். சிவப்பா, நல்லாத் தானே இருப்பார்... ஓக்கேன்னு சொல்லுடி!"

ஐஸ்வர்யாவின் குரலில் ஆர்வம் இருந்தது.

பலத்த யோசனையுடன் கோவிலிலிருந்து திரும்பி வந்த தீக்ஷாவிடம், அவர்களின் வீட்டில் காத்திருந்த யசோதாவும் இதையே கூறினார்.

அவரிடம் மறுத்து ஒன்றும் கூறாமல் இதுபற்றி அப்பாவிடம் தான் பேசுவதாகக் கூறினாள் தீக்ஷா.

அன்று இரவின் தனிமையில் அமர்ந்து யோசித்தபோது, கேசவன் மறுமணம் செய்து கொள்ளாமல் தன்னுடைய நலனுக்காகவே எல்லாம் செய்து, அவருடைய வாழ்க்கையைத் தியாகம் செய்து தனக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பது, அவள் பிடிவாதத்தைத் தளரச் செய்வதாய்...

தன்னால் அவருக்குத் தர முடிந்த சந்தோஷம் இதுதான் என்றால், அதைச் செய்வதில் தவறில்லை என்றும் தோன்றியது.

மகிழ்ச்சி என்பது அவரவர் மனதைப் பொறுத்த விஷயமாய்! திருப்தியைத் தந்தெடுக்கும் மனதுக்கு, எப்போதுமே மகிழ்ச்சி இனிய வரமாகும் என்பதும் புரிந்தது.

மறுநாள் மாலையில் கம்பெனியிலிருந்து வீடு திரும்பிய கேசவனிடம், தன் சம்மதத்தைக் கூறி, அவருடைய விருப்பம் போல் செய்யச் சொன்னாள் தீக்ஷண்யா.

கேசவன், அதைக் கேட்டதும் மிகவும் மகிழ்ந்து போனார்.

* * *

**ம**று வாரமே, எளிமையாக நிச்சயதார்த்தம் நடத்த ஏற்பாடு செய்தனர்.

இரு பக்க உறவினர்களில் முக்கியமானவர்களுடன், ஐஸ்வர்யாவின் குடும்பத்தினரும் அழைக்கப்பட, அவள் வீட்டிலேயே ஃபங்ஷன் நடந்தது.



கிரிதர் பெரிய மலர்க்கொத்துடன் வந்திருந்தான்.

யசோதா அவளுக்கு வைர நெக்லஸ் ஒன்றைப் பரிசளித்தார்.

அன்று கிரியைப் பார்க்கும்போது, அவளுக்குள் புதிதாய் எந்த உணர்வும் எழவில்லை.

மனதில் தும்பிகள் சிறகடிக்கவில்லை. சிறு வயதிலிருந்தே பழகிய ஒரு தோழனாகவே அவனை நினைக்கத் தோன்றியது.

மனம், சலனங்களற்ற குளம் போல் எந்தப் பரபரப்புமின்றி அமைதியாய்...

காதல் எனும் ரசவாதம் ஒருவேளை, கல்யாணம் முடிந்தபின் வருமோ என்ற எண்ணம் மனதில் ஓட, சிரிப்பு வந்தது அவளுக்கு!

அடுத்த வாரத்தில் ஒரு நாள், தோழிகள் ட்ரீட் வேண்டும் என்று கேட்டதால், அனைவரும் ஐஸ்வர்யாவின் அப்பாவுடைய ஹோட்டலுக்குச் சென்றனர்.

ஒருவரை ஒருவர் கிண்டல் செய்தபடி தீக்ஷாவை கிரியுடன் இணைத்தும் பேசியபடி சாப்பிட்டு முடித்து, ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"என்னடி தீக்ஷா? மாப்பிள்ளையை எங்க கண்ணுலயே காட்ட மாட்டேங்கிறே? ஏன், நாங்க கொத்திட்டுப் போயிடுவோம்னு பயமா?" என்றாள் வள்ளி கிண்டலாக.

தீக்ஷாவும் புன்னகையுடன், "அப்பாடா! அப்படி நீ செஞ்சா எனக்கு ரொம்ப சந்தோஷம்! அப்பாவோட கம்பல்ஷனுக்காகத்தான், நான் சரின்னே சொல்லி இருக்

கேன்... நீ சொன்ன மாதிரி நடந்தா, நான் தப்பிச்சிடு வேன்'' என்றாள்.

அவளுடைய மனநிலை, ஐஸ்வர்யாவுக்கு மட்டும் புரிந்தது.

அவர்களுடைய செட்டிலேயே தீக்ஷண்யாவிற்குத் தான் ஆம்பிஷன்ஸ் அதிகம்!

ஆனால், அவள்தான் முதன் முதலாக திருமண பந்தத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறாள்.

''ஒரு நாள் அந்த கிரிதரைப் பார்த்து, உங்க உட்பி ஒய்ஃப் ரொம்பக் கோபக்காரி... பாத்து நடந்துக்கங் கன்னு நாங்கல்லாம் அட்வைஸ் பண்ணலாம்னு இருக் கோம்... உனக்கு ஒக்கேயா தீக்ஷா?'' குறும்புடன் கேட்டாள் நிர்மலா.

உடனே ஐஸ்வர்யா, ''ஏய்... அவளைப் பத்தி உனக்கு என்ன தெரியும்? தப்பைத் தப்புன்னு சொன்னா, அவ கோபக்காரியா?'' என்று பரிந்து வந்தாள்.

''விடு ஐஷு... எனக்கு ஒன்னும் பயமில்லை. வேணும்னா போய் சொல்லுங்க! கிரிக்கு என்னைப் பத்தி நல்லாத் தெரியும். நீங்க போய் சொல்லி அவன் கல்யாணத்தை நிறுத்தினா, அதை விடப் பெரிய நிம்மதி எனக்கு வேற ஒன்னும் இல்லை'' என்று கூறியபடி எழுந்தாள் தீக்ஷா.

தன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் பலிக்கப் போவதை யும், தானே அந்தக் கல்யாணத்தை நிறுத்தப் போவதை யும், அந்த நிமிடம் அவள் அறியவில்லை.



பிறகு, தோழிகளுடன் அவள் வெளியே வந்தபோது, வாசலின் அருகே வந்து கொண்டிருந்த கிரிதரும், அவன் அணைத்தபடி அழைத்து வந்த ஒரு பெண்ணும் தீக்ஷா வின் கண்களில் பட்டனர்.

மனம் சட்டென்று வறண்டு போய் அவள் விழிகளில் சிறு சிவப்பு படர ஆரம்பித்தது.

அந்தப் பெண்ணைப் பார்த்தாலே ஏதோ வித்யாசமாகத் தெரிந்தது.

ரிசப்ஷனுக்குச் சென்று அறைச் சாவியை வாங்கிச் சுழற்றியபடியே அவளுடன் கிரி லிப்டுக்குள் மறைந்த போது, மனம் உலைக்களமாய்..!

முகம் சிவந்து, இதயம் கோபத்தில் துடித்தது தீக்ஷண்யா விற்கு..! நம்பிக்கை துரோகம் புரியும் கிரியை நினைத்து நெஞ்சத்தில் கடும் புயலடிக்க ஆரம்பித்தது.

அப்போது அவளருகில் வந்தாள் ஐஸ்வர்யா.

''வாடி... போகலாம்!'' என்று நிமிர்ந்தவள், அவள் முகத் தின் சீற்றத்தையும், கண்களில் எரிந்த தீ ஜ்வாலையையும் கண்டு திடுக்கிட்டாள்.

உடனே திரும்பி அவள் காதருகில் குனிந்து ''என் னாச்சு தீக்ஷா.. ஏன் இப்படி நிக்கறே..?'' என்று மெல்ல உலுக்கினாள்.

கனவுலகிலிருந்து மீண்டவள் போல் விழித்தவள், ''நீ ஒரு நிமிஷம் இங்கேயே இரு!'' என்று கூறிவிட்டு மற்ற வர்களிடம் திரும்பினாள்.

''நானும் ஐஷுவும் ஒரு வேலையாப் போக வேண்டி இருக்கு... நீங்கல்லாம் கிளம்புங்க'' என்றாள் ஒரு வறட்டுப் புன்னகையுடன்.

"தேங்க்ஸ்டி தீக்ஷா... ஓகே! அப்ப நாங்க கிளம்பறோம்" என்று அவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு, ஐஸ்வர்யா விடம் தான் கிரியைப் பார்த்த விஷயத்தைப் பதைப்புடன் கூறினாள்.

உடனே, அவள் முகத்திலும் கோபத்தின் அறிகுறி தெரிந்தது.

அவர்கள் எந்த அறைக்குச் சென்றார்கள் என்று பார்த்து அவன் முகத்திரையைக் கிழிக்க வேண்டும் என்ற வேகம் வந்தது.

இருவரும் ரிசப்ஷனிஸ்டிடம் சென்று கிரியைப் பற்றி மெதுவாக விசாரித்தனர்.

அப்போதுதான் அவன் அங்கு அடிக்கடி வருபவ னென்றும், இன்று மிஸஸ் & மிஸ்டர். கிரிதர் என்ற பெயரி லேயே அறை எடுத்திருப்பதும், தெரிந்தது.

ஐஸ்வர்யா, முதலாளியின் மகள் என்பதால் ரிசப்ஷனில் இருந்த பெண்ணும் மறுக்க முடியாமல் விபரம் கூறினாள்.

உடனே அவன் தங்கி இருக்கும் அறை எண்ணைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இருவரும் அங்கு சென்றனர்.

அந்தத் தளத்தின் கோடியிலிருந்த அந்த அறையி லிருந்து, பேரர் கதவைத் திறந்து வெளியில் வந்து கொண் டிருந்தான்.

அந்த இடைவெளியில் உள்ளே தெரிந்த காட்சி, இருவரையும் விதிர்க்கச் செய்வதாய்...!

முன் ஹாலிலேயே அரை குறை ஆடையில் இருவருமே மது அருந்த ஆரம்பித்திருந்தனர்.



ஐஸ்வர்யா, பேரரைத் தனியே அழைத்து, தான் யார் என்ற விபரம் சொல்லிப் பேசியபோது, கிரிதரின் லீலை கள் வெட்ட வெளிச்சமாகின.

மாதத்தில் இருமுறையாவது இது போன்ற பெண் களுடன் வந்து தங்கிப் போவது கிரியின் வழக்கம் என் றான் அவன்.

கம்பளிப்பூச்சி தீண்டிய அருவெறுப்பில் உடல் கூசிக் குறுக நின்றிருந்த தீக்ஷாவை அழைத்துக்கொண்டு, கோபமாகக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள் ஐஷு.

அரைகுறை ஆடை அணிந்து, தன் மடியில் படுத்திருந்த அந்தப் பெண்ணைத் தள்ளிவிட்டு எழுந்து நின்ற கிரி, இருவரையும் பார்த்ததும், வெலவெலத்துப் போனான்.

"நான்... இவ என்னோட... ஃப்ரெண்ட்" என்று உளறிய படி நோக்கிய கிரி, "ப்ளீஸ் தீக்ஷண்யா! அப்பாகிட்ட சொல்லிடாதே... நான் என்னை மாத்திக்கறேன்" என்று கெஞ்சியது, அவள் கோபத்தை இன்னும் அதிகப் படுத்தியது.

அந்தப் பெண் தன் உடைகளை அள்ளி மறைத்துக் கொள்ள, தீக்ஷண்யா அவளிடம் ஒன்றுமே பேசாமல் வேகமாகத் திரும்பி வெளியே வந்தாள்.

மனதில் அவனைப் பற்றிய கணிப்பில் அருவெறுப்பு மட்டுமே மிஞ்சியிருக்க, கிரிக்கு அவள் பார்வை ஒன்றே போதுமானதாய்...!

அங்கிருந்து கிளம்பி ஐஸ்வர்யாவுடன் நேரே தன் வீட்டுக்குச் சென்றபோது, வழி எல்லாம் தீக்ஷாவின் மனம் தீயாய் தகித்துக் கொண்டிருந்தது.

தென்றலாய் இருந்த மனம், புயலாய் மாறி இருந்தது.

## 2



கேசவனிடம் எப்படி விஷயத்தைச் சொல்வது என்ற படபடப்போடு உள்ளே சென்ற தீக்ஷாவைச் சமாதானப் படுத்திய ஐஸ்வர்யா, அவரிடம் நடந்த முழு விபரத்தையும் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டவரின் முகம் பேயறைந்தாற் போல் ஆனது.

அவர் நிதானிக்கும் முன்பே, தன் பீரோவிலிருந்து வைர நெக்லஸை எடுத்த தீக்ஷண்யா, காரை எடுத்துக் கொண்டு வேகமாய் கிரியின் வீட்டுக்குச் சென்றாள்.

அவளைக் கண்டதுமே அன்புடன் வரவேற்ற யசோதாவைப் பார்த்தபோது மனதுக்குள் ஏதோ பிசைந்தது.

அவரைத் தனியே அழைத்து, எல்லா விபரங்களையும் கூறியவள், அந்த நகையைத் திருப்பிக் கொடுத்தாள்.

சிலையாய் சமைந்து உறைந்துபோய் கண்ணீருடன் நின்றிருந்தவருடைய முகத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், யாருக்காகவும் தன் வாழ்க்கையை பலி கொடுக்க அவள் தயாராக இல்லை.

யசோதா அவளிடம் "சாரிம்மா! கிரியைப் பத்தி நான் கேள்விப்பட்டது எதுவுமே சரியில்லைன்னாலும், நீ மனைவியா வந்தா அவன் திருந்திடுவான்னு நான் நினைச்சேம்மா! நீ தைரியமானவ... அவனை உன்னால தான் திருத்த முடியும்னு தோணிச்சி! ஆனா, பெண்கள் விஷயத்துல அவன் இப்படின்னு சத்தியமா எனக்குத் தெரியாதும்மா!" என்று கண்ணீர் விட ஆரம்பித்தார்.



"நான் கிளம்பறேன் ஆன்ட்டி! கிரியைத் திருத்தறதுக்கு என்ன வழின்னு பார்த்து, அவரை முதல்லே திருத்துங்க."

யசோதாவின் கையைப் பற்றியபடி ஆறுதலாகக் கூறியபோது, அவருக்கு அவளை நினைத்தால் மிகவும் பெருமையாய்...!

அவள் கையை விடாமல் பிடித்துக் கொண்டார்.

"உன்கிட்ட ஒரு கோரிக்கை தீக்ஷா! கிரியைப் பத்தி வெளியே யார் கிட்டயும் தயவு செய்து சொல்ல வேணாம்... நானே அவன் கிட்டப் பேசறேன்."

அவர் முகம் ஏதோ யாசகம் கேட்பது போல் தர்ம சங்கடமாக இருந்தது.

ஒரு பெருமூச்சுடன், "சத்தியமா இது பத்தி நான் யார் கிட்டயும் சொல்லமாட்டேன் ஆன்ட்டி... நீங்க கவலைப் படாதீங்க" என்று அவள் கூறியவுடன், அவர் விழிகளிலும் சிறு தெளிவு எட்டிப் பார்த்தது.

கண்ணீருடன் அவளை வழியனுப்பிவிட்டு, கிரியின் வருகைக்காகக் கோபத்துடன் காத்திருந்தார் யசோதா.

* * *

மறுநாள் காலையில்தான், திருமணம் நின்று போன விஷயமே எல்லோருக்கும் தெரிய வந்தது.

முதல் நாளிரவு அவர் வீட்டுக்கு வரத் தாமதமாகி விட்டதால், காலையில் கணவரிடம் பேசினார் யசோதா.

தன் மகன் மீதும் தவறு இல்லாமல், தீக்ஷாவையும் விட்டுக் கொடுக்காமல் விபரத்தை மெதுவாகக் கூறினார்.

அவர் உடனே கிரியை வரச்சொல்லிக் கேட்டபோது, அவன் நடந்ததை மறைத்து தன் மேல் தவறில்லாதபடி கதையையே மாற்ற ஆரம்பித்தான்.

மெதுவாக, "அந்த நீக்ஷாவுக்குக் கல்யாணத்துல இஷ்டமில்லையாம்ப்பா! அவளுக்கு வேலை பாக்கணும், சம்பாதிக்கணும்... பெரிய 'கேரீர் விமன்' ஆகணும் அப்படின்னு நிறைய ஆம்பிஷன்ஸ் இருக்காம்... அதனால நிச்சயதார்த்தத்தை நிறுத்திட்டாப்பா!" உண்மையை மறைத்துப் பொய் கூறினான்.

யசோதாவிற்குக் குற்ற உணர்வு முள்ளாய் உறுத்த, அங்கிருந்து வேகமாக எழுந்து சென்று விட்டார்.

தன் கையாலாகாத்தனத்தின் மீது அவருக்கே கோபம் வர, நேற்று நடந்தது உடனே நினைவுக்கு வந்தது.

இரவு கிரி வீட்டுக்கு வந்தவுடனே கேட்டபோது, தான் திருத்தி விடுவதாகவும், அப்பாவிடம் மட்டும் உண்மையைக் கூற வேண்டாம் என்றும் கெஞ்சிக் கூத்தாடிச் சம்மதிக்க வைத்து, அவர் மனதைத் தன் வசம் திருப்பி இருந்தான்.

அங்கு நீக்ஷாவின் வீட்டில், கேசவனுக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை.

தங்களுடைய பார்ட்னர்ஷிப்பிற்கு இதனால் பங்கம் வந்து விடுமோ என்று, மனதின் ஓரத்தில் ஒரு அச்சம் கிளர்ந்து எழுந்தது.

அதே யோசனையுடனும், தான் அவசரப்பட்டு முடி வெடுத்து விட்டோமோ என்ற குற்ற உணர்வுடனும் அவர் அமர்ந்திருந்தபோது, போன் ஒலித்தது.

கேசவன் எடுத்ததுமே, ஈஸ்வரனின் குரல், தாங்க முடியாத கோபத்துடன் கேட்டது.



தன் அறையிலிருந்த கார்ட்லெஸ்ஸை எடுத்ததால், நீக்ஷாவும் அதைக் கேட்க நேர்ந்தது.

கோபத்துடன், இன்றே தன் பார்ட்னர்ஷிப்பைக் கம் பெனியிலிருந்து விலக்கிக் கொள்வதாக அவர் கூறியபோது, அவள் இதழ்களில் கசந்த விரக்திப் புன்முறுவல் ஒன்று கசிந்தது.

ஆனால், கேசவனின் மௌனம் அவளை வருத்தத்தில் ஆழ்த்துவதாய்...!

இன்று அவர் கம்பெனிக்கும் செல்லவில்லை... தன்னால் முடிந்த உதவியை, அவருக்குச் செய்து, கம்பெனியைத் தொடர்ந்து நடத்த உதவ வேண்டும் என்ற உறுதி அவ ளுக்குள் எழுந்தது.

* * *

**பா**ல்கனிக்குச் சென்றபோது, மழை பெய்து கொண் டிருந்தது.

அவளுக்காகவே, வானம் சிந்திய கண்ணீராய், மழையைப் பார்த்தபோது தோன்றியது.

வான் தெளித்தும், மண் தெரியாத பச்சைப் பட்டு விரிப்பாய், உதிர்ந்த இலைகள்!

தோட்டத்தையே பளிச்சென்று பசுமையாக்கி இருந்தது மழை!

'இயற்கையைவிட இனிமையான கரு உண்டோ கவிதைக்கு' என்று தோன்ற... மனம் இயற்கையில் ஒன்றி, சிறிது நேரத்தில் இயல்பானது.

கேசவன், அந்த வாரமே வெளியில் பணம் ஏற்பாடு செய்து, சில சொத்துக்களை விற்று, ஈஸ்வரனுக்குச் சேர வேண்டிய பாகத்தைப் பிரித்துக் கொடுத்தார்.

ஈஸ்வரன் விலகியவுடன், கம்பெனி ஊழியர்கள் சிலரும் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள, புதிய கடன்களும் சேர்ந்து அவரை மூச்சு முட்டச் செய்தன.

தான், இனி கம்பெனியை வெற்றிகரமாக நடத்த முடியுமா என்ற கேசவனுக்குச் சந்தேகம் வந்தது.

மனதளவில் சோர்ந்து போனவர், வேறு யாரிடமாவது கம்பெனியைக் கொடுத்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

நண்பர்களிடமும் சொல்லி வைத்தவருக்கு, தான் ஓய்வெடுத்துக் கொள்ளும் நேரம் வந்து விட்டது போல் தோன்றியது... மனம் மிகவும் ஓய்ந்து போயிருந்தது!

ஒரு நண்பர், அவர்களுடைய நிறுவனம் விலைக்கு வருவது பற்றி ஈஸ்வரனிடமே கூறியபோது, திரும்பவும் அதை வாங்குவதில் அவருக்கு உடன்பாடு இல்லை.

அப்போதுதான், தன் அண்ணன் கதிரேசனின் நினைவு வந்தது அவருக்கு!

சென்னையிலிருக்கும் கதிரேசன், அங்கு ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி நடத்தி வந்தார்.

அவருடைய மகன் வீரேந்தர், எம்.ஆர்க் முடித்துவிட்டு ஆர்க்கிடெக்ட்டாக இருந்தான்.

கோவையில் அவனுக்கு ஒரு புது யூனிட் ஆரம்பிக்க வேண்டுமென்று அவர் ஒருமுறை கூறிக் கொண்டிருந்தது, ஈஸ்வரனுக்கு நினைவு வந்தது.



அன்றே போனில் தன் அண்ணனுடன் பேசினார்.

கோயம்புத்தூருக்கு வரும்போது எல்லாம், தம்பியின் பார்ட்னர் என்ற முறையில் கேசவனிடம் அவருக்கு நல்ல நட்பிருந்தது.

தொழில் முறையில் எத்தனையோ முறை [illegible] அவருடன் சென்றதும், நிச்சயதார்த்தத்தன்று பேசிக் கொண்டிருந்ததும், இன்று நினைவுக்கு வந்தன.

தானே இது பற்றி கேசவனிடம் பேசுவதாகக் கூறி விட்டு, கிரியைப் பற்றி விசாரித்துவிட்டு வைத்தார்.

அந்தப் பெண் தீக்ஷன்யா திருமணத்தை ஏன் நிறுத்தினாள் என்ற கேள்விக்குறி அவர் மனதில் எழுந்தது.

உடனே, தன் மகன் வீரேந்தர் திருமணம் என்ற ஒரு சடங்கையே வெறுப்பதும், அவர் நினைவுக்கு வந்தது.

தன் வாழ்க்கையில் நடந்த ஒரு மோசமான சம்பவத்தினால், தன் மகனின் வாழ்க்கையும் கேள்விக் குறியாகி விடுமோ என்ற பயமும், அவருக்குள் சோகத்தை விளைத்தன.

ஒரு காலத்தில் தானும் ஒரு பெண்ணால் பாதிக்கப்பட்டவன் என்ற முறையில், கிரிக்காக வருத்தப்பட்டார் கதிரேசன்.

வீரேந்தர் வந்தவுடன், அந்தக் கம்பெனியைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்தபடி காத்திருந்தார்.

* * *

கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு வெளியே வந்தவர், படியேறி வந்து கொண்டிருந்த மகன் வீரேந்தரின் கம்பீரத்தையும், அழகையும் மனதிற்குள்ளேயே ரசித்தார்.

கம்பீரமாய், அளவான உடலமைப்புடன், ஆறடிக்கும் மேல், மாநிறமாக, செதுக்கியது போன்ற முகத்தில் கூரிய பார்வையுடன் ஆண்மையின் இலக்கணமாக இருக்கும், தன் மகனைக் கண்டால், எப்போதுமே பெருமை கதிரேசனுக்கு..!

தனக்காகத் தந்தை வாசலிலேயே காத்து நிற்பதைக் கண்ட வீரேந்தர் விரைந்து அவரிடம் வந்தான்.

"என்னப்பா... ஏதாவது இம்பார்டண்ட் நியூஸா...? வாசல்லயே வெயிட் பண்றீங்க!" ஆர்வத்துடன் கேட்டான்.

"ஆமாம் வீரேன்! உனக்கு, கோவையிலே ஒரு புது யூனிட் ஆரம்பிக்கலாமனு ப்ளான் போட்டிருந்தோம் இல்லையா? இப்பதான், ஈஸ்வரன் பேசினான். அவன் கம்பெனியே விலைக்கு வருதாம்... டேக் ஓவர் பண்ணிக்க நாம ரெடியா இருந்தா, கேசவன் கிட்டப் பேசச் சொன்னான்."

"ஏம்ப்பா... என்னாச்சி? ரெண்டு பேரும் சம்மந்தியா வேற ஆகப் போறாங்க. இப்பப் போய் ஏன் விக்கணும்?" என்றான் கேள்வியாக!

"அதில்லப்பா... கிரிக்கு நிச்சயம் பண்ணி இருந்த கல்யாணம் நின்னுடுச்சி... அதனால தொழில்லயும் ரெண்டு பேரும் பிரிஞ்சிட்டாங்க." யோசனையாகக் கூறினார்.

"யாராவது ஒருத்தர் அதை ரன் பண்ண வேண்டியது தானே...? சித்தப்பா பிரிஞ்சிட்டா என்ன? கேசவ் அங்கிளாலே மேனேஜ் பண்ண முடியாதா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்... அதானே இப்படி முடிவெடுத்திருக்காங்க! அத விடு... நாம ஏன் அதை டேக் ஓவர் பண்ணக்கூடாது?"



அவனுடைய முடிவைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம், அவர் குரலில் தெரிந்தது.

வீரேந்தர் யோசனையுடன், "கிரியோட எங்கேஜ்மெண்டுக்குத் தான், நான் வர முடியலை... டெல்லிக்குப் போக வேண்டியதாப் போச்சு...! கல்யாணத்துக்குக் கட்டாயம் போகணும்னு நினைச்சேன்... ஏன்ப்பா கல்யாணம் நின்னு போச்சு?" என்று கேட்டான்.

"காரணம் தெரியலைப்பா...! ஆனா, அந்தப் பொண்ணு தான் கல்யாணத்தை நிறுத்திட்டதா, ஈஸ்வரன் சொன்னான். என்ன காரணம்னு கேட்டு அவனை நோகடிக்க வேணாம்னு தான், நானும் கேக்காம விட்டுட்டேன்" என்றபோது, அவர் குரலிலும் வருத்தம் தெரிந்தது.

"ஷிட்...!" தன் கையை மேஜை மீது அழுந்தக் குத்தியவன், கிரிக்காக மிகவும் பரிதாபப் பட்டான்.

பெண்கள் என்றாலே சிறிதும் மதிப்பில்லாத அவனுக்கு, அந்த நிமிடமே முகம் தெரியாத அந்தப் பெண்ணின் மேல், ஏனோ தாங்க முடியாத வெறுப்பு வந்தது.

பெண்கள் என்றாலே, ஆண்களை ஏமாற்றும் மாயக்காரிகளோவென்றும் தோன்றியது... உள்ளே மனம் எரிமலையாய் கனன்றது.

## 3



அந்த வாரமே, கதிரேசன் கேசவனிடம் பேசினார். தானே அவருடைய கம்பெனியை டேக் ஓவர் செய்து கொள்வதாகக் கூறினார்!

அடுத்த வாரமே, நேரில் வந்து மதிப்பீடு செய்வதாகக் கூறியவர், கேசவனிடம் நிச்சயதார்த்தம் நின்று போனதைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை.

கதிரேசன் கூறியதைப் போல், மறு வாரமே இருவரும் கோவைக்கு வந்தனர்.

கம்பெனியின் அசையும், அசையா சொத்துகள், மெட்டீரியல்ஸ், நடந்து கொண்டிருக்கும் வேலைகள், எல்லாவற்றையும் மேற்பார்வை செய்து, மதிப்பீடும் முடிந்து கேசவனிடம் பேசினர்.

ஒரு வாரத்தில் எல்லாப் பணிகளும் முடிந்து தொகையும் கேசவனுக்குத் திருப்தியாக இருந்ததால் பேசி முடிக்கப் பட்டது.

கதிரேசன், மறு வாரமே பணத்தை ஏற்பாடு செய்து கேசவனுக்கு செட்டில் செய்தார்.

அவர் சென்னைக்குக் கிளம்புவதற்கு முன்பாக... பழைய நட்பின் காரணமாக... ஒரு நாள் அவர்களைத் தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தார் கேசவன்.

முதலில் தந்தையிடம் மறுத்த வீரேந்தர், கிரியை மணக்க மறுத்த அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்றே அங்கு செல்ல ஒத்துக் கொண்டான்.

அன்று, கேசவனின் வீட்டில் விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வீடு முழுவதும் சமையலின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்க, சமையல்காரர் தன் நளபாகத்தைச் சமையலில் காட்டியிருந்தார்.



இரவு ஏழு மணிக்கு வருவதாகக் கதிரேசன் கூறியிருந்ததால், ஆறரைக்கே தயாராகி ஹாலில் காத்திருந்தார், கேசவன்.

தீக்ஷாவும் ஆகாய நீல வண்ணத்தில் மைசூர் கிரேப் அணிந்து பொருத்தமாகக் காதிலும் கழுத்திலும் முத்துக்களால் செய்த நகைகள் மின்னலிட, சித்திரப் பாவை போல் காட்சியளித்தாள்.

* * *

**வா**சலில் கார் வரும் சப்தம் கேட்டு, விரைந்து வாசலுக்குச் சென்ற கேசவன் புன்னகையுடன் அவர்களிருவரையும் வரவேற்றார்.

சிறிது நேரம் கழித்து, ஆரஞ்சு ஜூஸுடன் வந்த தீக்ஷா அவர்களுக்கு வணக்கம் கூறிவிட்டு இருவருக்கும் முதலில் பழரசத்தை அளித்தாள்.

அவளைத் தன்னருகில் அமர்த்திக் கொண்ட கேசவன், அவளை இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

வீரேந்தரின் விழிகள், அவள் மீது கோபத்துடன் மோதித் தெறித்தன.

ஐந்தரை அடி உயரத்தில் கொடியிடையுடன், தந்த நிறத்தில் அழகாகப் பேசும் விழிகளுடன், காந்தாரச் சிற்பம் போல் அம்சமாக இருந்தவளை அவன் விழிகள் கூர்மையுடன் அளந்தன.

தான் மிகவும் அழகாக இருக்கிற திமிர்தான், மற்றவர்களை மதிக்காமல் அவளை ஆட்டிப் படைக்கிறதோ வென்ற கோபம் கூட வந்தது வீரேந்தருக்கு...!

எவ்வளவு திமிர் இருந்தால், இவள் தன் தம்பியை அவமானப் படுத்தியிருப்பாள் என்ற நினைவில், முகம் பாறையாக இறுகியது.

தீக்ஷாவோ, அவனைப் பற்றி வேறு விதமாக நினைத்துக் கொண்டிருந்தாள்.

இதுவரை அவளைப் பார்த்ததுமே, எல்லா ஆண்களின் பார்வையிலும் ஒரு வித சுவாரசியம் மின்னலாகத் தெரிவதை அவள் கவனித்திருக்கிறாள்.

பலர் கண்கள், பிரமிப்புடன் ஸ்தம்பித்து நின்று விடும்... அவளுடைய முகத்திலிருந்து விலக மனமின்றி உறைந்து போகும்!

ஆனால், வீரேன் வித்தியாசமானவனாக இருந்தான்.

முதலில் அவன் கண்களில் தெரிவதுபோல் தோன்றிய சிறு ஆர்வமும் கூட மறைந்து, ஒரு அலட்சிய பாவத்துடன் அவன் முகம் இறுகியதும் கண்டு, அவள் மனம் யோசனை யானது.

அவர்களிருவரும், ஒருவரை ஒருவர் விழிகளாலேயே கூர்மையுடன் ஆராய்ந்து கொண்டிருந்தபோது, கேசவன் தன் மகளைப் பற்றி பெருமையாகக் கூற ஆரம்பித்தார்.

புன்னகையுடன் இருவரையும் நோக்கியவள், அந்த நொடியே வீரேந்தர் வேண்டா வெறுப்பாக உதடு பிதுக்கிப் புன்னகைப்பதையும் உணர்ந்து கொண்டாள்.

'இவன் ஏன் இப்படி இருக்கிறான்...? இங்கு வந்ததே ஒருவேளை அவனுக்குப் பிடிக்கவில்லையோ' என்ற எண்ணம் வர யோசனையுடன் நிமிர்ந்தபோது கதிரேசன் அவளைப் பார்த்துக் கனிவாகப் புன்னகைத்தார்.

பிறகு, "என்னம்மா உன்னோட ஃப்யூச்சர் ப்ளான்?" என்று கேட்டார்.



"'பி.இ.' முடிச்சிட்டு, கம்ப்யூட்டர் கோர்ஸும் படிச்சிருக்கேன். மேல படிக்கலாம்னு ஒரு ஆசை இருக்கு அங்கிள்..." மெதுவாகக் கூறினாள் அவள்.

"வீரேன் கூட எம்.ஆர்க் படிச்சிருக்கான்! படிக்கிற ஆர்வம் இருந்தா, அதைத் தடை செய்யக் கூடாதும்மா... மேலே படி!" என்றார் அவர்.

பிறகு, பேச்சு பொதுவான விஷயங்களில் சென்று சாப்பிடும் நேரம் வந்ததும், அனைவரும் டைனிங் ஹாலுக்குச் சென்றனர்.

முதலில் எல்லாவற்றையும் பரிமாறிவிட்டுத் தானும் அமர்ந்து கொண்டாள் தீக்ஷா.

பிறகு, சமையல்காரர் பரிமாறுவதில் பொறுப்பேற்க சாப்பிட்டுக் கொண்டிருந்த கேசவன், கதிரேசனிடம் திரும்பினார்.

"தீக்ஷாவுக்கு நம்ம கம்பெனியிலேயே இஞ்சினியரா வேலை பாக்கணும்னு ரொம்ப ஆசை... ஆனா இப்ப வேற கம்பெனிக்கு அப்ளை பண்ணி இருக்கா!" தர்ம சங்கடத்துடன் கூறினார்.

உடனே வியப்புடன் நிமிர்ந்தார் கதிரேசன்.

"என்னம்மா... நான் கேட்டப்ப சொல்லலேயில்லை... ஏன் கேசவ்...? தீக்ஷண்யா நம்ம கம்பெனியிலேயே வொர்க் பண்ணட்டுமே! எப்படியும் புதுசா ஒரு அசிஸ்டெண்டை வீரேனுக்கு ரெக்ரூட் பண்ண வேண்டியிருக்கும்... அது நம்ம பொண்ணாவே இருந்தா இன்னும் பெட்டராச்சே!" என்றவர் மகளிடம் திரும்பினார்.

"நீ என்ன சொல்றே வீரேன்...?" என்றபோது முகத்தில் எந்த உணர்ச்சியுமின்றி நிமிர்ந்தான் அவன்.

"'பயோடேட்டா' எடுத்துட்டு ஆபீசுக்கு வரச் சொல்லுங்கப்பா... நான் பாத்துட்டுச் சொல்றேன்... அப்புறமா ஜாயின் பண்ணலாம்" என்றான் அழுத்தமான குரலில்.

"அப்புறம் என்ன கேசு? இப்பவே சொல்றேன்... உன்னோட பொண்ணு, வேலைக்கான உத்தரவைக் கையில வாங்கின மாதிரித்தான்! என்னம்மா நீக்ஷண்யா, உனக்கு சந்தோஷம்தானே? எனக்குத்தான் ஒரே ஒரு வருத்தம்! அந்தக் காலத்துல இவ்வளவு அழகான செகரட்டரி எனக்குக் கிடைச்சதில்லை... நான் ரொம்ப அன்லக்கி!" தமாஷாகக் கூறிவிட்டுச் சிரித்தார்.

அப்போது நீக்ஷாவின் விழிகள் உயர்ந்து வீரேனை நோக்கின.

அவனுடைய உதடுகள் முணுமுணுத்ததை உடனே அவள் விழிகள் வாசித்து அறிந்தன.

"பாம்பு கூடத்தான், இவளை மாதிரியே அழகா இருக்கும்.. ஆனா விஷம் இருக்குமே...!"

அவனுடைய உதட்டசைவு கூறியபோது, அவள் மனம் விதிர்த்துப் போய் படபடத்தது... சுடும் நிலவாய் முகம் தகித்தது!

இவனுக்கு ஏன் தன் மேல் இவ்வளவு வெறுப்பு என்று யோசித்தவளுக்கு, அதற்கான காரணம் மட்டும் சரியாக விளங்கவில்லை.

அவனும், கதிரேசனும் குணத்தில் எதிரெதிர் துருவங்களோ என்று தோன்றியது.

அவர்களிருவரும் நாளையே சென்னைக்குத் திரும்புவதாகவும், அடுத்த ஞாயிறு வீரேன் மட்டும் திரும்பி வருவானென்றும் கதிரேசன் கூறினார்.



கம்பெனியைப் பற்றிய பல விஷயங்களைக் கலந்தாலோசித்த கதிரேசன், வீரேந்தர் திரும்பி வந்ததும் திங்களன்று அவளைக் கம்பெனிக்கு வரச் சொன்னார்.

பிறகு, அவர்கள் இருவரும் விடைபெற்றுச் சென்றனர்.

* * *

அவர்கள் கிளம்பிய உடனே, அப்பாவைப் பிடித்துக் கொண்டாள் அவள்.

"ஏன்ப்பா இப்படிச் செஞ்சீங்க... நம்ம கம்பெனியா இருந்தப்ப நான் ஆசைப் பட்டேன்... இப்பப் போய்... அதுவும் அந்த வீரேந்தரைப் பாத்தாலே எனக்குப் பிடிக்கலை! அங்கிள் நல்லவர்தான்... இல்லேங்கலே..! ஆனா அந்த வீரேனைப் பாத்தா சரியான முரடு மாதிரித் தெரியுது... எனக்கு அவர்கிட்ட வேலை செய்யப் பிடிக்கலைப்பா!" என்றாள் விருப்பமின்றி!

காரில் திரும்பிச் செல்லும்போது கதிரேசனும் நீக்ஷாவைப் பற்றித்தான் பேசினார்.

"அந்தப் பொண்ணைப் பாத்தாலே மஹாலெக்ஷ்மி மாதிரி இருக்கு... நல்ல பொண்ணாவும் தெரியுது... கிரிக்குத் தான் பாவம், அதிர்ஷ்டம் இல்லை."

"அப்பா... உங்களுக்கு வயசாயிடுச்சி! அதான், கண் பார்வை சரியில்லை. எனக்கென்னவோ அவளைப் பாத்தாலே, படமெடுக்கற நல்ல பாம்பு மாதிரி விஷக் கவர்ச்சி உள்ளவளாத் தோணுது" யோசனையுடன் கூறினான் வீரேன்.

"வீரேன்... அப்படியெல்லாம் பேசாதே! சரியான காரணமில்லாம அந்தப் பொண்ணு கல்யாணத்தை நிறுத்தியிருக்க மாட்டான்னு எனக்குத் தோணுது."

மறுத்து எதுவும் கூற மனமின்றி, பேசாமல் காரை ஓட்டினான் வீரேந்தர்.

அவன் மனதில் கோபமெனும் நெருப்பு சூறாவளியாய் சுழன்று கொண்டிருந்தது.

வெளியே, இரவின் கண்ணீராய் பனிமழை பொழிய ஆரம்பித்திருந்தது.

அங்கு நீக்ஷாவின் வீட்டில் கேசவனும், வீரேனுக்குப் பரிந்து பேசிக் கொண்டிருந்தார்.

"ஒருத்தரோட பழகிப் பாக்காம அவங்களைப் பத்தித் தப்பாப் பேசக் கூடாதும்மா! நம்ம கம்பெனியில வேலை செய்யறதுதான் உனக்கு நல்லது. உன்னை வெளியிடத்துக்கு வேலைக்கு அனுப்பிட்டு என்னால நிம்மதியா இருக்க முடியாது... அதுவே நம்ம கம்பெனின்னா, . பழைய முதலாளி மகள்னு எல்லாருக்கும் ஒரு பயம் இருக்கும். பாசமாப் பழகுவாங்க! அதனாலதான் நான் இந்த முடிவெடுத்தேன்."

"நீங்க சொல்றதெல்லாம் சரிதான்... ஆனா அந்த வீரேந்தரை எனக்குப் பிடிக்கலையேப்பா!" என்றாள் நீக்ஷா சிணுங்கலாக!

"இதுலே என்னம்மா இருக்கு. நீ என்ன... அவரைக் கல்யாணமா பண்ணிக்கப் போறே? பிடிக்குது, பிடிக்கலைங்கறதுக்கு! நீ அவரோட அசிஸ்டெண்டா வேலை பாக்கப் போறே... அவ்வளவுதானே! முதல்ல ஜாயின் பண்ணு... பிடிக்கலைன்னா அப்புறம் பாத்துக்கலாம்" முடிவாகக் கூறினார் அவர்.

"கல்யாணமா... அதுவும் இவனுடனா..." மனம் உடனே கசந்தது.



இவனைக் கல்யாணம் செய்து கொள்பவளை எண்ணி உள்ளத்தில் முட்கள் பூத்தன.

மனம் நெருடலுடன் அவன் வார்த்தைகளைப் பதியன் போட்டது.

* * *

அந்த வாரத்தில் ஒரு நாள், அவள் ஐஸ்வர்யாவின் வீட்டிற்குச் சென்று பேசிக் கொண்டிருந்தபோது, எல்லா விஷயங்களையும் அவளிடம் கூறினாள் நீக்ஷண்யா.

"என்னைப் பாத்தவுடனே அந்த வீரேன் காரணமில்லாமக் கோபப்பட்ட மாதிரித் தோணுச்சு... ஆனா இப்ப யோசிக்கிறப்ப, ஒரு வேளை நான் கிரியை மறுத்துக் கல்யாணத்தை நிறுத்தினதாலதான், அவருக்குக் கோபம் வந்திருக்குமோன்னு தோணுது ஐஷு...!"

"இருக்கலாம்! அவரோட கஸின் பிரதர் தானே கிரி...? ஆனா, இந்த வீரேந்தர், ஏன் உன் நிச்சயதார்த்தத்துக்கு வரவே இல்லை?" யோசனையுடன் கேட்டாள் ஐஷூ.

"தெரியலை..." என்று உதடுகளைச் சுழித்தாள் நீக்ஷா.

"பார்ப்போம்... அப்பா சொல்ற மாதிரி கொஞ்ச நாள் வேலை செஞ்சு பாக்கலாம். பிடிக்கலைன்னா விட்டுட வேண்டியதுதான்!" சிறு முறுவலுடன் கூறினாள்.

அந்த வாரம் முழுவதும் எந்த மாற்றமுமின்றி சென்றது.

ஞாயிறன்று, கேசவன் வீரேனுக்குப் போன் செய்து பேசினார்.

மறுநாள், கம்பெனியில் தான் பொறுப்பை ஏற்கப் போவதால், நீக்ஷாவைக் காலையிலேயே கம்பெனிக்கு வரச் சொன்னான் வீரேன்.

அன்றிரவு, உறக்கம் வராமல் படுத்திருந்த தீக்ஷா வுக்கு, மனதில் வீசிய தென்றல் மீண்டும் வீரேனை நினைவு படுத்தியது. அவனுடைய அலட்சியமும் கர்வமுமே அவனை வித்தியாசப் படுத்துகிறதோ என்ற உணர்வுடன் இமைகள் மெல்லச் செருகின.

விழிகள் உறங்க, கனவென்ற போர்வை இதமாய் அவளைப் போர்த்தியது.

அங்கும் தன் கோப விழிகளால் அவளை விதிர்க்க வைத்தான் அவன்!

## 4



திங்கட்கிழமை காலை, தன் பயோ டேட்டாவுடன் கம்பெனிக்குச் சென் றாள் தீக்ஷா.

ப்யூனிலிருந்து மேனேஜர் வரை, அவளைக் கண்டதும் வாழ்த்துச் சொல்லிவிட்டு, அப்பாவின் நலம் விசாரித்து மகிழ்ந்தனர்.

எல்லோரிடமும் அன்பாகப் பேசிவிட்டு, வீரேந்தரின் அறைக்குள் சென்றாள் அவள்.

கேசவனின் பழைய செக்ரட்டரி தேவியும், புன்னகை யுடன் வரவேற்று, இண்டர்காமில் தீக்ஷா வந்திருப்பதாகப் பாஸிடம் கூறினாள்.

அவன் என்ன சொன்னானோ, "மேடம்! நீங்க உள்ளே போங்க... பாஸ் உங்களை வரச் சொன்னார்" என்றாள்.

அவனுடைய அறைக் கதவைத் தட்டிவிட்டு, உள்ளே நுழைந்தாள் தீக்ஷா.

அவளை நிமிர்ந்து பார்த்தவன் "வா" என்பது போலத் தலையசைத்துவிட்டு உடனே ஃபைலில் மூழ்கினான்.



மெதுவாக அவன் எதிரில் சென்று அமர்ந்தவள், தன்னைப் பற்றிய விபரங்கள் அடங்கிய ஃபைலை அவன் முன்பாக வைத்தாள்.

அலட்சியமாக அதைப் பார்வையிட்டவனுக்கு, அவ ளுடைய மதிப்பெண்களைக் கண்டதும், மனதினுள் ஆச் சர்யம் வருவதாய்!

எல்லாவற்றிலும் டிஸ்டிங்ஷனில் தேறி இருந்தவள், யுனிவர்ஸிடியில் கோல்ட் மெடலும் வாங்கியிருந்தாள்!

திமிர் அதிகமாக இருந்தாலும், புத்திசாலித்தனமும் கூடவே இருக்கிறதேயென்று அதிசயப்பட்டான் அவன்.

மனதிற்குள் மெச்சிக்கொண்டே, உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன், மறுநாளே வேலையில் சேரச் சொன்னவன், போனில் அடுத்த அறையை அவளுக்காகத் தயார் செய்யும்படி தேவியிடம் கூறினான்.

"ம்...! நாளைக்குக் காலையில் பார்க்கலாம்."

வீரேந்தர் கூறியதும் எழுந்த தீக்ஷா, "தேங்க்யூ ஸார்!" என்று கூறிவிட்டு வெளியே வந்தாள்.

தேவியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டுப் பிறகு வீட்டுக்குச் சென்றவளுக்கு, அவன் பார்வைகள் புதிராய்... மனதைப் பலவீனப்படுத்துவதாய்..!

* * *

மறுநாள் காலையில் ஒன்பது மணிக்கு முன்பாகவே கம்பெனிக்கு வந்து விட்டாள் தீக்ஷா.

ஆனால், அதற்கு முன்பே, வீரேந்தர் வந்திருந்தான். தேவி இன்னும் வந்திருக்கவில்லை.

அவனுடைய அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தபோது, அவன் ஏதோ எழுதிக் கொண்டிருக்க, மனதில் அவனைப் பற்றி ஆயிரம் குறைகள் தோன்றி னாலும், அவனுடைய நேரந்தவறாமை மட்டும் மிகவும் பிடித்திருந்தது.

அவளை நிமிர்ந்து பார்த்தவன், "வெல்கம் டு மை ஆஃபீஸ்" என்று கூறிவிட்டு, மீண்டும் தன் வேலையில் ஆழ்ந்தான்.

தீக்ஷா, தன் அறைக்குச் சென்று கம்ப்யூட்டரில் ஆழ்ந்த படி, தேவிக்காகக் காத்திருந்தாள்.

அவள் வந்தவுடன், இருவருக்கும் அன்று முடிக்க வேண்டிய வேலைகளைக் கூறினாள் வீரேந்தர்.

தீக்ஷா, புதிதாக அனுப்ப வேண்டிய கொட்டேஷன் களைத் தயார் செய்து, அவன் பார்வைக்கு அனுப்பி விட்டு, சில புதிய டிசைன்களை கம்ப்யூட்டரில் போட்டுப் பார்த்து "ஸ்டோர்" செய்து வைத்தாள்.

தேவியிடம் சென்று, மெட்டீரியல்ஸ் லிஸ்ட், பேமெண்ட் ஸ்லிப், எல்லாவற்றையும் கேட்டுச் சரி பார்த்து, அவன் கையெழுத்துக்காக எடுத்து வைத்தவளுக்கு, அன்று முழுவதும் வேலை சரியாக இருந்தது.

மாலை, கைகளைச் சோம்பல் முறிக்கும்போதுதான், அன்று, தான் எவ்வளவு எழுதினோம் என்று தெரிந்தது.

அப்பாவிடம் எல்லாம் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

வீரேந்தரின் அறைக்குச் சென்று, அவனிடம் கூறி விட்டுக் கிளம்பலாம் என்று போனால், அவனும் எல்லாவற்றையும் முடித்துக் கிளம்பிக் கொண்டிருந்தான்.



அவளைக் கண்டதும் இடுங்கிய கண்களுடன், "என்ன?... முதல் நாள் வேலை எப்படி இருந்தது? ஏன்டா வேலைக்குச் சேர்ந்தோம்னு இருக்கா?.. அப்படியே ஓடிப்போயிடலாம்னு தோணுமே? எனக்குத் தெரியும்! உடம்பு வணங்கி வேலை செய்யறதுன்னா, கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும்" என்றான் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி, எகத்தாளமாக!

உடனே "இல்லை! எனக்கு வேலை ரொம்பப் பிடிச்சிருக்கு; ரொம்ப சேலஞ்சிங்கா இருக்கு..." என்றாள் அவளும் விட்டுக் கொடுக்காமல்..!

"எனக்கு வீணான அரட்டை, சண்டை சச்சரவுகள் இதெல் லாம் பிடிக்காது!" என்றான் வீரேன், புரியாத குரலில்!

"எனக்கும்தான்!" என்று கூறிவிட்டு வேகமாகத் திரும்பிச் செல்லும் அவளையே, இமைக்காமல் ஒரு கணம் கூர்ந்து நோக்கினான்.

பிறகு உதடுகளில் ஏளனப் புன்னகையுடன், குனிந்து தன் வேலையில் ஆழ்ந்தான்.

அவனுடைய கர்வம், அவள் நெஞ்சப் பறவையை ஈயக் குண்டாய்த் துளைப்பதாய்!

பாறையைப் பிளக்கும் உளியாய், தன் இதயத்தை அவன் பார்வை சிதறடிப்பதை உணர்ந்தாள் அவள்.

வீடு திரும்பியதுமே நேரே அப்பாவிடம் சென்று, தன் முதல் நாள் அனுபவத்தை அவள் பகிர்ந்து கொள்ள, அவரும் அதை ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

* * *

அந்த வாரம் முழுவதுமே அனைவரும் புது ப்ராஜக்டில் மும்முரமாக இருந்தனர்.

தினமும் வீட்டிலிருந்து தீக்ஷாவிற்கு கேரியரில் சாப்பாடு வந்துவிடும். இப்போதெல்லாம் தேவியும் அவளுடன் சேர்ந்து சாப்பிட ஆரம்பித்திருந்தாள்.

அதுபோல், அன்றும் சாப்பிட அமர்ந்தபோது, இண்டர் காமில் வீரேனிடமிருந்து அழைப்பு வந்தது.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றால், அங்கு வீரேன் ஏதோ கோபத்தில் இருந்தான்.

பேமெண்ட் ஸ்லிப்பில் பண விபரம் தவறாக எழுதி இருப்பதாகக் கூறி, அவளைத் திட்ட ஆரம்பித்தான்.

அதை வாங்கக் கை நீட்டியபடி, "நான் ரெடி பண்ணலை ஸார்! தேவிதான் பண்ணினாங்க... அமௌண்டைத் தப்பாகப் போட்டுட்டாங்க போல இருக்கு! நான் சரி பண்ணச் சொல்றேன்" என்று கூறியபோது, அதைக் கோபத்துடன் விசிறி டேபிள் மீது எறிந்தான் அவன்.

அது, பறந்து கீழே விழுந்துவிட, தீக்ஷாவுக்கு ஒரு கணம், உன் வேலையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்று போய் விடலாமாவென்று தோன்றியது.

ஆனால், அவன் வந்த அன்று அவன் கூறியது நினைவில் வந்து, இவனுக்குப் பயந்து தோற்று ஓடுவதுபோல் தான் போகக் கூடாது என்ற வைராக்யமும் வந்தது.

மெதுவாக அதைக் குனிந்து எடுத்தாள்.

"பொறுப்பே இல்லை யாருக்கும்... இதுவே தன்னோட கம்பெனின்னா இப்படி நடக்கத் தோணுமா?" என்றான் வீரேன் கோபமாக.

"நான் என் கம்பெனி மாதிரி நினைச்சுத்தான் வேலை செய்யறேன் ஸார்!" என்றாள் தீக்ஷாவும், கோபமான குரலில்!



"ஒரு நிமிஷம்.. இப்ப இது என்னோட கம்பெனி! அதை ஞாபகம் வைச்சுக்கோ," வார்த்தைகளால் இதயத்தைக் குத்தினான் அவன்.

வேகமாக வெளியேறிச் சென்றவளின் முகம் கோபத்தில் சிவந்து இருந்தது.

அறைக்குள் வந்ததுமே, அவளின் சிவந்த முகத்தைக் கண்ட தேவி "என்னாச்சு மேடம்! ஏதும் பிரச்சனையா?" என்றாள் கவலையுடன்.

அவளிடம் விஷயத்தைக் கூறிவிட்டு "இனிமே கவனமா இருங்க தேவி! இன்னிக்கு நான் சமாளிச்சிட்டேன்" என்று கூறும்போதே உள்ளம் கசந்தது.

அன்று மாலையில், அவளிடம் புது டெண்டருக்கான கொட்டேஷனைக் கொடுத்து, ரகசியமாக ஃபைல் செய்து வைக்கும்படி கூறினான் வீரேந்தர்.

மறுநாள் முழுவதும் வேலை சரியாக இருந்தது அவளுக்கு!

மதியம் சாப்பிடும்போது அழைத்த வீரேந்தர், சாப்பிட்டு விட்டுத் தன்னை வந்து உடனே பார்க்கும்படி கூறினான்.

வீரேந்தரின் அறைக்குள் சென்றவள், "என்ன விஷயம் ஸார்? வரச் சொன்னீங்க?" என்றாள்.

"இன்னைக்குச் சாயந்திரம், என் கூட நீ வெளியே வரணும்!" என்றான் ஆணையிடும் குரலில்.

அவள் சிறிது நேரம் யோசித்துவிட்டு "கம்பெனி விஷயம்னா வரேன் சார்..." என்றாள் முன்னெச்சரிக்கையாக!

''ம்..'' என்று யோசித்தவன், ''கம்பெனி பாஸோட வீடு சம்பந்தமான வேலைன்னா, வரமாட்டியா?'' உரத்த வாகக் கேட்டான்.

யோசனையுடன், ''வரேன் ஸார்!'' என்றாள் தீக்ஷா.

அன்று மாலை அவனுடைய காரில், வீரேன் புதிதாக வாங்கி இருந்த வீட்டுக்கு இருவரும் சென்றனர்.

ராம் நகரில், அழகான பெரிய தோட்டத்தின் நடுவே, நவீனமாக இருந்தது, அந்த பங்களா!

ஒருவர் தங்குவதற்கு, இவ்வளவு பெரிய வீடு தேவையா என்ற எண்ணம் தோன்றி மறைந்தது, தீக்ஷாவுக்கு!

வீட்டின் உள்ளே புதிதாகப் பெயிண்ட் அடித்த வாசனை, காற்றில் இன்னமும் மீதம் இருந்தது.

கண் மூடி, அதை நாசியால் இழுத்துச் சுவாசித்தவள், கண் திறந்தால், வீரேன் எதிரில் நின்று தன்னையே பார்ப்பது கண்டு திடுக்கிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

ஒவ்வொரு அறைக்கும் திரைச் சீலைகள் வாங்குவதற்கு, சுவருக்குப் பொருத்தமான வண்ணத்தில், அவளுடன் கலந்து ஆலோசித்து, குறித்துக் கொண்டான் வீரேன்.

அவன் ரசனை, பெரும்பாலும் தன்னுடன் ஒத்துப் போவது, மிகவும் ஆச்சரியமாக இருந்தது தீக்ஷாவுக்கு!

அன்றே கடைக்குப் போய், எல்லாவற்றிற்கும் ஆர்டர் கொடுத்தார்கள்.

மறுநாள், கம்பெனியில் வேலை இயல்பாக நடந்தது.

அன்று மாலையும், அவளை அழைத்துக் கொண்டு ஃபர்னிச்சர் ஷோ ரூமுக்குச் சென்றான் வீரேன்.



அன்று சோபா, டைனிங் டேபிள், கட்டில், பீரோ என்று எல்லாம் பார்த்துத் தேர்ந்தெடுத்தனர்.

ஹால் மற்றும் அறைகளில் உள் அலங்காரத்துக்குத் தேவையான மலர்க்கொத்துகள், ஓவியங்கள், பீங்கான் ஜாடிகள், சுவரில் தொங்க விடுவதற்கு அலங்காரப் படங்கள், செயற்கை நீரூற்று, என்று எல்லாமே வாங்கி விட்டு, பூஜை சாமான்களும் வாங்கினார்கள்.

மறுநாள் மதியமே, இருவரும் கிளம்பி ஆட்களுடன் சென்று, வீட்டை அலங்காரம் செய்தனர்.

ஒரு பெண்ணின் கை பட்டதுமே, வீடு அழகாக மிளிர்ந்தது.

மூன்று நாட்களில் எல்லாம் முடிந்து வீடும் தயாராகி விட, அந்த ஞாயிறு அன்றே பால் காய்ச்சலாம் என்று வீரேன் முடிவு செய்தான்.

அதற்காக, அவளையும் கேசவனையும் வீரேந்தர் தன் வீட்டுக்கு அழைத்தான்.

ஆனால், கேசவன், வர மறுத்து விட்டார்.

''அங்கு எப்படியும் ஈஸ்வரன் குடும்பம் வரும்மா... எனக்குக் கஷ்டமா இருக்கும்; நீ போயிட்டு வா!'' என்று சொல்லி அவளை மட்டும் அனுப்பி வைத்தார்.

* * *

ஞாயிறன்று காலை, தலை குளித்து, தளரப் பின்னிய தீக்ஷா, அரக்குக் கலர் சில்க் காட்டன் புடவையை உடுத்திக் கொண்டாள்.

அதே வண்ணத்தில் சிறிய கல்செட் நகை அணிந்து, தன் மாருதியில் கிளம்பி அவன் வீட்டுக்குச் சென்றாள்.

முன்பே யசோதாவும், ஈஸ்வரனும் அங்கு வந்திருந்தனர்.

அவளைக் கண்டவுடன், ஈஸ்வரன் கோபமாக எழுந்து உள்ளே சென்று விட்டார்.

தர்மசங்கடத்துடன் வரவேற்ற யசோதா, அவளிடம் "அங்கிள் சரியாப் பேசலைன்னு தப்பாக எடுத்துக்க வேண்டாம்மா! அவருக்கு மனசு சரியில்லை... அதான்!" என்று கூறினார்.

இருவரும் மெதுவாகப் பேசிக்கொண்டு இருந்தபோது, அங்கு வந்த வீரேன் அவர்களையே யோசனையுடன் அளவிட்டான்.

கிரியின் நினைவில், மனம் பெரும் கோபத்தைத் தத்தெடுத்தது!

உணர்ச்சிகளை துடைத்த முகத்துடன் அருகில் வந்தவன், அவளைப் பார்த்து "வா" என்பது போல் தலையசைத்தான்.

"எல்லாம் ரெடியா, சித்தி? பூஜை பண்ணிடறீங்களா?" என்றான்.

பிறகு அவளிடம் திரும்பி "அப்பா பூஜை அறையிலே இருக்கார்; உன்னைப் பார்க்கணும்னு சொன்னார்" என்றான் ஏளனமான முறுவலுடன்.

யசோதா, உள்ளே சமையலறைக்குச் செல்ல, தீக்ஷா கதிரேசனைப் பார்ப்பதற்காக பூஜை அறைக்குச் சென்றாள்.

அங்கு சுவாமி கும்பிட்டுக் கொண்டிருந்த கதிரேசன், அவளைப் பார்த்ததும், புன்னகையுடன் எழுந்து வந்தார்.

"வாம்மா தீக்ஷண்யா! வீட்டு அலங்காரம் எல்லாம் உன் யோசனையாமே?... வீரேன் சொன்னான்! ரொம்ப



நல்லா இருக்கும்மா! நீ மருமகளாப் போற வீடு ரொம்பக் கொடுத்து வைச்சிருக்கணும்" பெருமை பொங்கக் கூறினார்.

மென்மையாக முறுவலித்துவிட்டு, உள்ளே சென்றாள் அவள்.

எல்லாம் தயாராக இருக்க... யசோதா பால் காய்ச்சினார்... ஒரு சமையல்கார அம்மாளும் அருகில் இருந்தார்.

ஒரு பக்கம் நறுமணத்துடன் பொங்கல் தயாராகிக் கொண்டிருந்தது.

தேவியும், வீரேனின் அழைப்புக்கு இணங்கி, வந்திருந்தாள்.

அன்று, பூஜை நிறைவாக நடந்தது. கதிரேசன் தான் பூஜை செய்தார்.

எல்லாவற்றையும் கைகளைக் கட்டிக் கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான் வீரேந்தர்.

இவனுக்கு இறைவனின் மேல் பக்தி கிடையாதோ என்று அவளுக்குத் தோன்றியது.

அந்த நிமிடம், தீக்ஷா கண்களை மூடி, கடவுளைப் பிரார்த்தனை செய்தாள்.

பிறகு ஹோட்டலில் இருந்து சாப்பாடு வந்ததும், சாப்பிட்டு விட்டு அனைவரும் விடைபெற்றனர்.

அங்கிருந்து நேராக நூலகத்திற்குச் சென்று, புத்தகங்கள் எடுத்துக் கொண்டு, வீட்டிற்குச் சென்றவள், கேசவனிடம் எல்லா விபரங்களையும் கூறினாள்.

பிறகு தன் அறைக்குச் சென்றபோது, ஏனோ மனம் புத்தகத்தில் ஈடுபட மறுத்தது.

வீரேந்தரைப் பற்றிய யோசனை இழைகளை உள்ளம் வலுவாக நெய்தது.

வித்தியாசமானவனாக, சிறிது முரண்பட்டவனாக, அவனைப் பற்றி நினைக்கும்போதே, அவன் கம்பீரம், அவனுடைய இதயம் வருடி உட்புகுந்தது... கர்வத்துக்கும் அழகென்ற பெயரோ என்றும் தோன்றியது!

மன நூலகத்தில் வரிசையாய் நினைவுப் புத்தகங்களின் திறப்பு விழா!

எல்லாவற்றிலும் தலைப்பாய், ஏனோ அவன் பெயர் மட்டுமே தெரிந்தன... ஏனென்று புரியாமல் மனம் தத்தளித்துத் தவித்தது.

வாழ்க்கையில் பல நேரங்களில், சுலபமான சில கேள்விகளுக்குக் கூட எளிதாய் விடை கிடைப்பதில்லை.

## 5



மறுநாள் காலையில், கம்பெனிக்குச் சென்றாள் தீக்ஷா.

ஆனால் முதல் நாள் வரை இருந்த அந்த மெல்லிய நட்புணர்வு, வீரேந்தரிடமிருந்து ஏனோ அன்று விடை பெற்றுச் சென்றிருந்தது.

ஆரம்ப நாட்களைப் போல், குற்றம் சாட்டும் பார்வையும், பேச்சும் குடி வந்திருந்தன.

அவனுடைய வீடு வேலைகள் முடிந்துவிட்டதால், இனி தன்னிடம் என்ன காரியம் ஆகவேண்டுமென்ற அலட்சியமாக இருக்கும் என்று அவள் உள்ளம் கணித்தது... இதயமோ கனத்தது!



ஆனால், முதல் நாள் மாலையில், கிரி வீரேனின் வீட்டிற்கு வந்ததும் தீக்ஷாவைப் பற்றித் திரித்துக் கூறியதையும் அவள் அறியவில்லை.

அன்று, வீரேந்தரின் வீட்டிற்கு வந்த கிரி அவனிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தான்.

தீக்ஷா, ஏன் அவனை மறுத்தாள் என்று யோசனையுடன் கேட்டான் வீரேன்.

"அவளுக்கு... நிறைய ஆண் நண்பர்களண்ணா! ரொம்ப மாடர்ன் பொண்ணு... கல்யாணம் முடிஞ்சிட்டா சுதந்திரமா சுத்த முடியாதுன்னு புரிஞ்சதாலே, தனக்கு விருப்பமில்லாத இந்தத் திருமணத்தை அவ நிறுத்திட்டான்னு நினைக்கிறேன்... நீங்க கூட கேர்ஃபுல்லா இருங்க..." சோகமான முகத்துடன் கேட்டுக் கொண்டான் அவன்.

அவள் தன்னை மறுத்தது... அவன் மனதில் பெரும் வன்மத்தை விதைத்திருந்தது.

தன் தாயிடமும், தன்னுடைய சுயரூபத்தை அவள் வெளிச்சம் போட்டுக் காட்டியது வேறு, பழி வாங்கும் உணர்ச்சியாய்... பெரும் குரோதமாய் நெஞ்சிற்குள் குடி புகுந்திருந்தன.

இப்போதுதான், திருப்தியாக உணர்ந்தான் கிரி!

அவன் கூறியதைக் கேட்டவுடனே, வீரேந்தருக்குத் தீக்ஷண்யாவின் மேல் தாளமுடியாத வெறுப்பு வந்தது.

அதன் எதிரொலி, மறுநாள் முழுவதும் கம்பெனியில், அவளிடம் தீக்கங்கு போல் பாய்ந்தது.

அன்று மாலை, அவன் கையெழுத்துக்காக, ஒரு முக்கியமான ஆர்டரை எடுத்துச் சென்றபோது, அவளைக் கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தான் அவன்.

"இன்னிக்கு நீ சீக்கிரம் போகணும்னா போகலாம்... போன வாரம் முழுக்க, நான் உன்னோட ஃப்ரீ டைமை எடுத்துக்கிட்டேன்... அதனால உன்னோட... உன் ரொட்டீன் லைஃப் என்னாலே பாதிக்கப்பட்டிருக்கும்... அதனால வேண்டியவங்க யாராவது உன் மேல கோபப்பட்டிருந்தா, நான் தானே அதுக்குக் காரணம்! நீ போகலாம்'' என்றான் முகத்திலறைந்தது போல்!

அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டார்... கம்பெனின்னா வேலை இருக்கும்னு அவருக்குத் தெரியாதா என்ன?"

மெலிதாக முறுவலித்தாள் தீக்ஷா.

உடனே சீற்றத்துடன் வந்தது பதில்!

"நான் உன் அப்பாவைச் சொல்லலை... அவர் என்ன செய்வார் பாவம்...!" என்றான் சினத்துடன்.

அப்பாவைச் சொல்லவில்லை என்றால், பிறகு யாரைச் சொல்கிறான் என்ற எண்ணத்தில், அவனை யோசனையோடு நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

அந்த நிமிடம், கோபத்துடன் அவன் விழிகள், அவளையே கூர்ந்தன.

"அதான் போகலாம்னு சொல்லிட்டேனே!" என்று எரிந்து விழும் அவனைப் பார்த்தால், தீக்ஷாவுக்கு ஏனோ மனதில் வலித்தது.

பனிமலைக்கும் எரிமலைக்கும் இடையில் உள்ளம் தத்தளித்தது.

எவ்வளவு யோசித்தாலும் அர்த்தம் புரியாத அவன் இறுக்கம், அவள் மனதைக் கொன்றது.



சீக்கிரமே கிளம்பி வீடு சேர்ந்தவள், தினசரி நடப்பைக் கூறுவது போல், அன்று நடந்த விஷயங்களையும் கேசவனிடம் கூறினாள்.

எப்போதுமே தன் பழைய கம்பெனியைப் பற்றி ஆவலாகக் கேட்பவர் அவர்!

அன்றும் கேட்டுவிட்டு, "வீரேந்தர் ஏதாவது டென்ஷன்லே இருந்திருப்பாரும்மா, அதான்'' என்றார் இயல்பாக!

ஆனால், அவளுக்கு மட்டும் ஏனோ தாங்க முடியவில்லை.

ஒரு வாரம் மட்டுமே, கொஞ்சம் நட்புடன் பழகிய நண்பனை இழந்ததுபோல், மனதின் ஒரு மூலையில் வலித்தது.

கரிய மேகங்களின் இடையே ஒளிரும் மின்னல் கீற்று போல், மனதின் ஓரம் சிறு நம்பிக்கை ஊற்று. அவனிடம் மாற்றத்தை எதிர்பார்ப்பதாய்...!

ஆனால் மறுநாளும் இதுவே தொடர்ந்தது.

அந்த வாரம் முழுவதும், அவன் சொற்களால், மிகவும் காயப் பட்டுப் போனாள், தீக்ஷா.

முதலில் திகைத்தவளுக்கு, பிறகு அதுவே பழகி விட்டது.

ஆனால், எந்தத் தப்பும் செய்யாமல், அவன் கடு சொற்களைக் கேட்டபோது, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள, அவள் பெரிதும் பாடுபட வேண்டி இருந்தது.

தேவியும் காரணம் புரியாமல் விழித்தாள்... அவன் அறைக்குள் வந்து போனாலே, புயலடித்து ஓய்ந்த மாதிரி இருந்தது.

ஆனால், சேதங்கள் மட்டும் தீக்ஷாவின் உள்ளத்தில் அதிகம் தெரிந்தன!

* * *

அந்த வார இறுதியில், ஐஸ்வர்யாவும் அவளும் ஒரு சினிமாவுக்குச் சென்றனர்.

திரும்பி வரும் வழியில், ஹோட்டலுக்குச் சென்றபோது, ஐஸ்வர்யா அவளிடம் "இன்னிக்கு உனக்கு ஒரு சர்ப்ரைஸ் இருக்கு, தீக்ஷா...!" என்றாள் குறும்புடன் கண் சிமிட்டியபடி!

"என்ன சர்ப்ரைஸ்...? எனக்குத் தெரியாதது, அதுவும் உன்கிட்டே...?" கேட்டவளின் குரலில் ஆர்வம்!

ஐஸ்வர்யா தேர்வு செய்த டேபிளில், ஏற்கெனவே அமர்ந்து, காத்துக் கொண்டு இருந்தவனைப் பார்த்ததும் திகைத்து நிமிர்ந்தாள் தீக்ஷா.

"ஹலோ!" என்று புன்னகையுடன் கூறிய அவனைக் கூரிய பார்வையால் அளவிட்டாள்.

அளவான உயரத்தில் ரிம்லெஸ் கண்ணாடி அணிந்து அழகாக இருந்த அவனை, யாரிவன் என்பதுபோல் பார்த்து விட்டு, ஐஸ்வர்யாவிடம் திரும்பிக் கேள்வியாக நோக்கினாள்.

பதில் கூறாமல் "நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருங்க.. நான் இப்ப வரேன்" என்றவள் எழுந்து சென்றாள்.

உணவை ஆர்டர் செய்துவிட்டு, பில்லைக் கௌண்டரில் கொடுத்து செ்ஃல்ப் சர்வீஸ் கௌண்ட்டரில் டிபனை எடுத்து வந்தாள்.



அப்போது தன் நண்பனோடு ஹோட்டலுக்கு வந்த வீரேந்தருக்கு அங்கு தீக்ஷா தனியாக ஒருவனுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, புருவங்களிரண்டும் நெறித்தன.

மனதைக் கோபமெனும் ஆயுதம் தகர்த்தது...

அன்றுதான் அவளுடைய நிஜமுகம் புலப்படுவது போல் தோன்றியது!

தீக்ஷாவின் முன் சென்று நின்று, அவளுடைய முகத் திரையைக் கிழிக்க வேண்டும் என்றும் தோன்றியது.

ஆள் நன்றாகத்தான் இருக்கிறான்... அதுதான், இவள் கிரியை ஏமாற்றி இருக்கிறாள் என்று தோன்றவும், தாங்க முடியாத கோபத்துடன் நண்பனோடு அடுத்த தளத்திலிருந்த ரூஃப் கார்டனுக்குச் சென்றான் வீரேந்தர்.

தீக்ஷா அவனைக் கவனிக்கவே இல்லை!

அவளெதிரில் அமர்ந்து இருந்தவன், மிகவும் தயங்கியபடி பேசினான்.

"தீக்ஷன்யா! ஐஷு உங்களைப்பத்தி நிறைய சொல்லியிருக்கா... நீங்க ரெண்டு பேரும் ரொம்ப நாளா பெஸ்ட் ஃப்ரெண்ட்ஸாமே...! நான் கார்த்திக்! நான் யாருன்னு, நானா சொல்றதைவிட ஐஷு சொன்னா நல்லா இருக்கும்" என்று கூறி பூடகமாகச் சிரித்தான் அவன்.

புதிர்போல் இருந்தது அவளுக்கு... அவன், தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறியபோது!

இஞ்சினியரிங் படித்து முடித்துவிட்டு தான் ஒரு லெக்சரராக இருப்பதாகவும், தனக்கு அப்பா அம்மா இல்லையென்றும் ஒரு அக்கா மட்டும் சென்னையில்

இருப்பதாகவும் கூறியவன், நீக்ஷாவைப் பற்றியும், தனக்கு எல்லாமே தெரியும் என்றான்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே, ஐஸ்வர்யாவும் வந்து விட்டாள்.

நீக்ஷாவுக்கு, ஏதோ புரிந்த மாதிரி இருந்தது... மனதில் சட்டென்று உற்சாகம் மூகாமிட்டது!

குறும்புடன் ஐஸ்வர்யாவை நோக்கியவள், "ஏய் கள்ளி! இத்தனை நாள் என்கிட்ட இருந்து மறைச்சிட்டே இல்லை!" என்றாள் கேலியாக...

"கார்த்திக்!... நான் வரதுக்குள்ளே, எல்லாத்தையும் ஒப்பிச்சிட்டீங்களா, இவகிட்டே!" என்று சிணுங்கினாள் அவள்.

"அவர் எப்படி ஒப்பிப்பார். அவர்தான் லெக்சரர் ஆச்சே! நீதாம்மா ஒப்பிக்கணும்! எனக்கும் கொஞ்சம் சொல்லேன்... எப்படி நீ இப்படித் தலைகுப்புற விழுந்தேன்னு...?" என்றாள் கிண்டலாக!

ஐஸ்வர்யா, குற்றம் சாட்டும் பார்வையுடன், கார்த்திக்கை நோக்கினாள்.

அவனோ, "என் மேலே எந்தத் தப்பும் இல்லை... நான் எதுவுமே சொல்லலை... உன்னை மாதிரி உன் ஃப்ரெண்ட் ட்யூப் லைட் இல்லை. ரொம்ப ஷார்ப். உடனே புரிஞ்சிக் கிட்டாங்க" என்றான் கேலியாக...!

பிறகு, இருவரும் சேர்ந்து எல்லாவற்றையும் கூறினர்.

இருவரும் காதலிக்க ஆரம்பித்து இரண்டு மாதங்கள் சென்று விட்டதாகக் கூறியதும், "ஏன்டி... என்கிட்டச் சொல்லவே இல்லை" என்றாள், நீக்ஷா ஆதங்கத்துடன்!



"இல்லைடி! நீ அப்பதான் கிரியைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்ட நேரம்...! உன் மனசு சங்கடத்துல இருக்கும்போது, நான் எப்படி இதை உன்கிட்ட சொல்றது? அதான், மெதுவா சொல்லலாம்னு விட்டுட்டேன்... கார்த்திக்குக்கும் எல்லாமே தெரியும்! அவர்தான், மெதுவா சொல்ல லாம்னு சொன்னார்" என்றாள்.

"சங்கடம்கிறது ஒரு வகையிலே உண்மைதான்...! ஆனா அது கல்யாணம் நின்னு போனதாலே இல்லை... அவனைப் பத்தின உண்மையான நிறம் தெரிஞ்சதாலே! நல்ல வேளை தப்பிச்சோம்கிற நிம்மதிதான் கடைசியிலே வந்தது..." என்றாள் நீக்ஷா ஒரு பெருமூச்சுடன்.

அவர்களுடன் பேசிக் கொண்டே மெல்ல நிமிர்ந்தவள், தூரத்தில் நின்று அவளையே குரோதத்துடன் நோக்கும் வீரேந்தரின் கோப விழிகளை அப்போதுதான் சந்தித்தாள்.

இவன் எங்கே இங்கு வந்தான் என்று யோசிப்பதற்குள், அவன் வேகமாகத் திரும்பி, தன் நண்பனுடன் வெளியே சென்று விட்டான்.

மூன்று பேரும் பேசிக் கொண்டு இருந்து விட்டு, வீட்டிற்குச் சென்றபோது, மணி எட்டாகி விட்டது.

மனதின் ஒரு ஓரத்தில், வீரேனின் பார்வையில் இருந்த சீற்றம் மட்டும் நிலை கொள்வதாய்...!

அவன் பார்வையைக் கண்டபோது அது தன் இதயத்தைத் தகர்க்கவென்றே இறைவன் படைத்த ஆயுதமோ வென்றும் அவளுக்குத் தோன்றியது!

* * *

மறுநாள் காலையில், எப்போதும்போல் அலுவலகத்துக்குச் சென்றபோது, வீரேன், கோபத்தின் எல்லையில் குதித்துக் கொண்டு இருந்தான்.

அவர்கள் கம்பெனியில் இருந்து அனுப்பிய டெண்டர் கொட்டேஷன், ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதைவிடச் சிறிதளவே குறைவாக இருந்த, வேறு ஒரு கம்பெனியின் கொட்டேஷன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எரியும் தீயை ஊதிப் பெருக்கும் காற்றாய் ஆனது.

ஏற்கனவே, அவள் மேல் பெரும் கோபத்தில் இருந்த வீரேந்தர் அன்று அவளை வாட்டி எடுத்து விட்டான்.

தேவி, மெதுவாக அவள் அறைக்குள் வந்தாள்.

''நாம என்ன பண்ண முடியும், மேடம்? அமௌண்ட் ஃபிக்ஸ் பண்ணினது பாஸ்தானே? நாம கொட்டேஷன் மட்டும்தானே தயார் பண்ணி அனுப்பினோம்!'' என்றாள் தாங்க முடியாமல்..!

அவளை, அமைதியாக இருக்கும்படிக் கூறிவிட்டு, போனை எடுத்த தீக்ஷா, ஐஸ்வர்யாவின் அப்பா ராகவ னிடம் பேசினாள்.

அவர்களுக்கு முன், தேர்வு செய்யப்பட்ட கம்பெனி, சரியான கட்டுமானம் இல்லாத காரணத்துக்காக, முன்னரே ஒரு வழக்கில் மாட்டி இருந்தது.

தேர்வு செய்யும் கமிட்டியின் தலைவர், ராகவனுக்கு நெருங்கிய நண்பர்!

உடனே போன் செய்து ராகவனிடம் விஷயத்தைக் கூறி விட்டு வைத்தவள், ''அப்படி அவர்களுடைய கொட்டேஷன் ரிஜெக்ட் செய்யப்பட்டா, அடுத்த இடத்திலே இருக்கிற நம்ப கம்பெனியோட கொட்டேஷன்தான் செலக்ட் ஆகும்'' என்று தேவியிடம் கூறினாள்.



மதியச் சாப்பாட்டின்போது, ஐஸ்வர்யாவின் தந்தை அவளிடம் பேசினார்.

இது பற்றித் தன் நண்பரிடம் பேசியதாகவும், கட்டாயம் மறுபரிசீலனை செய்வதாக அவர் கூறியதாகவும் சொல்லி விட்டு வைத்தார் அவர்.

மனதில் பெரும் நிம்மதி வந்தது தீக்ஷண்யாவுக்கு!

அன்று முழுவதும் என்ன முடிவு தெரியுமோ என்ற படபடப்பும் தவிப்புமே உள்ளத்தில் நிறைந்திருந்தன.

ஏனோ அவளால் வீரேன் தன்னைத் தவறாக நினைப் பதைத் தாங்க முடியவில்லை.


சிந்திக்கும் திறனற்று மனம் வேடிக்கை பார்த்தது, அவன் கோபத்தை!

மனம் நதியின் வேகத்தில் ஓடிக் கொண்டிருக்க, அதன் எண்ணச் சுழிப்பில் எல்லாம், அவன் பெயரின் உச்சரிப்பு!

மோதலிலிருந்து காதல் கைவசப்படுமா என்று மனம் கேள்வியாய் மயங்கியது.

பேச வகையின்றி, மொழியில்லாமல் மௌனமானாள் அவள்!

## 6



மறுநாள் காலையில் கம்பெனிக்கு தீக்ஷா வந்தபோது, ஏனோ வீரேந்தர் மௌனமாக இருந்தான்.

புயலுக்குப் பின் வரும் அமைதி தெரிந்தது அவனிடம்!

சில ஃபைல்களை அவன் பார்வைக்கு வைத்து விட்டுத் திரும்பியபோது, அவளைக் கையமர்த்தி நிறுத்தினான்.

"நீங்க எல்லாரும் ஒழுங்கா, கவனமா வேலை செய்யலைன்னாலும், நம்ப கம்பெனியோட அதிர்ஷ்டம், அவங்களோட கொட்டேஷன் ரிஜக்டாகி, நமக்கு ஆர்டர் கிடைச்சிருக்கு" என்றான் ஏளனமாகச் சுழித்த உதடுகளுடன்!

ஒரு வாரமாக அவன் சுடுசொற்களைத் தாங்கியிருந்த தீக்ஷண்யாவால் தாங்க முடியவில்லை.

"ஒரு நிமிஷம் ஸார்! நாங்க ஒழுங்கா வேலை செய்யலைன்னு எப்படிச் சொல்றீங்க? எவ்வளவு அமௌண்ட்டுன்னு முடிவு பண்ணினது நீங்க! கொட்டேஷன் மட்டும் தான் நாங்க தயாரிச்சோம். இதிலே நாங்க என்ன செஞ்சிருக்க முடியும்?" என்றாள் தைரியமாகவே!

"நான் அன்னைக்கே சொன்னேன், இந்த டெண்டர் கொட்டேஷனை ரகசியமா ஃபைல் பண்ணி வைன்னு... நீங்க ரெண்டு பேரும் அஜாக்ரதையா இருந்ததாலேதானே, குறைந்த வித்தியாசத்துல, ஆர்டர் கை நழுவிப் போக இருந்தது! இதுலே யாரை நம்பறதுன்னு புரியாம நானே திண்டாடிட்டு இருக்கேன்!"

குற்றத்தை அவள் மீது சுமத்தினான் வீரேந்தர்.

"ஓ! அப்படின்னா என்னை நீங்க சந்தேகப் படறீங்களா? அப்போ, நான் இன்னைக்கே ரிஸைன் பண்ணிடறேன் ஸார்! ஸாரி... அந்த மாதிரி கேவலமான புத்தி எல்லாம் எனக்குக் கிடையாது" என்றாள் கோபத்துடன்.

"தெரியலையே... நம்ப வச்சுக் கழுத்தறுக்கிற புத்தி உனக்கு இருக்கும்போது, இது மட்டும் இல்லைன்னு சொன்னா... எப்படி நான் நம்பறது?... எங்க குடும்பத்தைப் பழி வாங்கக்கூட, நீ இந்தக் கம்பெனியிலே சேர்ந்திருக்கலாம்..." என்றான் வீரேந்தர், தோளைக் குலுக்கி அலட்சியமாக!

அவள் நிதானமாக "தர்மருக்கு யாரைப் பார்த்தாலும் நல்லவங்களாத்தான் தெரியுமாம்! ஏன்னா அவர் ரொம்ப நல்லவர்... ஆனா, துரியோதனனுக்கோ எவரைப் பார்த்தாலும் கெட்டவங்களாத் தெரியும்! ஏன்னா, தன்னை மாதிரிதானே, மத்தவங்களையும் நினைக்கத் தோணும்!" என்று கூறிவிட்டுத் திரும்பியும் பார்க்காமல், விரைந்து வெளியே சென்றாள் தீக்ஷண்யா!

கோபத்துடன் அவள் முதுகையே வெறித்தவன், பிறகு சலிப்புடன் தன் வேலையில் ஆழ்ந்தான்.

சிறிது நேரத்தில், தேவி ஒரு கடிதத்தை வீரேந்தரின் எதிரில் வைத்தாள்.

என்னவென்று கேள்வியாக நோக்கியவளிடம் "தீக்ஷண்யா மேடம் இதை உங்ககிட்டக் கொடுக்கச் சொன்னாங்க ஸார்! அப்புறம் ஒரு விஷயம்..!" என்று தயங்கி, நேற்று நடந்த விஷயங்களை ஒன்று விடாமல் கூறினாள்.

வீரேந்தரின் முகத்தில் ஆச்சர்யமும், மகிழ்ச்சியும் கலந்த கலவையான உணர்ச்சிகள் வெளிப்பட்டன.

அவள் பொய்த்துப்போகவில்லை என்ற மகிழ்ச்சி அவனுள் தோன்றி, மனதில் புரியாத உணர்வு கிளர்ந்தது.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அந்த ராஜினாமாக் கடிதத்துடன் அவள் அறைக்குச் சென்றான் வீரேந்தர்.

செல்லும் முன், பியூனை அழைத்து, பக்கத்துக் கடையில் இனிப்பு வாங்கி வரச் சொன்னான்.

* * *

அறைக்குள் சென்றவன், அவள் கம்ப்யூட்டரில் மும்முரமாக ஏதோ வேலை செய்து கொண்டிருப்பதை உணர்ந்து, எதிரில் சென்று அமர்ந்தான்.

அசைவை உணர்ந்து, தேவியென்று நினைத்து மெதுவாக அவள் திரும்பிப் பார்க்கவும், அவளிடம் ஸ்வீட் டப்பாவை நீட்டினான்.

"தேவி எல்லாம் சொன்னாங்க... நான் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன்... எனிவே... தாங்க்ஸ் ஃபார் எவ்வரி திங்! நான் உன்னோட ராஜினாமாவை ஏத்துக்க மாட்டேன். திரும்பவும் எழுதிக் கொடுத்தா, அப்புறம் நான் கேசவ் அங்கிள் கிட்டப் பேச வேண்டி இருக்கும்... அதனால, நீ இன்னைக்கு என்னோட இதைக் கொண்டாட டின்னருக்கு வரே!" என்று கூறிவிட்டு, மெதுவாக முறுவலித்தான்.

"ஸாரி ஸார்! என்னால வர முடியாது..." என்று கூறிவிட்டுத் தன் வேலையில் ஆழ்ந்தாள் அவள்..!

தனக்குள் மூண்ட கோபத்துடன், "ஒரு நிமிஷம்!" என்றவன், "நான் யாருன்னு நினைப்பு இருக்கா? நான் உன்னோட பாஸ்! இந்த அலட்சியமெல்லாம் என் கிட்ட வேணாம்" என்றான், மெலிதான கோபத்துடன்!

"எனக்கு எல்லாம் ஞாபகம் இருக்கு ஸார்! ஆனாலும் நான் உங்களோட டின்னருக்கு வர முடியாது!" என்றாள் தீக்ஷா. உறுதியாக..!

"ஓ! உன் லவ்வரோட வெளியே போறியா?" என்றான், குரலில் இனம் கண்டு கொள்ள முடியாத ஒரு பாவத்துடன்!



அவள் குழப்பத்துடன் நிமிர்ந்து, "அப்படி யாரும்... எனக்கு லவ்வர் எல்லாம் இல்லை...! கொஞ்சம் வார்த்தையை அளந்து பேசுங்க" என்றாள் சீற்றத்துடன்.

"அப்ப அன்னிக்கு உன்னோட ஹோட்டல்ல பார்த்தது... உன் ஃப்ரெண்டோட லவ்வரா?"

அவன் கேட்கவும், சட்டென்று ஜஷ்வின் விஷயம், இன்னும் அவள் வீட்டிற்குத் தெரியாதே என்ற பயம், மனதில் எழுந்தது.

"அப்படியெல்லாம் இல்லை! அவர் எங்க நண்பர்" என்றாள் அவசரமாக... அப்பாடா என்றிருந்தது அவளுக்கு!

வீரேந்தர் அவளையே, கண்களில் வினாவுடன், நோக்கிக் கொண்டு இருந்தான்.

அவள் கூறியதை அவன் நம்பவில்லை என்று, அவனது சுழித்த உதடுகள் ஏளனமாகக் கூறின.

சட்டெனத் தோள்களைக் குலுக்கியவன், "அப்படி நினைக்கப் பழகினா சரிதான்" என்று குத்தலாகக் கூறியபடி, அவள் எழுதிக் கொடுத்த ராஜினாமாக் கடிதத்தை நான்காகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான்.

"அப்ப நீ வரமாட்டே!.." அவன் கேள்வியாக நோக்கவும், "மாட்டேன்" என்று உறுதியாகத் தலை அசைத்தாள் தீக்ஷா.

வேகமாகத் தன் அறைக்குச் சென்றவனுக்கு தீக்ஷண்யாவைப் பற்றி, தான் கணித்தது தவறோ என்ற எண்ணம் மனதில் வர, உடனே கேசவனை செல்லில் தொடர்பு கொண்டான்.

"ஹலோ!... நான் வீரேந்தர் பேசறேன் அங்கிள்... எப்படி இருக்கீங்க?... இன்னிக்கு நைட் உங்களுக்கு ஒரு விருந்து தர்றதா இருக்கேன்... உங்களுக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லையே? நீங்க ஃப்ரீதானே?" என்றான் உற்சாகக் குரலில்!

உடனே, "என்னப்பா திடீர்னு?... நான் ஃப்ரீதான். என்ன விஷயம்?" என்றார்.

"இன்னிக்கு நம்ப கம்பெனிக்கு ஒரு பெரிய ஃபேவர் செஞ்சிருக்காங்க, தீக்ஷண்யா! ஆனால், நான் கூப்பிட்டா வர மாட்டாங்க. நீங்களும் என் வீட்டுக்கு வரலே... ரெண்டையும் ஒண்ணாச் சேர்த்து, இந்த விருந்தை ஏற்பாடு பண்றேன்... ஒரு வேண்டுகோள் அங்கிள்! தீக்ஷண்யாவிற்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம்... சர்ப்ரைஸா அவங்களை அழைச்சிட்டு வாங்க..." என்றான் வீரேன்.

"ஓக்கேப்பா!" என்று சிரிப்புடன் கூறி, எந்த ஹோட்டல் என்று கேட்டார் கேசவன்.

ஹோட்டல் பெயரையும், டேபிள் அவர் பெயரிலேயே ரிசர்வ் செய்யப்பட்டிருப்பதையும் கூறிவிட்டு வைத்தான் வீரேந்தர்.

"என்கிட்டயா 'நோ' சொல்றே?... என்னோட நீ டின்னருக்கு வர மாட்டியா? இப்ப என்ன செய்யறேன்னு பார்ப்போம்!"

மனதிற்குள் சவாலாய் வெற்றிச் சிரிப்பு சிரித்துக் கொண்டே, திரும்ப செல்லை ஆன் செய்தான் அவன். ஹோட்டலுக்குப் போன் செய்து, கேசவன் என்ற பெயரிலேயே டேபிள் ரிசர்வ் செய்தான்.

* * *

அன்று வீட்டுக்குச் செல்லும்போதே, தீக்ஷாவிற்கு வீரேனின் நினைவுதான் வந்தது.

'என்ன அழகாகப் புன்னகைத்தான்... மனதிலிருந்து இயல்பாக வந்த புன்னகை அது... மேகங்களிடையே ஒளிரும் மின்னல் கீற்றுப் போல் பளீரென்று!'

'இதுபோல் இவன் அடிக்கடி சிரித்தால் நன்றாக இருக்குமே' என்று உள்ளம் எண்ணியது...

மனம் ஏனோ அவன் வார்த்தைகளை உடனே மன்னித்து விடுவதும் புரிந்தது!

அவளுடைய மனப் பக்கங்கள் இன்று சிறகடிக்கும்போது அவன் நினைவுச் சுவடுகள் மட்டும், இதயத்தில் இன்ப வடுக்களாய் பதிந்தன.

வீட்டுக்கு வந்த தீக்ஷண்யா, அன்று நடந்ததையெல்லாம் கேசவனிடம் கூறினாள்.

ஆனால், அவன் டின்னருக்கு அழைத்ததை மட்டும் ஏனோ கூறவில்லை...

அதைக் கவனித்து விட்டுத் தனக்குள்ளே சிரித்துக் கொண்ட கேசவன், "இன்னிக்கு நீ ஃப்ரீயாம்மா? நாம ரெண்டு பேரும் இந்த சந்தோஷத்தைக் கொண்டாட ஹோட்டலுக்குப் போறோம்... சரியா?" என்றார் உற்சாகத்துடன்.

அவளுக்கும் ஒரு மாற்றம் தேவையாயிருந்தது.

உடனே சரி என்றவளின் மனதில், வீரேன் தன்னை டின்னருக்கு அழைத்தது, உடனே நினைவில் படர்ந்தது!

சந்தனக் கலர் ஆர்கன்ஸாவில், முத்துக்கள் பதித்த புடவை உடுத்தி, முத்து செட்டும் அணிந்து, தந்தையுடன் கிளம்பினாள் தீக்ஷா.

அவள் அறையிலிருந்து வெளியே வந்து "ரெடிப்பா" என்றதும், அவளையே ஒரு கணம் பார்த்தவர், "தேவதை மாதிரி இருக்கேடா!" என்றார் பெருமையுடன்!

செல்லமாகச் சிணுங்கியபடி, "ஏம்ப்பா பொய் சொல்றீங்க? பின்னாடி சிறகு இல்லையே...?" என்று வெட்கச் சிரிப்புச் சிரித்தவளை, அன்புடன் அணைத்து அழைத்துச் சென்றார் கேசவன்.

அவர்கள் ஹோட்டலை அடைந்து, ஏ.சி. ஹாலுக்குள் நுழைந்து, எந்த டேபிள் என்று விசாரித்து அமர்ந்தார்கள்.

மெனு கார்டில் பார்வையைப் பதித்திருந்த தீக்ஷா, திடீரென்று அருகில் யாரோ அமரவும், திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஹாய்!" என்றான் வீரேந்தர், இரு புருவங்களையும் உயர்த்தி, வெற்றி கொண்ட பார்வையுடன்...!

அவன் பார்வை, கேலியாக அவள் விழிகளை உரசியது! அவன் விழிகள், அவளைக் குறும்புடன் பந்தாடின.

தன்னை அறியாமல், "நீங்களா?" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

அவனுடைய விழிகள் இடுங்கி, "உன்னை வரவழைத்து விட்டேன் பார்!" என்று சவாலாக நோக்கின.

ஏனோ, உடனே தான் தோற்றுப் போன ஒரு உணர்ச்சி வந்தது தீக்ஷாவிற்குள்..!

இவன் நினைத்ததைச் சாதிப்பவன்... இவனிடம் கவனமாக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வும், மனதில் ஆழமாய் முகாமிட்டது.



அவன் கண்கள் தன் மீது உரசியபோது, எரிகல்லைப் போல் இதயம் இடம் பெயர்ந்து, மின்சாரம் தன்மீது பாய்வது புரிந்தது.

## 7



தீக்ஷண்யா, அதற்குப் பிறகு அவனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல், தன் போக்கில் தட்டிலேயே கவனமாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள்.

கம்பெனி பற்றிய விபரங்களை, தனக்கு சீனியர் என்ற முறையில், கேசவனிடம் பேசிக் கொண்டிருந்தான் வீரேந்தர்.

அவன், இடையிடையே திரும்பி நோக்கும் போதெல்லாம் அவள் விழிகள், கீழேயே பதிந்து இருந்தது கண்டு, அவனுக்குள் பெரும் சீற்றம் வந்தது.

'என்னிடமா நீ முகம் திருப்புகிறாய்...' என்று எண்ணியபடித் திரும்பியவனுக்கு, அடுத்த டேபிளில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவனைக் கண்டதும், உதடுகளில் ஒரு வெற்றிப் புன்னகை வந்தது.

வேகமாக அவளிடம் திரும்பியவன், "தீக்ஷண்யா! அன்னிக்குப் பாத்தமே உன் ஃபிரண்ட்... அவர், பக்கத்து டேபிள்லே சாப்பிட்டுட்டு இருக்கார்" என்றான் கிண்டலான குரலில்!

முதன் முதலில், அவன் தன்னைப் பெயர் சொல்லி அழைக்கிறான் என்பதை மனம் உடனே பதித்துக் கொண்டது.

யாரென்று திரும்பிப் பார்த்தால், அங்கே கார்த்திக், தன் நண்பனுடன், பக்கத்து டேபிளில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்ததும், "ஹாய்!" என்று கையாட்டிச் சிரிக்க, அவளும் அதை ஏற்றுக் கொண்டு புன்னகைத்தாள்.

கேசவன், அவளிடம் திரும்பி, "யாரும்மா அது?..." என்று கேட்கவும், முதலில் திகைத்துப் பிறகு, "இஷூவோட ஃப்ரெண்ட்ப்பா!" என்றாள் தவிப்புடன்.

ஐஸ்வர்யாவின் காதல் யாருக்கும் தெரியாததால், அப்பாடி தப்பித்தோம் என்று நிமிர்ந்தால், வீரேந்தரின் கண்களில் கேலியுடன் கூடிய வன்மம் தெரிந்தது.

இவன் என்ன, என்னை அப்பாவிடம் மாட்டிவிட்டு பின் கேலியாகச் சிரிப்பது என்று மனதில் கோபம் வந்தது.

சாப்பிட்டு முடித்ததும் எழுந்து சென்ற தீக்ஷா, கார்த்திக்கின் டேபிளின் அருகே சென்று நின்று, வேண்டுமென்றே சிறிது நேரம் பேசிவிட்டுத் தான் வந்தாள்.

தன் இருக்கைக்கு வந்து அமர்ந்தவள், கேசவனிடம் இயல்பாகத் திரும்பினாள்.

"அவர் பெயர் கார்த்திக்ப்பா! லெக்சரரா வேலை பார்க்கிறார். ரொம்ப நல்லவர். நாங்க போன வாரம், ஹோட்டலுக்குப் போனப்போ, இஷூதான் அறிமுகம் செஞ்சி வச்சிப் பேசிட்டு இருந்தா...!" என்றாள் அடக்கிய முறுவலுடன்!

அவள் பார்வை சீண்டலுடன் உயர்ந்து, வீரேந்தரை வெற்றியுடன் ஏறிட்டது.



உதடு சுழித்துக் குறும்பாக, கண்களில் கேலியுடன் அவனை நோக்க, வீரேனின் முகம் பாறையாக இறுகியது.

விழிகள் கோபத்துடன், அவள் உதடுகளில் பதிந்து விலகின.

பிறகு டின்னர் அமைதியாக முடிந்தது.

* * *

மறுநாள் காலையில், தீக்ஷண்யா கம்பெனிக்கு வந்த போது, வீரேந்தர் அவளிடம் பாராமுகமாகவே இருந்தான்.

அவளிடம் எதுவுமே பேசாமல், அவளைத் தவிர்க்கும் விதமாகவே நடந்து கொள்ள, அன்று முழுவதும், ஒரு விதக் கோபமான மனநிலையிலேயே கழிந்தது.

ஏதோ புரிந்தாலும், தான் எதுவும் தவறு செய்யவில்லை என்ற உறுதி மட்டும் அவள் மனதில் நிறைந்திருந்தது.

அந்த வாரம் முழுவதுமே, அப்படியே சென்றதால், அவன் புறக்கணிப்பு, அவளைப் பெரிதும் பேதலிக்கச் செய்வதாய்!

திங்களன்று, அவள் கம்பெனிக்குச் சென்றபோது, தேவி மகிழ்ச்சியுடன் புது ப்ராஜெக்ட்டுக்கான ஆர்டர் வந்திருப்பதாகக் கூறினாள்.

ஆனால், சென்னை அலுவலகத்துக்குக் கிடைத்திருப்பதாகக் கூறினாள்.

அங்கிருந்த கம்பெனியை, கதிரேசன் கவனித்துக் கொண்டிருந்தார்.

வீரேந்தரின் அறைக் கதவைத் தட்டிவிட்டு அவள் உள்ளே நுழைந்தபோது, அவன் அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தது போலிருந்தது.

அவளைக் கண்டதும் நிமிர்ந்து, "உனக்காகத்தான் வெயிட் பண்றேன்! இந்த வாரமே நான் சென்னைக்குப் போகணும். புது ஆர்டர் பத்தி தேவி சொல்லி இருப்பாங்களே...? நீயும் என் கூட வரவேண்டி இருக்கும்..." என்று கூறி நிறுத்தினான்.

உடனே வேகமாக நிமிர்ந்தவள், "நான் எப்படி உங்களோட தனியா...? ஸாரி! நான் வர முடியாது சார்... அப்பா விடமாட்டார்" என்றாள்.

அதே வேகத்தில் நிமிர்ந்த வீரேந்தரும், "ஏன்? நான் பெண்ணைக் கடிச்சித் தின்னுடுவேன்னு உங்கப்பாவுக்குப் பயமா?... கஷ்டம்டா! சாதாரணமாவே எனக்குப் பெண்கள்னா பிடிக்காது. அதுவும் உன்னை..! அவ்வளவு பயந்தா நீ வரவேண்டாம்... நான் மட்டும் போறேன். நீ போகலாம்" என்று கோபத்துடன் கூறிவிட்டு, அவளுடன் மேலே பேச விருப்பமில்லாதவன் போல், தன் வேலையில் மூழ்கினான்.

மாலையில் வீட்டுக்கு வந்த தீக்ஷா, இது பற்றிக் கேசவனிடம் கூறினாள்.

"ஏம்மா... எத்தனை நாள்னு கேட்டியா...? நானும் கூட வரேனே! நாம ரெண்டு பேரும், அத்தை வீட்ல தங்கிப்போம்... நீ ஆபீஸ் வேலையைப் பாரு... முடிஞ்ச உடனே திரும்பிடலாம்" என்றார்.

கேசவனின் அக்கா சம்பூரணி சென்னையில் இருக்கிறார்.

அங்கு போய் வெகு நாட்கள் ஆவதால், கேசவனுக்குப் போகலாம் என்று தோன்றியது.



"பார்க்கலாம்ப்பா!" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அன்றிரவு வெகு நேரம் யோசித்துவிட்டுப் பிறகு, போகலாமென்ற முடிவுக்கு வந்தபோது, உள்ளே மின்மினிப் பூக்கள் மலர்ந்தன.

* * *

**கா**லையில் கம்பெனிக்குச் சென்றவுடன், வீரேந்திரிடம் மெதுவாய் பேசினாள் தீக்ஷா.

"ஸார்! ஊருக்கு அப்பாவும் கூட வரேன்னு சொன்னார். நாங்க, கிளம்பி வந்திடறோம்... என்னைக்குன்னு சொன்னா டிக்கெட் புக் பண்ணிடறேன்னு சொன்னார்... நாங்க எங்க அத்தை வீட்டுலத் தங்கிக்கிறோம்... எத்தனை நாள் வேலை இருக்கும்னு சொன்னா, எனக்கு பேக் பண்ண வசதியா இருக்கும்" என்று நிறுத்தினாள்.

அவன், முகத்தில் எந்த உணர்ச்சியும் இன்றி நிமிர்ந்தான்.

"நானே புக் பண்ணிடறேன்... அங்க நான் தங்கற மாதிரி இருக்கும்" என்று கூறிவிட்டுக் குனிந்து திரும்பவும் வேலையில் மூழ்கினான்.

அவர்களுக்கும் சேர்த்து, டிக்கெட்டை அவனே முதல் வகுப்பில் ஏற்பாடு செய்திருந்ததால், மூவரும் கிளம்பிச் சென்றனர்.

அவர்கள் இருவரும், அத்தையின் வீட்டுக்குச் செல்ல, அது கூட்டுக் குடும்பமாதலால், பொழுது இமைக்க நேரமின்றிச் சென்றது தீக்ஷாவுக்கு!

மறுநாளிலிருந்து, வேலைகள் சரியாக இருந்தன.

காலையில் அவளை அழைத்துச் செல்ல, கம்பெனியிலிருந்து கார் வந்து விடும்.

அவர்களுடைய சென்னை அலுவலகத்தில் வேகமாக புது புராஜக்ட் வேலை நடந்தது.

மாலையில் வீரேந்தரே கொண்டு வந்து, விட்டுச் சென்றான்.

நான்கு நாட்களும், ஆரம்பக் கட்ட வேலைகள், முழு வேகத்துடன் செய்து முடிக்கப்பட்டன.

அன்று நீக்ஷண்யா வீடு திரும்பியபோது, கேசவன் காத்திருந்தார்.

அன்று இரவு கதிரேசன், தங்கள் வீட்டுக்குச் சாப்பிட இருவரையும் அழைத்திருப்பதாகக் கூறினார்.

சிறிது நேரத்தில், கதிரேசனே அவளிடம் பேசி, தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தார்.

பெரியவரின் வார்த்தைக்கு மதிப்பளித்து, 'சரி' என்றாள் அவள்.

ஆனால், வீரேனை அவன் வீட்டிலேயே சந்திக்கப் போவதை எண்ணியபோது, கடிவாளமில்லாத புரவியாய் மனம் தாவியது.

இரவு, இருவரும் வீரேந்தரின் வீட்டுக்குச் சென்றனர்.

அவன் வீடு அண்ணா நகரில் பெரிய தோட்டத்தின் நடுவே, அழகாக அமைந்து இருந்தது.

அவர்கள் இருவரையும், கதிரேசன் வாசலுக்கே வந்து வரவேற்றார்.

பின்னாலேயே வரவேற்ற ஒரு பெண்மணியைத் தன் தங்கை காந்தா என அறிமுகப்படுத்தியவர், கணவர் இறந்த பின் அவர் தன்னுடனேயே இருப்பதாகக் கூறினார்.



மாடியிலிருந்து இறங்கி வந்த வீரேந்தர், கேசவனை மட்டும் வரவேற்றவன், அவள் இருந்த பக்கம் திரும்பவே யில்லை.

சிறிது நேரம், மூன்று பேரும் பேசிக் கொண்டிருந்தனர்.

பிறகு வீரேனிடம் திரும்பிய கதிரேசன், நீக்ஷண்யாவுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பிக்கும்படிக் கூறினார்.

ஏதோ யோசனையுடன் எழுந்தவன், ஒரு கண் அசைவில் அவளைத் தன்னுடன் வரும்படி அழைத்தான்.

மெதுவாக எழுந்து பின் தொடர்ந்த அவளுக்குத் தன் வீட்டை மௌனமாகச் சுற்றிக் காட்டினான்.

வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் பணக்காரத் தனமும் செழிப்பும் தெரிய, நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

எல்லாவற்றையும் ரசித்துக் கொண்டே சென்றவள், வீரேந்தரிடம் திரும்பினாள்.

''உங்க அம்மா எங்கே..? அவங்க இப்ப இங்கே இல்லையா?'' என்று இயல்பாகக் கேட்க, ஒரு கணம் அசைவற்று நின்ற வீரேந்தர் ஒன்றுமே கூறவில்லை!

அவனிடம், ஏதோ ஒரு மாற்றம் பெரிதாகத் தெரிந்தது.

அவனுடைய உடலில், திடீரென்று ஒரு இறுகிய தன்மை வந்தது.

அவன் ஒரு வேளை தாயின் இழப்பில் வேதனைப் படுகிறானோ என்று எண்ணி, ''ஸாரி! நான் உங்க அம்மாவை ஞாபகப்படுத்திட்டேன்... அவங்க இப்ப..?'' என்று கேள்வியை முடிக்காமலேயே நிறுத்தினாள் அவள்.

திரும்பி நின்றிருந்த அவன் உடம்பு, திடீரென்று விரைத்து நிமிர்ந்து, கைகள் இறுகின.

அவளை இடைமறித்தது அவன் குரல்!

"என்ன கேட்டே..? அவங்க இப்ப எங்கேன்னா? எங்களைப் பொறுத்தவரைக்கும் அவங்க சின்ன வயதிலேயே இறந்துட்டாங்க... ஆனா இன்னும் உயிரோட இன்னொருத்தரோட வாழ்ந்துட்டு இருக்காங்க..." என்றவனின் கண்கள் சிவந்து அளவிட முடியாத கோபமும் வேதனையும், முகத்தில் தெரிந்தன.

அவளுக்குள்ளும், ஏனோ உயிர் வரை வலித்தது.

* * *

தீக்ஷன்யா மிகுந்த வருத்தத்துடன், "ஸாரி! இப்படின்னு எனக்குத் தெரியாது... ஸாரி!" வேதனையுடன் கூறினாள்.

எதனாலோ, தன் மனதில் இருந்த வேதனையை அவன் வார்த்தைகளாகக் கொட்டினான்.

தன் அம்மா, திருமணத்துக்கு முன்பே, யாரையோ விரும்பியதையும், தான் பிறந்தவுடன், விருப்பமில்லாத தன் திருமணத்திலிருந்து விலகி, விவாகரத்துப் பெற்று, தன் முன்னாள் காதலனுடன் வடநாட்டுக்குச் சென்று விட்டதையும் கூறினான்.

வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் மிகுந்து இருந்தன, அவனுடைய வார்த்தைகளில்...!

தன்னால் வீரேந்தருடைய சோகத்தையும், மனப்பாரத்தையும் சிறிதளவாவது குறைக்க முடியுமா என்ற தவிப்பும், ஆதங்கமும் ஏற்பட்டன, தீக்ஷாவுக்கு!



மெல்ல அவன் அருகில் சென்றவள், மெதுவாக அவன் கையைப் பிடித்து அழுத்தி ஆறுதல் சொன்னாள்.

அவளின் தொடுகையிலேயே அவள் வருத்தம் தெரிவதாய்...! அவனை ஆறுதல் படுத்த வேண்டும் என்ற ஆதங்கம் புரிவதாய்...!

அப்போது வீரேனைப் பார்த்தால், ஒரு வளர்ந்த குழந்தையைப் போல் அவளுக்குத் தோன்றியது.

ஏனோ, மனதில் ஆழமாக அவனைப் பற்றிய கவலை தீண்டியது.

காயம்பட்ட அவன் மனதை ஆற்றும் சக்தியைக் கொடு என்று இதயம் இறைவனிடம் இறைஞ்சியபடி, அவள் மனம், அவனுக்காக மாபெரும் வேள்வி செய்தது.

வீரேனின் முகம், எந்த உணர்ச்சியும் இன்றி, இறுக்கமாக இருந்தது.

கண்கள் மட்டுமே அவன் காயப்பட்ட ரணத்தைக் கூறின...!

மனதின் வேதனைகள் வார்த்தைகளாக வெளிப்படவில்லை... அவன் வாய்ச் சொல்லில் விருப்பம் இல்லாதவனாக இருந்தான்.

கைகளின் இறுக்கத்தில், அவன் மனதில் விளைந்த புழுக்கம் தெரிவதாய்!

அவனைப் பார்க்கும்போது, அழுத்தமும் மென்மையும் கலந்த, இரும்பு மனிதனாகத் தோன்றினான்.

சிறிது நேரத்தில் தன்னை இயல்பாக்கிக் கொண்டவன், அவளிடம் திரும்பினான்.

''அதனாலேயே பெண்களை நான் நம்பறதில்லை... என் மதிப்பிலே பெண்கள் எப்பவும் உயரப் போறது இல்லை'' என்றான், எங்கோ தன் பார்வையைப் பதித்து...

அவள் உடனே, ''எல்லாப் பெண்களும் அப்படி இல்லை... நல்லவங்களும் இருக்காங்க!'' என்றாள்.

வேகமாகத் திரும்பி, அவளைப் பார்த்தவனின் கண்களில், நெருப்பின் சீற்றம் தெரிந்தது.

அது எடையற்று எங்கும் பரவி அலை பாய்ந்து, அவளையும் தகிப்பதாய்...!

தீக்ஷாவும், ''நான் அப்படி எல்லாம்...'' என்று ஆரம்பித்து, தன்னிலை விளக்கம் கொடுக்க நினைத்தவள், உடனே தலையைக் குலுக்கி, வார்த்தைகளை விலக்கி நிறுத்தினாள்.

''நீ என்ன ரொம்ப ஒழுங்கா...? நான் அப்படி எல்லாம் இல்லைன்னு வார்த்தையிலே சொன்னா பத்தாது... நீயும் கிரியை ஏமாத்தினவ தானே...?'' என்றான் சீற்றத்துடன்.

'இல்லை' என்று மறுக்க நினைத்த மனதை அடக்கியவளுக்கு, 'கடவுளே இவனை நான் நல்லவிதமாக சந்தித்திருக்கக் கூடாதா'வென்ற ஏக்கம், சுவாசச் சீறலாய் எழுந்தது.

யசோதாவின் யாசகம் செய்த முகம் அவளை அடக்க, ஒன்றும் பேசாமல் வேகமாகத் திரும்பிச் சென்று, தந்தையுடன் அமர்ந்து கொண்டாள் அவள்.

அவளின் முகம், அணிந்திருந்த இளஞ் சிவப்பு நிறப் புடவைக்கு இணையாக, சிவந்து இருந்தது.

அவளையே, யோசனையுடன் கவனித்த கதிரேசன், ''வீரேன் எங்கேம்மா?'' என்றார்.



''மாடியிலே இருக்கார்... வரேன்னார் அங்கிள்!'' என்று கூறவும், ''சரி வாங்க! நாம் சாப்பிடலாம்'' என்று அழைத்துச் சென்றார் அவர்.

அப்போது கீழே வந்து வீரேந்தரும், கேசவனின் அருகில் அமர்ந்து இயல்பாகப் பேசிக் கொண்டே சாப்பிடத் தொடங்கினான்.

எந்தவித பாதிப்பும் இன்றி இருந்தது அவன் முகம்!

எந்தவிதமானக் கஷ்டங்களில் இருந்தும், எளிதாக விடுபடும் வித்தை தெரிந்தவன் என்று, அவனைப் பற்றித் தோன்றியது.

பனிப் பாறையாய் இறுகி இருக்கும் அவன் மனதை, உருகச் செய்யும் வித்தை தெரியாமல், தவித்தது அவள் மனம்!

அவன் நினைவுகளே அவளைத் துண்டாடின.

'என் இதயத்தை என் அனுமதி இல்லாமலே கவர்ந்து சென்ற நீ, இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?' என்ற கேள்வி நெஞ்சுக்குள் விரவிப் பரவியது.

## 8



மறுநாள், ஒரு கான்ஃபரன்ஸ் இருந்தது.

அன்று தான் கடைசி நாள்! பிறகு ஊருக்குக் கிளம்ப வேண்டும்.

அங்கு வீரேந்தருடன், அசிஸ்டெண்ட் என்ற முறையில் தீக்ஷாவும் சென்றிருந்தாள்.

டாப்பில் பதித்துக் கொண்டாள்.

கான்ஃபரன்ஸில் ஆர்க்கிடெக்ட் சார்பில் வீரேந்தரும் பேசினான்.

அனாவசிய அலட்டல் இன்றி, ஆணித்தரமாக அவன் பேசும்போது, அவன் கம்பீரம், அவள் கண்களைக் கவர்ந்து, இதயத்தில் தைத்தது.

எல்லோரும் பேசி முடித்தவுடன், சாப்பிடத் தொடங்கினார்கள்.

தன் கறுப்பு நிற கிரேப் சேலையில், முழுவதும் எம்பிராய்டரியும், ஜர்தூசி ஒர்க்கும் செய்த ரவிக்கையும் அணிந்து, தனி அழகோடு ஒளிர்ந்தாள் தீக்ஷா.

மைக்கேல் ஆஞ்சலோவின் சிற்பம் போல் நின்றிருந்தவளை, அவனுடைய விழிகள் ஏளனச் சோம்பலுடன் வருடின.

அவனுடைய தந்த நிறத்தை, மேலும் எடுத்துக் காட்டியது அந்தக் கறுப்பு நிறச் சேலை!

அன்று, அவள் கிளம்பி வரும்போதே, அவனுடைய கண்கள், ஒரு நொடி அதிகமாக அவள் மேல் படிந்து, அளவெடுத்து விலகியது, நினைவு வந்தது.

இருவரும் அமர்ந்து சாப்பிடும்போது, பஃபே முறை என்பதால், கூடவே சிலரும் அமர்ந்து சாப்பிட்டனர்.

இன்னொரு அறையில் 'பார்' அமைத்திருந்தார்கள். அங்கும் சிலர், சென்று வந்து கொண்டு இருந்தார்கள்.

அப்படிச் சென்று வந்த ஒருவன், திடீரென்று அவள் அருகில் வந்து அமர்ந்தான்.



''ஹலோ, மேடம்! நான் வந்ததிலிருந்து உங்களைத்தான் கவனிச்சிட்டு இருக்கேன்...! எனக்குக் கம்பெனி கொடுக்க முடியுமா?'' கை நீட்டிக் கேட்டான்.

தீக்ஷண்யாவுக்கு, உள்ளார்ந்த பயத்தில் ஒரு நிமிடம் முகம் வெளுத்து, மனம் படபடத்தது.

ஆனால், வீரேனின் குரல் சோம்பலாக இடையிட்டது.

''ஸாரி! ஷீ இஸ் மைன்!'' என்று அது கூறியது... எதிர்பாராத விதமாக!

''ஸாரி! ஸாரி!'' என்று கைகளை விரித்தபடி, தள்ளாடி எழுந்து செல்லும் அவனைப் பார்த்தால், மனதில் அருவெறுப்பு வந்தது, தீக்ஷாவுக்கு!

உடனே நன்றியுடன் திரும்பி வீரேனைப் பார்த்தால், அவன் கண்களில் பெரும் சீற்றம் தெரிந்தது!

வார்த்தைகள், தீப்பிழம்பாய் வெளிவந்தன.

''பாவம், அவனுக்கு உன்னைப் பத்தித் தெரியாது... நீ, கூப்பிட்டா அவனோட உடனே போயிடுவேன்னு எனக்குத்தானே தெரியும்... ஆனா என்ன பண்றது? என் மானத்தைக் காப்பாத்திக்கணுமே... அதான் அப்படிப் பொய் சொன்னேன்'' என்றான் நக்கலாக!

உடனே நிமிர்ந்து, ''உன் குணத்துக்குப் பொருத்தமான நிறம்'' என்று அவள் சேலையை அளவிட்டான்.

அவனுடைய சொற்கள், காட்டுத் தீயாய் பரவித் தகித்தன.

அவர்களிடையே அதுவரை இருந்து வந்த நட்பு என்ற ஒன்று அழிவுபட்டு, சேதங்கள் மட்டுமே அவள் மனதில் மிச்சமாகின!

அவள் கோபம் கலந்த வேதனையுடன், வேகமாக எழுந்து, திரும்பியும் பாராமல் வெளியே சென்று, ஒரு டாக்ஸி பிடித்துத் தன் அத்தையின் வீட்டுக்குச் சென்றாள்.

விழிகளில், கோபமும் இயலாமையும் இணைந்து ஜனித்து செஞ்சுடர்த் துளியாய் வழிந்தது... ஒற்றைக் கண்ணீர்த் துளி!

அவள் தனியே வருவதைக் கண்ட கேசவன், "ஏம்மா? வீரேன் வரலை? நீ மட்டும் வரே?" என்றார்.

"அவர் வர லேட்டாகும் போல் இருந்ததுப்பா... நான் டாக்ஸி பிடிச்சு வந்திட்டேன்" என்று கூறியவள், அத்தையிடம் சென்று தலை வலிப்பதாகக் கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்று படுத்து விட்டாள்.

அவளுக்குத் தலை பாரமாகி வலித்தது.

எங்கோ போன் ஒலிக்கும் ஓசை கேட்க, அவளின் அறைக் கதவைத் தட்டிவிட்டு, கேசவன் உள்ளே வந்து பார்த்தார்.

அவள் உறங்குவதுபோல் படுத்திருக்கவும், அவர் திரும்பிச் செல்வது தெரிந்தது.

தீக்ஷாவுக்கு, இரவு வெகு நேரம் உறக்கம் வரவில்லை.

வீரேனின் சொற்கள் அம்பாய் தைத்தன.

இப்போது ஒரு வண்ணத்துப் பூச்சி வந்து, அமர்ந்தால் கூட, அதன் பாரம் தாங்க முடியாது என்பது போல், இதயம் பலவீனமாய் துடித்தது.

அவன் வார்த்தைகளால், விழிநீர் இமைக் கதவுகளில் இருந்து எட்டிப் பார்த்துக் கதவுடைத்து, வெளிச்சென்றது.



மனதில் சிந்தனை வலைகள் பின்னலிட, விடியும் முன்பு தான் கண்ணயர்ந்தாள், தீக்ஷா!

* * *

காலையில் எழுந்தபோது, தீக்ஷாவுக்கு உடல் கணகணவென்று சூடாகி, முகம் சிவந்து போயிருந்தது.

பூரணி அத்தை பயந்து போய், அவளை அன்றிரவு ஊருக்குக் கிளம்ப வேண்டாம் என்றாள்.

அன்று இரவு ரயிலில், டிக்கெட் பதிவு செய்து இருந்தான், வீரேன்.

"எனக்கு ஒண்ணுமில்லை அத்தை.." என்று கூறும்போதே கேசவன் வந்தார்.

பரிவுடன் அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்து விட்டு, "பேசாம அத்தை சொல்ற மாதிரி ரெஸ்ட் எடுத்துட்டுப் போலாமா? வீரேந்தர் கிட்டே டிக்கெட்டைக் கேன்சல் பண்ணச் சொல்லிடறேன்... அப்புறம் நீ, நேத்து படுத்துத் தூங்கின உடனே வீரேந்தர் போன் செஞ்சாரும்மா... நீ தூங்கிட்டேன்னு சொன்னேன். பத்திரமா வந்து சேர்ந்தியான்னு விசாரிக்கத்தான் போன் பண்ணினதா சொன்னார். பேசாம நாம தங்கிட்டுப் போலாம்மா" என்று கூறினார்.

"இல்லப்பா.. சரியாயிடும்! வேலை நிறைய இருக்கு! அதை விட்டுட்டு இங்கே உட்கார்ந்து இருக்க முடியாது. புது ப்ராஜெக்ட் சம்பந்தமா நிறைய செய்ய வேண்டி இருக்குப்பா..." என்று மறுத்து விட்டாள் அவள்.

காலையில் போன் செய்த வீரேன், அவளுக்குக் காய்ச்சல் என்று கேசவன் கூறியதும், நேரே வந்து விட்டான்.

படுக்கையில் சாய்ந்து அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

தலை கலைந்து, முகம் வெளிறி, உடைகள் நலுங்கிப் படுத்திருந்தபோதும், பழைய கால ரவிவர்மாவின் ஓவியம் போல் அழகாக இருந்தாள் அவள்.

அறைக்குள் வந்து, அவளைப் பார்த்தவன், அவளிடம் எதுவும் பேசாமல், கேசவனிடம் திரும்பினான்.

''இப்ப எப்படி இருக்கு அங்கிள்? வேணும்னா உங்க டிக்கெட்டைக் கேன்சல் பண்ணிட்டு, நான் மட்டும் போறேன். நார்மலான உடனே, நீங்க ரெண்டு பேரும் வாங்க'' என்றான்.

''இல்லப்பா. ஊரிலே வேலை இருக்காம். அதனால இவ கிளம்பணுங்கிறா... அங்க போய் பாத்துக்கலாங்கிறா... நாங்களும் வரோம்'' என்றார்.

வீரேன், ஒரு நிமிடம் அவளை ஆழ்ந்து நோக்கி விட்டு, ''டேக் கேர்'' என்று உலர்ந்த குரலில் கூறியவன், வெளியே சென்று விட்டான்.

அன்று இரவு, முதல் வகுப்பு கூபேயில், சால்வையும், போர்வையும் போர்த்திக்கொண்டு, சுருண்டு படுத்துக் கொண்டாள் தீக்ஷா.

எதிர் பர்த்தில் படுத்திருந்த வீரேந்தர், சிறிது நேரம் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

அவளுடைய கண்களுக்குள் ஏதோ உறுத்தது. தன்னை யாரோ, உற்றுப் பார்க்கும் உணர்வு அவளுள் எழுந்தது.

மனதிற்குள் ஏனோ படபடத்தது.

மறுபுறம் திரும்பிப் படுத்து, கண்களை இறுக மூடிக் கொண்டாள், தீக்ஷா.

அவளின் களைத்த முகம், ஆயிரம் மடல்களை, வாசித்தது, வீரேனுக்குள்!

தலையை உதறித் தன்னை நிலைப்படுத்தியவன், கண்களை மூடிப் பேசாமல் படுத்துக் கொண்டான்.

உறக்கம் இமைகளைத் தழுவ மறுத்து சத்தியாக்கிரகம் செய்தது!

* * *

மறுநாள் காலையில், ரயில் நிலையத்தில் இறங்கியதுமே, வீரேந்தர் கேசவனிடம் ''தீக்ஷண்யா நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு ஃபீவர் சரியானப்புறம் கம்பெனிக்கு வந்தாப் போதும், அங்கிள்!'' என்றான் வறண்ட குரலில்!

அவளுக்கும் யோசிப்பதற்கு நேரமும், தனிமையும் தேவையாக இருந்தன.

வீட்டில் படுத்து ஓய்வெடுத்த இரண்டு நாட்களும், அவள் தன் உள்ளத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினாள்.

அந்த இரு நாட்களும், அவளுக்கே அவளை அறிமுகப்படுத்தின... இதயத்தில் அபூர்வமாய்... குறிஞ்சிப் பூவாய் மலர்ந்திருந்தது, காதல்!

எவ்வளவுதான் மறுத்தாலும், தன் நெஞ்சத் தோட்டத்தில் முன்பே வீரேன் மலர ஆரம்பித்து இருப்பது புரிய வந்தது.

அவன் நினைவு முழுவதும் நெஞ்சில் வியாபித்து, காதல் பறவை வந்து இதயத்தில் கூடு கட்டியது புரிந்தது.

அன்று வீரேன், தன் தாயைப் பற்றிப் பேசும் போதே, அவனைப் பற்றித் தன் மனம் உடனே உணரத் துடித்ததும், இன்று புரிந்தது.

தன்னைப் பார்த்தாலே வெறுப்பைக் கக்கும் ஒருவனிடம், எப்படித் தன்மனம் வீழ்ந்தது என்பது புரியாத புதிராய் இருந்தது அவளுக்கு!

அவன் பேசிய சொற்களின் பதிவுகள் மட்டும் முட்களாய் நெஞ்சுக்குள் கீறிவிட, இனி வரும் நாட்களில் இந்த பொய்க் கனவு என்றுள் சாசவதமாகுமா? இல்லை, கானல் நீராய் கரைந்து போகுமாவென்ற அச்சமும் பரிதவிப்பும் விளைந்தன.

அவளுக்குத் தன் மேலேயே வெறுப்பு வந்து, தன் மனதில் காதலின் முதல் யுத்தம் தொடங்கி விட்டதும் தெரிவதாய்...!

இரண்டு நாட்கள் விடுமுறைக்குப் பிறகு, உடலும் மனமும் ஓரளவு தெளிந்து சரியானவுடன், கம்பெனிக்குக் கிளம்பிச் சென்றாள், தீக்ஷா.

அன்று, கேசவன் அவளைக் காரில் கொண்டு வந்து, கம்பெனியில் விட்டுச் சென்றார்.

வீரேன், அவளைக் கண்டதும், மெலிதாய்ப் புன்னகைத்தான்.

"எப்படி இருக்கே?" என்றதும், "நல்லா இருக்கேன்... தேங்க்ஸ்" என்று கூறிவிட்டு மௌனமாகத் தன் அறைக் குள் சென்றவளுக்கு, அந்த முதல் விசாரிப்பினால், ஆழ்மன வெளியில் சந்தோஷக் கனவுகளின் சுயம்வரம்!

ஆனால், அவள் முதல் நாள் இரவே, ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.



தன் மனதை, எந்த நேரத்திலும் வெளியிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள்.

அதற்கு முதல் வழி, அவனைத் தவிர்த்து விடுவதுதான் என்ற பதிலும் நிலைபெற்றது, அவளுக்குள்!

தன் அறைக்குள் சென்று, வேலைகளை ஆரம்பித்த சிறிது நேரத்தில், தேவி தன் அறைக்குள் வந்ததும், என்ன வென்று பார்வையை உயர்த்தினாள் தீக்ஷண்யா.

அவளைப் பார்த்து வெட்கத்துடன் புன்னகைத்த தேவி, அவளுடைய உடல்நிலையைப் பற்றி விசாரித்துவிட்டுத் தனக்குத் திருமணம் நிச்சயமாகி இருப்பதாகக் கூறினாள்.

"கங்கிராட்ஸ் தேவி! ரொம்ப சந்தோஷம்!" என்று வாழ்த்திவிட்டு, மாப்பிள்ளை என்ன செய்கிறார் என்று விசாரித்தாள் அவள்.

கல்லூரியில் லெக்சரராக இருப்பதாக அவள் கூறவும், சாக்லெட் எடுத்துக் கொண்டு கேலி செய்து அவளை அனுப்பிவிட்டு வேலையில் ஆழ்ந்தாள்.

தன் வாழ்க்கையில் திருமணம் என்ற ஒன்று, கனவில் மட்டும் தானோ என்று, எதிர்காலமே இல்லாத தன் காதல் நினைவுபடுத்தியது தீக்ஷாவுக்கு!

கம்ப்யூட்டரில், புது டிசைனை வரைந்து கொண்டு இருந்தபோது, அவளின் அறைக் கதவு திறந்தது.

"என்ன வேணும், தேவி..?" என்றபடி இயல்பாகத் திரும்பினால், கதவில் சாய்ந்தபடி அங்கு வீரேந்தர் நின்றிருந்தான்.

அவளுடைய வெளிறிய தோற்றம், வீரேந்தரை என்ன செய்ததோ, எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்,

அவளின் அருகே வந்து, அன்று உடனே அனுப்ப வேண்டிய முக்கியமான கடிதத்தைத் தயார் பண்ணச் சொல்லி விட்டு யோசனையுடன் வெளியே சென்றான்.

அவளுடைய பார்வை, அவன் திரும்பிச் செல்லும் வரை, அவன் தோள் வளைவிலேயே பதித்திருக்க, தீக்ஷா, அவன் முகத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை.

அவளின் செய்கை, வீரேனின் முகத்தில் ஏனோ யோசனையை வரவழைப்பதாய்!

ஆனால் அவன் போகும் வழியை, அவள் இதயம் தொடர்ந்தது... சருகாய் உலர்ந்தது!

9



நாட்கள் வேகமாக நகர்ந்தன.

எந்த மாற்றமும் இன்றி, வேலைகள் இயல்பாக நடந்தன.

வீரேனும், அவளும் அலுவலக விஷயமாக மட்டுமே பேசிக்கொள்ள இருவரிடமுமே ஒரு விதமான ஒதுக்கம் தெரிந்தது.

அதுவும், தீக்ஷா சென்னையிலிருந்து வந்ததிலிருந்து, அவன் முகம் பார்த்துப் பேசவதே இல்லை.

தேவி, தன் திருமணத்திற்காக, இருபது நாட்கள் விடுமுறை எடுத்திருந்ததால், வேலையும் அதிகமாக இருந்தது.

அவளுடைய திருமணத்திற்கு முதல் நாள் வரவேற்பு இருந்ததால், கேசவனும் தீக்ஷண்யாவும் வரவேற்பிற்குச் சென்றிருந்தனர்.

வெண் பட்டில், சரிகை இழைகள் கோர்த்த புடவையில், அழகாக மின்னினாள் தீக்ஷண்யா.

தேவி, அவளை மேடையில் தன் அருகிலேயே இருக்கச் சொல்லி இருந்ததால், அவளுடன் பரிசுப் பொருட்களை வாங்கி அடுக்கிக் கொண்டு இருந்தாள்.

அப்போது அழகான சந்தனக் கலர் சஃபாரியில் எதிரே வீரேந்தர் வந்து கொண்டிருந்தான்.

அவன் உயரத்துக்கும், உருவத்துக்கும் கம்பீரமாக இருந்தது அந்த உடை!

அவன் வாசலுக்கு அருகில் வரும்போதே கவனித்து விட்ட தீக்ஷா, ஒரு கணம் விழி அகல அவனை நோக்கி விட்டு, பிறகு வேகமாகத் திரும்பிக் கொண்டாள்.

வீரேந்தரும், உள்ளே வரும்போதே, அவளைக் கவனித்து விட்டான்.

அவன் கண்களின் பாஷை, அவள் மனதில் கவிதைகளாய்...!

மேடையேறி வந்ததும், அவளைப் பார்த்து, "என்ன? மேடையிலே ரெண்டு மணப்பெண்கள் இருக்காங்களேன்னு பார்த்தேன். ஓ... நீயா?..." என்று நக்கலான குரலில் கேட்டுவிட்டுப் பிறகு, தேவியிடமும், மாப்பிள்ளையிடமும் சென்று பேசிக் கைகுலுக்கி விட்டு, பரிசுப் பொருளைக் கொடுத்த பிறகு கீழே இறங்கிச் சென்றான்.

"தன்னை, மணப்பெண் போல் அழகு என்கின்றானா... இல்லை, தேவையில்லாமல் அலங்கரித்து நிற்பதாகக் கூறுகிறானா?" என்று இனம் பிரிக்க முடியாமல், அவள் இதயம் தடதடத்தது.

அவனைப் பற்றிய நினைவுகள் இதம் தராததால், அவற்றைத் தற்காலிகமாகத் தள்ளுபடி செய்துவிட்டு, தன் வேலையில் கவனம் செலுத்தினாள் தீக்ஷா.

அவளின் அருகே வந்து, அன்று உடனே அனுப்ப வேண்டிய முக்கியமான கடிதத்தைத் தயார் பண்ணச் சொல்லி விட்டு யோசனையுடன் வெளியே சென்றான்.

அவளுடைய பார்வை, அவன் திரும்பிச் செல்லும் வரை, அவன் தோள் வளைவிலேயே பதித்திருக்க, தீக்ஷா, அவன் முகத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை.

அவளின் செய்கை, வீரேனின் முகத்தில் ஏனோ யோசனையை வரவழைப்பதாய்!

ஆனால் அவன் போகும் வழியை, அவள் இதயம் தொடர்ந்தது... சருகாய் உலர்ந்தது!

## 9



நாட்கள் வேகமாக நகர்ந்தன.

எந்த மாற்றமும் இன்றி, வேலைகள் இயல்பாக நடந்தன.

வீரேனும், அவளும் அலுவலக விஷயமாக மட்டுமே பேசிக்கொள்ள இருவரிடமுமே ஒரு விதமான ஒதுக்கம் தெரிந்தது.

அதுவும், தீக்ஷா சென்னையிலிருந்து வந்ததிலிருந்து, அவன் முகம் பார்த்துப் பேசுவதே இல்லை.

தேவி, தன் திருமணத்திற்காக, இருபது நாட்கள் விடுமுறை எடுத்திருந்ததால், வேலையும் அதிகமாக இருந்தது.

அவளுடைய திருமணத்திற்கு முதல் நாள் வரவேற்பு இருந்ததால், கேசவனும் தீக்ஷண்யாவும் வரவேற்பிற்குச் சென்றிருந்தனர்.



வெண் பட்டில், சரிகை இழைகள் கோர்த்த புடவையில், அழகாக மின்னினாள் தீக்ஷண்யா.

தேவி, அவளை மேடையில் தன் அருகிலேயே இருக்கச் சொல்லி இருந்ததால், அவளுடன் பரிசுப் பொருட்களை வாங்கி அடுக்கிக் கொண்டு இருந்தாள்.

அப்போது அழகான சந்தனக் கலர் சஃபாரியில் எதிரே வீரேந்தர் வந்து கொண்டிருந்தான்.

அவன் உயரத்துக்கும், உருவத்துக்கும் கம்பீரமாக இருந்தது அந்த உடை!

அவன் வாசலுக்கு அருகில் வரும்போதே கவனித்து விட்ட தீக்ஷா, ஒரு கணம் விழி அகல அவனை நோக்கி விட்டு, பிறகு வேகமாகத் திரும்பிக் கொண்டாள்.

வீரேந்தரும், உள்ளே வரும்போதே, அவளைக் கவனித்து விட்டான்.

அவள் கண்களின் பாஷை, அவள் மனதில் கவிதைகளாய்..!

மேடையேறி வந்ததும், அவளைப் பார்த்து, "என்ன? மேடையிலே ரெண்டு மணப்பெண்கள் இருக்காங்களேன்னு பார்த்தேன். ஓ... நீயா?..." என்று நக்கலான குரலில் கேட்டுவிட்டுப் பிறகு, தேவியிடமும், மாப்பிள்ளையிடமும் சென்று பேசிக் கைகுலுக்கி விட்டு, பரிசுப் பொருளைக் கொடுத்த பிறகு கீழே இறங்கிச் சென்றான்.

"தன்னை, மணப்பெண் போல் அழகு என்கின்றானா... இல்லை, தேவையில்லாமல் அலங்கரித்து நிற்பதாகக் கூறுகிறானா?" என்று இனம் பிரிக்க முடியாமல், அவள் இதயம் தடதடத்தது.

அவனைப் பற்றிய நினைவுகள் இதம் தராததால், அவற்றைத் தற்காலிகமாகத் தள்ளுபடி செய்துவிட்டு, தன் வேலையில் கவனம் செலுத்தினாள் தீக்ஷா.

மற்றொரு புறமிருந்த மேடையில், ஒரு பக்கம், இசைக் குழுவினர் பாடிக் கொண்டிருந்தார்கள்.

"இதுதானா... இதுதானா... எதிர்பார்த்த நன்னாளும் இதுதானா?

இவன்தானா...இவன்தானா... மலர் சூட்டும் மணவாளன் இவன்தானா?"

சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி ஒலித்த பாடலைக் கேட்டு, தேவியைக் கண்களாலேயே கிண்டல் செய்து கொண்டு இருந்தாள் நீக்ஷா.

அந்த நேரம், அவளையே கவனித்துக் கொண்டிருந்தான் வீரேந்தர்.

அவள் முகத்தில் தெரிந்த கிண்டலையும், உதடுகளில் இயல்பாகத் தெரிந்த முறுவலையும், ஒரு கணம் தன்னை அறியாமல் ரசித்து விட்டுப் பிறகு, முகம் இறுகத் திரும்பிக் கொண்டான்.

ஏனோ கண்கள், அவள் பக்கமே சென்றன.

கேசவனின் அருகில் அமர்ந்திருந்த வீரேந்தர், இயல்பாகி, அவருடன் பேச ஆரம்பித்தான்.

தன் மகளை ரசித்துக் கொண்டிருந்த அவரும், திரும்பி கம்பெனியைப் பற்றி ஆவலுடன் விசாரித்து விட்டுப் பிறகு, நீக்ஷன்யாவின் திருமணப் பேச்சில் முடித்தார்.

என்ன சொன்னாலும், நீக்ஷா இப்போது திருமணம் வேண்டாம் என்று மறுப்பதையும் அவனிடம் கூறினார்.

அவனும் யோசனையுடன், அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டு இருந்தான்... மனதில் மட்டும் வேறு எண்ணம் ஓடியது!



கல்யாணமாகிவிட்டால், ஜாலியாக ஆண் நண்பர்களுடன் ஊர் சுற்ற முடியாதே என்று மறுக்கிறாளோ என்று மனம் கோபமாக நினைத்தது.

பெண் இனத்தைப் பற்றி நினைத்தாலே ஆணி வேர் வரை கசந்தது.

பெண் என்னும் மாயை, தன்னைப் பேதலிக்கச் செய்து விடாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி நெஞ்சினுள் நிறைந்தது.

* * *

**வீ**ரேந்தரிடம் தன் பெண்ணைப் பற்றியே பேசிக் கொண்டிருந்த கேசவன், அவளைக் கண் ஜாடையில் கீழே வரும்படி அழைத்தார்.

தேவியிடம் சொல்லிவிட்டு, கீழே இறங்கி அவரிடம் சென்றாள் நீக்ஷா.

"என்னப்பா! ஏன் கூப்பிட்டீங்க? தேவி, அவங்க கூடவே இருக்கணும்கிறாங்க... நான் போகணும்!" என்றாள்.

"உன்னைப் பத்தித் தாம்மா, வீரேந்தர் கிட்ட பேசிட்டு இருந்தேன். நீ எப்பம்மா இந்த மாதிரி மண மேடையிலே வெக்கப்பட்டு நிக்கப் போறே? நானும் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீதான், சரின்னு சொல்லவே மாட்டேங்கிறே!" என்றார்.

கடுகின்ற பனித்துளியாய், அவர் வார்த்தைகள் உள் ளிறங்கின.

வீரேந்தரின் எதிரில், அப்பா ஏன் இப்படிப் பேசுகிறார் என்ற எண்ணம் மனதில் பதட்டத்தை ஏற்படுத்த, "வேற

ஏதாவது பேசுங்கப்பா... ப்ளீஸ்! இன்னும் என் மனசுக்குப் பிடிச்ச மாதிரி யாரையுமே நான் சந்திக்கலை" என்று தன் உள்ளத்தை மறைத்துப் பொய்யுரைத்தாள்.

வீரேந்திரின் புருவம் கேலி கலந்த கோபத்துடன் உயர்ந்தது.

கேசவனிடம் திரும்பி, "அங்கிள்! பேசாம கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணாம, அந்தக் காலம் மாதிரி சுயம்வரத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க. உங்க பெண், பார்த்துப் பழகி முடிவெடுக்கட்டும்" என்றான் குத்தலாக.

"பழகி" என்ற வார்த்தைக்கு, அவன் கொடுத்த அழுத்தம் புரியாமல், கேசவன் வெகுளியாகச் சிரித்தார்.

அதன் அர்த்தம் புரிந்த அவளால், சிரிக்க முடியவில்லை.

மனம் நெருஞ்சி முட்களைத் தம்முள் தடம் பதித்தது! விருட்டென்று திரும்பி, அந்த இடத்தை விட்டு அகன்றாள் தீக்ஷண்யா.

வேகமாகச் சென்று மேடை ஏறும்போதுதான், கையில் பரிசுடன் அங்கு கார்த்திக் நிற்பதைக் கண்டாள்.

அவளைக் கண்டதும் ஆச்சர்யமாகி "கார்த்திக்! நீங்க எங்க இங்க..?" என்று கேட்டபோதுதான், மாப்பிள்ளை வேலை செய்யும் அதே கல்லூரியில் தானும் பணிபுரிவதாகக் கூறினான் அவன்.

அவளிடம் உடனே வருவதாகக் கூறிச்சென்று, மணமக்களை வாழ்த்தி, பரிசைக் கொடுத்துவிட்டு வந்தவன், ஐஸ்வர்யாவைப் பற்றி அவளிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டுப் பிறகு, சாப்பிடச் சென்றான்.

கீழே இருந்து, அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த வீரேனுக்கு, மனம், தீக்குழம்புகளைச் சுமக்கும் எரிமலை போல் ஆனது.



தான் ஏன் காரணமின்றிக் கோபப்படுகிறோம் என்று மனம் எண்ணியபோது, கிரியின் சார்பில் தனக்குக் கோபம் வருகின்றது என்று, மனம் வேறு ஒரு புது வண்ணத்தைத் தீட்டியது.

சாப்பிடச் செல்லும்போது தீக்ஷாவையும் அழைத்துக் கொண்டு, சாப்பிடச் சென்று அமர்ந்தார் கேசவன்.

அருகில் ஒரு இடம் காலியாக இருந்தது.

யாருடனோ பேசிக் கொண்டிருந்த வீரேனை, வற்புறுத்திச் சாப்பிட அழைத்து வந்த தேவியின் தந்தை, அவள் அருகிலேயே அவனை அமர வைத்தார்.

மௌனமாக இருவரும் சாப்பிடும்போது, அவர்களைக் கடந்து சென்ற ஒருவர் தன் மனைவியிடம், "பாரேன்! என்ன அழகான ஜோடி...!" என்று அவர்கள் இருவரையும் காண்பித்துச் சொன்னார்.

அந்த அம்மாளும், "என் கண்ணே பட்டுடும் போல இருக்கு" என்று ஆமோதித்துவிட்டுச் சென்றார்.

அந்த கடு சொற்கள் விதைத்த பதட்டத்தில் வேகமாக எழுந்த தீக்ஷண்யா, சாப்பாட்டை முடிக்காமலே, கை கழுவச் சென்று விட்டாள்.

அவளின் இதயம் அசுரத்தனமாய் படபடத்தது.

அவள் எழுந்து போவதைக் கண்டதும், வீரேந்திரின் முகம் சிறுத்துப் போனது. உடனே அவனும் எழுந்து விட்டான்.

அவள் கை கழுவிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தவன், அவளுக்கு அருகிலேயே நின்று கை கழுவுவது போல் குனிந்து அவளிடம் சீண்டினான்.

"உலகத்துலே வேற பெண்ணே இல்லங்கற நிலைமை வந்தா மட்டும்தான், நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு யோசிப்பேன்கறது அவங்களுக்குத் தெரியாது. பாவம்..!" என்றான் எகத்தாளமாக.

சீற்றத்துடன் நிமிர்ந்த தீக்ஷண்யா, "எனக்கு, உலகத்திலேயே கடைசி ஆணா நீங்க இருக்கிற நிலை வந்தாக் கூட, நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு... பாவம் உங்களுக்குத் தெரியலை...!" என்று கூறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் விரைந்து சென்றாள்.

அவளையே யோசனையோடு கூர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தவனின் இதழில், மெலிதான கர்வப் புன்னகை ஒன்று வந்து, கோபத்துடன் குடியேறியது.

இருவரையும் கவனித்துக் கொண்டிருந்த கேசவனுக்குத்தான், ஒன்றுமே புரியவில்லை.

* * *

அடுத்த நாளில் இருந்தே, வீரேனிடம் ஒரு மாற்றம் தென்பட்டது.

அவளைக் கண்டவுடன் கோபம் கொள்ளும் தன்மை அடியோடு மாறி இருக்க, அவளிடம் இயல்பாகப் பேச ஆரம்பித்தான்.

தேவி இன்னும் வராததால், எல்லாவற்றுக்கும் தானே சென்று, அவனிடம் நிற்கும் நிலை வந்தது, தீக்ஷண்யாவுக்கும்!

அந்த நிலையே, அவர்கள் இருவருக்கும் இடையே, ஒரு அன்யோன்யத்தைத் தந்தது.

கம்பெனி விஷயங்களை, அவளுடன் கலந்து ஆலோசிக்க ஆரம்பித்தான் வீரேந்தர்.



அவர்களிடையே, புதிதாக ஒரு நட்புணர்வு, மெதுவாக இழை கோர்த்தது.

வீரேன், அவளுடன் ஒன்றாக அமர்ந்து, ஒரு நாள் 'லஞ்ச்' சாப்பிட்டான்.

தேவி வந்த பின்பும், பேச்சில் நட்பு கலந்த மரியாதையே இருவரிடமும் தெரிந்தது.

புது மணப் பெண்ணைக் கேலியும், கிண்டலும் செய்து கொண்டே, தீக்ஷண்யாவுக்குப் பொழுது போனது.

தினமும், கம்பெனியில் நடப்பவை பற்றி தீக்ஷா, கேசவனிடம் கூறும்போது, அவருக்குப் பெருமையாக இருக்கும்.

வீரேனும், தீக்ஷாவும் சேர்ந்து ஒரு பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்சுக்கு முன்புற முகப்பு வேலைக்கு டிசைன் பண்ணி முடித்தனர்.

அது, அந்த ஊரின் சிறந்த முகப்பு வேலையாகத் தேர்வு செய்யப்பட்டது.

அதைப் பற்றி தீக்ஷண்யா கூறவும் பெருமையாக இருந்தது, கேசவனுக்கு!

மறுவாரமே அந்தக் கட்டிட உரிமையாளர், ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

பரிசு வழங்கும் விழாவில், அந்தப் பரிசை வாங்குவதற்கு மேடையேறிச் சென்ற வீரேந்தர், மைக்கிடம் சென்று, தீக்ஷண்யாவை மேலே வரும்படி அழைத்தான்.

அவள் வந்ததும், "இது இருவரின் கூட்டு முயற்சி" என்று கூறி, அவள் கையில் பரிசைக் கொடுத்தான்.

அவளுக்குப் பெருமையுடன், மெலிதான கூச்சம் வர, பரிசை அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு, சிறு புன்னகையுடன் கீழே வந்து விட்டாள்.

கண்களில் கோடிக் கனவுகளைச் சுமந்தபடி, மனம் ஒற்றைக் காலில் நிற்கும் சிலையைப் போல் தவமிருப்பது, புரிவதாய்!

அருகில் வந்தவளைக் கேசவன் பெருமையாக அணைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டு இருந்தவனிடம் அறிமுகப்படுத்தினார்.

அவனுக்கும் வீரேனின் வயதுதான் இருக்கும்.

"கைலாஷ்!" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவன், தன் தொழிலைப் பற்றி அவளிடம் வெகு நேரம் பேசிக்கொண்டு இருந்தான்.

அவளும், ஆர்க்கிடெக்ட் என்பதால் பேச்சு தடையின்றிச் சென்றது.

கேசவன், வேறு நண்பருடன் பேசச் சென்றுவிட, அவர்கள் இருவருமே பேசிக் கொண்டு இருந்தனர்.

வேலையில் ஏதாவது பிரச்சனை வந்தால், தயங்காமல் தன்னை வந்து சந்திக்கும்படி கூறி, தன் விசிட்டிங் கார்டை அவளிடம் கொடுத்தான் அவன்.

அவர்கள், இருவரையும் ஓரக் கண்ணால் கூர்ந்து கவனித்துக் கொண்டே, பிறரிடம் பேசிக் கொண்டிருந்த வீரேனின் கண்கள், தீக்கங்குகளாய்!

இது எதுவுமே அறியாத தீக்ஷன்யா, இதுவே தன் அப்பாவின் கம்பெனியாக இருந்திருந்தால், இந்தப் பெருமை முழுவதும் அவரைச் சேர்ந்திருக்குமே என்று ஆதங்கத்துடன் நினைத்தாள்.

* * *

மறுநாள் காலை, கம்பெனிக்கு வந்தபோது, அவளை ஒரு நிமிடம் நிறுத்தியவன், "வேற பெரிய இடத்துலருந்



தெல்லாம், வேலை தேடி வருது போலிருக்கு...!" என்றான், கிண்டலாக.

தீக்ஷன்யா எதுவும் பேசாமல் ஃபைலை மார்போடு அணைத்துக் கொண்டு, திரும்பிச் சென்று விட்டாள்.

நேற்றைய இதம், இன்று தொலைந்து போயிருந்தது.

அந்த வாரமே, அவர்களுக்கு விருது கிடைத்ததன் காரணமாக, இன்னொரு புது ப்ராஜெக்ட் கிடைத்தது.

இருவருக்குமே அதில் மிகவும் சந்தோஷம்! அதைக் கொண்டாட, அந்த வார இறுதியில், அலுவலகத்தில் வேலை செய்பவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு ஊட்டிக்குச் சென்று வரலாம் என்று திட்டமிட்டான் வீரேந்தர்.

எல்லோரும் மகிழ்ச்சியாக ஒத்துக்கொள்ள, ஒரு மாற்றம் தேவை என்பதால் தீக்ஷாவும் சரியென்றாள்.

காதல் கடலில், விழிமீன்கள் தூண்டில் போட, மனம் மாட்டிக் கொண்டது மட்டும், தெளிவாகப் புரிந்தது.

அவனுடன் இணைந்திருக்கக் கூடிய நிமிடங்களை எதிர் நோக்கி மனம் தவமிருக்க ஆரம்பிப்பதாய்...!

நெஞ்சுக்குள் சுக சந்தங்கள் சாரலாய் விழுந்தன.

## 10



ஊட்டியில் அனைவரும் தங்குவதற்கு, கெஸ்ட் ஹவுஸ் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டு டெம்போ டிராவலர் வேனில், இருபது பேருக்கு மேல் சென்றனர்.

சனிக் கிழமையன்று விடிகாலையிலேயே அனைவரும் கிளம்பிச் சென்றபோது, தீக்ஷண்யா, ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

ஆதவன், உலகுக்கு ஒளிதரும் சூரியப் பிழம்பாக, தன் சிவந்த கதிர்களை பூமியில் விரித்துக் கொண்டிருந்தான்.

இயற்கை எழிலும், மலை அரசியின் அழகும் உள்ளத்தைக் கொள்ளையிட்டன. அவளுடைய மனதில் உற்சாகம் ஊற்றெடுத்தது.

எல்லோருமே சந்தோஷமான மன நிலையில் இருந்தனர். கை தட்டிக் கொண்டு பாடியபடியே, பயணத்தை ரசித்தனர்.

முதலில் வீரேந்தருக்காகப் பார்த்தாலும், பிறகு உற்சாக மிகுதியில் ஆரவாரமாய்ச் சென்றனர்.

வீட்டிக்குப் போய்ச் சேர்ந்து, டிபன் சாப்பிட்டு விட்டு நேரே தொட்ட பெட்டாவுக்குச் சென்றபோது, வழி முழுவதும் மஞ்சள் பூக்கள், மனதை நிறைத்து, மலரச் செய்வதாய்...!

அங்கு சென்று இறங்கியவுடன், சரிவான நடை பாதையில் இறங்கிச் சென்று, தடுப்புக் கம்பியின் கீழ் பார்த்தபோது, பரந்து விரிந்த பள்ளத்தாக்கைக் கண்டு உடல் சிலிர்த்தது, தீக்ஷாவுக்கு!

இரு கைகளையும் கன்னத்தில் பதித்தபடி, அனைத்தையும் ரசித்தாள் அவள்.

இந்தியாவின் இரண்டாவது உயரமான சிகரத்தில் நிற்கிறோம் என்ற பெருமை மனதிற்குள் வந்தது.

எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மேகக்கூட்டம் மெல்ல மிதந்து வந்து, மெல்லிய இலவம் பஞ்சு போல், மேனியைத் தழுவிச் சென்றது.

மலை முகடுகளில், அமர்ந்து இருந்த மேகங்களைப் பார்த்தபோது, மனதிற்குள் மகிழ்ச்சி பொங்கிவிட, அவள், சிறு குழந்தை போல் அனைத்தையும் ரசித்தாள்.

எத்தனை முறை வந்து சென்றாலும், அலுக்காத மலை அழகு, அவளைத் தன் வசம் ஆட்படுத்திக் கொண்டது.

வானில் உருமாறும் மேகங்கள், யானையாய், முயலாய், பறவையாய் உருப்பெற்று, பின் கலைந்து சென்றன.

தன்னையே மறந்து, இயற்கையில் மூழ்கி இருந்தவளை, வீரேந்தரின் பார்வை தொடர்ந்து கொண்டே இருந்தது.

அவன் மனமும் லேசாகி, அவளையே அடிக்கடி கவனிக்கத் தோன்றியது.

“இவ்வளவு ரசனை உள்ளவள்... வெகுளித்தனம் கலந்த கோபத்துடன் எளிமையாக இருப்பவள்... எல்லோரிடமும் அன்பாகப் பழகுபவள்... எப்படிக் கெட்டவளாக இருக்க முடியும்?’ என்ற கேள்வி, முதன் முதலாக வீரேந்தருக்குள் எழுந்தது.

உடனே, அவள் எப்படிப்பட்டவளாக இருந்தாலும், என் தம்பியை ஏமாற்றியவள் என்ற எண்ணம் மட்டும் மனதில் மீண்டும் உறுதியாகி நிலைபெற்றது.

இதயத்தில் கோப நெருப்பைச் சுமந்து, கண்கள் எரிதழலாய் ஆகிவிட, அங்கு சுய விருப்பம் வேரறுக்கப் பட்டது.

தீக்ஷா, இது எதையுமே கவனிக்கவில்லை.

பொதுவாக, ஆழ்ந்து ரசிக்கும் மனம், எப்போதுமே துணை தேடும் இயல்புடையதாய்...!

இன்று, தேவி தீக்ஷண்யாவுக்குத் துணையாக அமைந்தாள்.

தன் எண்ணங்களில் மூழ்கி, இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த தீக்ஷா, ஒரு முறை தன்னைச் சுற்றிப் பார்த்த போது, வீரேன் மலை உச்சியில், தன் பார்வையைப் பதித்து, தீவிரமாக ஏதோ யோசித்துக் கொண்டு இருந்ததைக் கண்டாள்.

தொட்டபெட்டாவிலிருந்து, ஊட்டிக்கு வந்து சாப்பிட்டு விட்டு, ரோஸ் கார்டனுக்குச் சென்றனர்.

ரோஜாத் தோட்டம், வெகு அழகாக இருந்தது.

ஒவ்வொரு மலரும், பெரிதாக, தனி அழகோடு இருந்தது. மெதுவாக நடந்து ரசித்துக் கொண்டே சென்றாள் தீக்ஷண்யா.

ரோஜா இதழ்களின் மேல் ஜனித்திருந்த பனித்துளிகள், இதயத்தை சில்லென்று வருடும் நேரம், மாலைப் பொழுது மங்கி இருள் வர ஆரம்பித்தது.

கார்டனிலிருந்து திரும்பி, கெஸ்ட் ஹவுசுக்கு வரும் போது, திடீரென்று வானம் இருட்டியது.

அங்கிருந்த கறுப்பு ரோஜாவைப் போல, வானமும் கருஞ் சிவப்பாய் மாறி, சிறு தூரலாய் சாரல் தெளித்தது.

பன்னீரை சிந்துவது போல் இதமான சாரலாகிப் பிறகு நின்று, வானம் உடனே தெளிந்தது.

* * *

**அ**ன்று இரவு, அவர்கள் தங்கி இருந்த கெஸ்ட் ஹவுசின் வெளியே அமர்ந்து, சிறு சுள்ளிகளைக் கொண்டு தீ மூட்டி, அதைச் சுற்றிக் குளிர் காயும் விதமாக அனைவரும் அமர்ந்து கொண்டனர்.



'பான் ஃபயர்' அழகாக எரிந்து கொண்டிருந்தது.

சில்லென்ற குளிருக்கு, பரவிவந்த அந்த சூடு, இதமாக, விரவிப் பரவுவதாய்!

எல்லோரும் உற்சாகமான மனநிலையில் இருந்தார்கள். கை தட்டி, பாடிக் கொண்டே இருந்தவர்கள், "பாட்டுக்குப் பாட்டு" போட்டி வைத்தபோது, வரிசையாக ஒருவர் முடித்த இடத்தில் அடுத்தவர் தொடர்ந்து பாடினர்.

வரிசையாக வந்து, வீரேந்தரின் முறை வந்தபோது, "அ" என்ற எழுத்து அவனுக்கு வந்தது.

ஒரு நொடி யோசித்துவிட்டு, பின் ஓரக்கண்ணால் தீக்ஷாவைப் பார்த்துவிட்டு, "அழகான ராட்சசியே..!" என்று பாடினான் அவன்.

அதன் பொருள் புரிந்து, அவள் கண்களில் செல்லமாய்க் கோபம் வந்தது.

அந்த நிமிடம் தரையில் எரிந்து கொண்டிருந்த தீயின் ஜ்வாலைகள் அவன் கண்களில் எதிரொலித்தன.

பாடிக் கொண்டே அவள் முறை வந்ததும், அவளுக்கும் "அ" எழுத்து வந்தது.

உடனே "அழகிய அசுரா! அழகிய அசுரா!" என்று பாடியவள், அடுத்த வரியைத் தொடர மனம் விழையும் முன்பே, அந்த வரிகளின் அர்த்து மீறல், தொண்டைக்குள் புகுந்து தடை செய்ய, பாட்டை நிறுத்தினாள்.

மனதில் அவனுக்குப் பதிலடி கொடுத்த திருப்தி வந்தது.

ஆட்டமும் பாட்டமுமாய் இரவு வெகு நேரம் ஆனது.

எல்லோரும் அலுப்புடன் படுக்கச் சென்ற பிறகும், தீக்ஷாவுக்குத் தூக்கம் வரவில்லை.

இரவின் துணையோடு, அவள் தோட்டத்தில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

முழுந்தாளிட்டு அமர்ந்து அதில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டவள், இரவின் அழகைக் கவிதையாக ரசிக்க ஆரம்பித்தாள்.

தென்றல் காற்றின் தெம்மாங்குச் சப்தமும், தேன் மலர்களின் தேவ நிசப்தமும், சில் வண்டுகளின் ரீங்காரமும், சிலு சிலுக்கும் குளிர் நேரமும், இரவின் இனிய கீதங்களாகத் தோன்றியது அவளுக்கு!

அணைந்தாலும், கனிந்து கொண்டிருந்த நெருப்பின் நிறம், அவள் முகத்தில் பட்டுத் தெறித்து, பவுர்ணமி நிலவாய் முகம் பிரகாசிப்பதாய்!

தங்கத்தை உருக்கி வார்த்த, கால் முளைத்த சிற்பம் போலிருந்தாள் அவள்.

தோட்டத்தில், அவள் தனியே அமர்ந்திருப்பது கண்டு, அவளை அழைக்க வந்த வீரேன், ஒரு நிமிடம். கவிஞனாக்கப்பட்டான்... அவன் விழிகள் அவளை ஸ்பரிசித்ததால்!

உள்ளம் ஒரு நொடி, கள் வெறி கொண்டது.

ஆனால் தன்னை அவள் ஆக்கிரமித்துக் கொண்டு விடுவாளோ என்ற பயம் மனதை ஆட்படுத்த தனது சிந்தனையைச் சிறைமீட்டு, பார்வையைத் திசை திருப்பி, தன் அறைக்கு வேகமாகத் திரும்பிச் சென்றான் வீரேந்தர்.

வேகமாக யாரோ நடக்கும் சப்தம் கேட்டு, தன் நினைவுகள் கலைந்து விழித்த தீக்ஷண்யாவுக்கு, திரும்பிச் செல்லும் அவன் உருவம் மட்டுமே கண்ணுக்குப் புலப்படுவதாய்!



என்ன கம்பீரமானவன் இவன் என்று ஒரு கணம் உடல் சிலிர்த்தது.

தன்னை அறியாமலே அவனிடம், மனம் மையல் கொண்டு விட, ஒரு பெருமூச்சுடன் எழுந்து உள்ளே சென்றாள் அவள்.

* * *

மறுநாளைய விடியல், ரம்யமாக இருந்தது.

விடியலை ரசிக்க, தோட்டத்துக்கு வந்திருந்த தீக்ஷண்யா, வானைப் பார்த்ததும், விழி விரித்தாள்.

"வானம்தான் எத்தனை அழகு... ஒரு நேரம் நெருப்பாய், ஒரு நேரம் குளிராய், சில நேரம் நிலாப் பெண்ணோடு கை கோர்த்து... சில நேரம் வானவில்லை அலங்கார வளைவாக்கி... பல நிறம் கொண்டு!" என்று மெய் சிலிர்த்தாள் அவள்.

காலையில் அனைவரும் கிளம்பி, காட்டுக்குப் போய் விட்டு, பைக்காரா ஏரிக்குச் சென்று போட்டிங் போனார்கள்.

விதவிதமான மலர்களும், விரிந்து பரந்த ஏரியும், அவள் மனதைத் தன் வசப்படுத்தின.

அன்று முழுவதும் வீரேந்தர், அவள் இருந்த பக்கம் கூட ஏனோ வரவில்லை.

ஏரியில் போட்டிங் செல்லும்போது, அவள் படகுத்துறைக்கு வரும் முன்பே, முதல் படகில் ஏறிச் சென்று விட்டான் வீரேன்.

காலையிலிருந்து, தனியாகவே ஏதோ யோசனையோடு சென்று கொண்டு இருந்தவனை, எல்லோரும் அவரவர் ரசனைகளில் இருந்ததால், கவனிக்கவும் இல்லை.

ஆனால் தீக்ஷாவுக்கு மட்டும், அவனிடம் ஏதோ ஒரு வித்யாசம் தெரிந்தது போல் இருந்தது.

இரண்டாவது படகில் ஏறிய தீக்ஷண்யா, அதே யோசனையுடன் போட்டிங் சென்று திரும்பி வந்தாள்.

படகுத் துறையில் பேண்ட் பாக்கெட்டில் கை விட்டபடி, அவள் வரும் படகையே, இடுங்கிய கண்களுடன் உறுத்துப் பார்த்துக் கொண்டு, நின்றிருந்தான் வீரேன்.

அவள் கரையில் கால் வைக்கும்போது படகு வேகமாக ஆட, அவள் பயத்துடன் நிமிர்ந்தபோது, வீரேனின் கரம், அவள் கையை லாகவமாய்ப் பிடித்து, மேலே அழைத்துக் கொண்டது.

அவனுடைய முதல் தொடுகை, அவளுக்குள் ஆயிரம் நேச விதை விதைத்து, இளைத் தளிர்களை அவளுக்குள் துளிர்க்க வைத்தன.

மனம் வானையும் வசப்படுத்த முடியுமா எனச் சிறகடித்துப் பறப்பதாய்...!

தன்னை, முதன் முதலில் சலனப்படுத்திய ஆண் மகனை எண்ணி மனதில் வெட்கம் வந்து, கன்னங்கள் ரோஜா மலராய்ச் சிவந்தன.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த வீரேந்தரின் கண்களில், ஒரு ஆச்சர்ய மின்னல் வந்து போனது.

பிரமிப்புடன் அவளையே பார்த்தவன், தன் விழிகளை, உடனே இடம் மாற்றித் தடம் பதித்தான்.

முகம் சொல்ல முடியாத கோபத்தில் இறுகியது.

அவனுக்குத் தன் மேலேயே ஒரு கணம் வெறுப்பு வந்துவிட, விழிகளை இறுக மூடிக் கொண்டான்.



திறந்தபோது, மீண்டும் விழிகளில் முன்பு மாதிரியே, ஒருவிதக் கடினம் குடிபுகுந்தது!

அனைவரும், அன்று முழுவதும் ஊர் சுற்றிப் பார்த்துக் கொண்டே, பொழுதைப் போக்கினர்.

கேசவனுக்கு ஸ்வெட்டர், ஸ்கார்ப், தைலம் எல்லாம் வாங்கிக் கொண்டவள், தனக்கும் ஐஸ்வர்யாவுக்கும் பெரிய பூங்கொத்துக்களை வாங்கினாள்.

ஊட்டியிலிருந்து, கோவைக்குத் திரும்பும்போது, எல்லோரும் உற்சாகமாக இருந்தாலும், வீரேனும் அவளும் மௌனமாகவே இருந்தனர்.

இருவரிடையேயும் ஒருவிதமான கனத்த மௌனம் நிலவியது.

அவளை வீட்டில் இறக்கிவிட்டு வேன் திரும்பிச் சென்றதும், தன்னிடமிருந்த ஏதோ ஒன்று விடுபட்டுச் செல்வதை உணர்ந்தாள் தீக்ஷா.

* * *

அடுத்த நாள், அலுவலகத்தில் வேலை மெதுவாகவே நடந்தது.

அனைவரும் ஒருவிதமான சோம்பலில் இருந்தனர். வீரேனும் அமைதியாக இருந்தான்.

மதியம், சாப்பிடும்போது தீக்ஷாவுக்கு போன் வந்தது.

கார்த்திக் தான் பேசினான்.

"ஐஸ்வர்யாவின் அப்பாவுக்குத் தங்கள் காதல் விஷயம் தெரிந்து விட்டதாகவும், அவனை உடனே வந்து தன் அப்பாவிடம் பேசம்படியும், தீக்ஷாவையும் அழைத்து வரும்படியும் ஐஸ்வர்யா கேட்டுக் கொண்டதால், உடனே

வந்து, அவளை அழைத்துக் கொண்டு செல்வதாகவும் பரபரப்புடன் கூறினான்.

தீக்ஷாவுக்கும் படபடப்பாக இருந்தது. என்ன சொல்வ தென்றே தெரியவில்லை.

கார்த்திக்கை வரச் சொல்லிவிட்டு, உடனே வீரேனின் அறைக்குச் சென்றாள்.

''ஸார்! எனக்கு லஞ்ச்சக்கு அப்புறம் மதியம் லீவ் வேணும்'' என்றாள்.

கார்த்திக்கிடமிருந்து போன் வந்தது முதல், அவனும் என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அதே நினைவில் ''நேற்றுதான் எல்லோரும் ஜாலியா ஊர் சுத்தினீங்க..? இன்னிக்கு என்ன?'' என்றான் கோபமாக.

''ம்.. பர்சனல்'' என்று கூறிவிட்டு, தீக்ஷண்யா அவன் ஒப்புதலுக்குக் காத்து நின்றபோது, அவன் கோபத்துடன் அவளை முறைத்துவிட்டு, ''சரி! போ!'' என்றான்.

தேவியின் அறைக்கு வந்து, விஷயம் கூறினாள் தீக்ஷா.

''எப்படிப் பேசப் போறேன்னு தெரியலை தேவி... பயமா இருக்கு! காதல்னாலே இந்த அப்பாங்கல்லாம் ஒத்துக்க மாட்டாங்க... கார்த்திக்கும் கூடவே வந்து பேசினாலும், என்னவோ பயமா இருக்கு'' என்றபோது, கதவு திறந்து உள்ளே வந்த வீரேனின் முகம், சிவந்து கோபத்தில் இருந்தது.

அவள் பேசியதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த வனின் மனதில், பெரும் சீற்றம் மையம் கொண்டது.

எப்போதும் இவன் ஏன் கோபத்துடன் இருக்கிறான் என்ற நினைவில், தீக்ஷா தன் அறைக்குள் வேகமாகச் சென்று விட்டாள்.



அவள் அவசரமாகக் கிளம்பி வெளியே சென்றவுடன், ஜன்னலருகே சென்று, வெளியே பார்வையைப் பதித்தான் வீரேன்.

கார்த்திக் காரில் வந்ததையும், அவள் அதில் ஏறிச் சென்றதையும் கண்ட அவனுக்கு உள்ளம் கொதித்தது.

கோபத்தில் இரண்டும் இரண்டும் ஐந்து என்று, உள்ளம் தப்புக் கணக்குப் போடுவதாய்...!

அவர்கள் ஐஸ்வர்யாவின் பங்களாவிற்குள் நுழையும் போதே, தீக்ஷா ராகவனிடம் என்ன பேச வேண்டும் என்பதை முடிவு செய்து விட்டாள்.

கார்த்திக்கை அறிமுகப்படுத்திவிட்டு, இருவரும் அவ ரிடம் வெகு நேரம் பேசினார்கள்.

ஐஸ்வர்யாவும் உறுதியாக இருக்கவே, வேறு வழியின்றி ஒத்துக் கொண்டவருக்கு, கார்த்திக்கையும் பிடித்துப் போனது.

திருமணத்திற்குப் பிறகு, அவன் தங்களுடனேயே இருக்க வேண்டும் என்ற கண்டிஷனுடன் ஒத்துக் கொண் டார் ராகவன்.

கார்த்திக்கும், தன் அக்காவைத் தவிர, தனக்கு யாரும் இல்லை என்பதால் அவர்களுடன் இருக்கச் சம்மதித்தான்.

தன் அக்காவை அழைத்து வந்து, முறையாகப் பேசுவதாகக் கூறி விட்டு அவன் கிளம்பினான்.

அடுத்த மாதமே நல்ல நாள் பார்ப்பதாக ராகவன் கூறிய போது, ஐஸ்வர்யாவின் அம்மா விஜயாவும், மகளை சந்தோஷத்துடன் அணைத்துக் கொண்டார்.

தீக்ஷாவின் மனம் மகிழ்ச்சியில் மிதந்தது.

வீட்டிற்கு வந்து கேசவனிடம் விஷயத்தைக் கூறிய போது, அவரும் மகிழ்ந்தார்.

அன்றிரவு டின்னருக்கு, ஹோட்டலுக்குச் செல்லவென மூவரும் முடிவு செய்திருந்தார்கள்.

அப்பாவிடம், கார்த்திக்குடனும், ஐஸ்வர்யாவுடனும், தான் வெளியே செல்வதாகக் கூறிவிட்டு, கிளம்புவதற்காக உள்ளே சென்றாள் தீக்ஷண்யா!

இது போல், தன் மனமும் ஒரு நாள் வெளிப்பட்டு இந்த சந்தோஷங்களைத் தனக்கு அறிமுகப்படுத்துமா என்ற ஆவல் எழுந்தது.

வானுக்கு எப்போதோ பரிசாகக் கிடைக்கும் வானவில்லைப் போல் தன் நேசமும் வீரேனுக்குள் வர்ணம் சேர்க்குமா என்ற கேள்வி புதிராய்க் கிளர்ந்தது.

## 11



**வீ**ரேந்தர், அவன் வீட்டில் கூண்டுப் புலியைப் போல் நடை பயின்று கொண்டு இருந்தான்.

கண்கள் சிவந்து, முகம் வன்மத்துடன் காணப்பட்டது.

திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு, தீக்ஷாவின் வீட்டுக்குப் போன் செய்தான் அவன்.

கேசவன்தான், போனை எடுத்தார்.

வீரேனின் குரல் தெரிந்ததும், நலம் விசாரித்துவிட்டு, "தீக்ஷா வெளியே விருந்துக்குப் போயிருக்காப்பா..." என்றார்.

உடனே, "இன்னிக்கு கார்த்திக் வந்து மதியமே அழைச்சுட்டுப் போயிட்டார். ஒரு பெண்டிங் ஒர்க் இருக்கு. அது



பத்தி அஃபீஷியலா தீக்ஷண்யா கிட்டப் பேசணும் அங்கிள் அதான் போன் பண்ணினேன்" என்றான் பொறுமையின்றி.

"உங்களுக்கும் கார்த்திக் விஷயம் தெரியுமா? எல்லாம் பேசி முடிஞ்சி, கல்யாணம் முடிவான சந்தோஷத்துல, அவங்க ஹோட்டலுக்குப் போய் இருக்காங்கப்பா... அவ வந்த உடனே பேசச் சொல்லவா?" என்று கேட்டார்.

"வேண்டாம் அங்கிள்... நானே காலைல பேசறேன்! குட் நைட்" என்று கூறி ரிசீவரை வைத்தான் அவன்.

கோபத்துடன், "கல்யாணமே முடிவாயிடுச்சா? நானும் பார்க்கறேன், இந்தக் கல்யாணம் எப்படி நடக்குதுன்னு...!" என்றான், தனக்குள் மூண்ட ரௌத்ரத்துடன்!

அந்தக் காதல் விஷயத்தை, மாற்றிப் புரிந்து கொண்ட வீரேந்தரால், அன்று இரவு சரியாகவே உறங்க முடியவில்லை.

அவன் மனம், ஏனோ கோபம், வருத்தம், ஏமாற்றம் மூன்றும் கலந்த கலவையில் திண்டாடியது.

கிரியை ஏமாற்றி விட்டு, வேறு ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டு, நீ சந்தோஷமாக இருக்க நான் விட்டு விடுவேனா என்று மனம் சவால் விட்டது.

மறுநாள் காலையில் சீக்கிரமே அலுவலகத்துக்கு வந்து கோபத்துடன் காத்திருந்தான் வீரேந்தர்.

இதழ்களில் உறைந்த புன்னகையுடன் அவன் அறைக்குள் வந்த தீக்ஷண்யா, அவன் முகத்தில் தெரிந்த சினத்தைக் கண்டு திகைத்தாள்.

பிறகு அமைதியாக, "குட் மார்னிங், ஸார்!" என்று கூறி விட்டுத் திரும்பியதும், "ஒரு நிமிஷம்!" என்றபடி

எழுந்து அவன் அருகில் வந்தவன், அவள் கையைப் பிடித்துத் தன்புறம் வேகமாக இழுத்தான்.

இதை எதிர்பாராத தீக்ஷன்யா, தடுமாறி அவன் மேல் சாயவும், அவளை இறுக அணைத்தான்.

"என்னடி? என்கிட்டே உன் ஆட்டமெல்லாம் பலிக்காது. அந்தக் கார்த்திக் என்னைக்காவது, உன்னை இப்படி அணைச்சிருக்கானா...?" என்று கூறியபடி, காற்றுப் புகவும் இடமின்றி, அவளைச் சிறை செய்தான்.

தீக்ஷன்யா, ஊழிக் காற்றில் தத்தளிக்கும் படகு போல் ஆனாள்.

அவளுக்கு, வீரேன் என்ன சொல்கிறான் என்றே புரியவில்லை.

"கார்த்திக், ஏன் என்னை...?" மூளை அதற்கும் மேல் யோசிக்கும் திறனை இழந்தது.

அணைத்த அதே வேகத்தில், வெறுப்புடன் அவளை விடுவித்துத் தள்ளியவன், "இதைப் போய் சொல் அவனிடம்... என்ன செய்யறான்னு நான் பார்க்கறேன்!" என்று கூறி விட்டு, ஜன்னலருகில் சென்று நின்று கொண்டான்.

தீக்ஷாவுக்கு, பெரிய ராட்டினத்தில் சுற்றும்போது, தன்னை யாரோ, வேகமாகக் கீழே பிடித்துத் தள்ளியது போல்!

தன்னைச் சுதாரித்துக் கொண்டு, வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறியவள், தன் அறைக்குள் வந்து ஓய்ந்து போய், தன் இருக்கையில் அமர்ந்தாள்.

விழியில் நுழைந்து, இதயத்தில் வலியாய் படர்ந்தது காதல்!

அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள்!

அன்று, வெகு நேரம் ஆயிற்று, அவள் தன்னைச் சீர்படுத்திக் கொள்ள!

திடீரென்று, கதவு திறக்கும் சப்தம் கேட்டு மனம் மருண்டு போக, திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள், தேவி தான் வந்து கொண்டிருந்தாள்.

தீக்ஷாவின் முகத்தைக் கண்டதும், "என்ன மேடம்! என்னவோ போல் இருக்கீங்க...? உடம்பு சரியில்லையா?" என்றாள் அக்கறையாக.

"ஒன்னுமில்லை தேவி! லேசாத் தலைவலி... அதான்" என்று கூறியபடி, இரு கைகளாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள், அவள்.

"வீரேந்தர் ஸாருக்கும் தலைவலியாம்... இப்பதான் காபிக்குச் சொன்னேன். உங்களுக்கும் சொல்லவா மேடம்...?"

"இல்லை, காபி எல்லாம் வேண்டாம் தேவி... சரியாப் போயிடும்" என்றவள், மெதுவாகத் தன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

ஏன் வீரேன் அப்படி நடந்து கொண்டான் என்று யோசித்தாலே, மனம் படபடப்பதாய்!

தான் கார்த்திக்கை விரும்புவதாக, அவன் நினைக்கிறானோ என்று தோன்ற, உடனே மனதில் கோபம் வந்தது.

தன் உள்ளம் அவனை விரும்புவது தெரிந்தால், அவன் என்ன செய்வான் என்ற கேள்வி, குழலுக்குள் செல்லும் காற்றாய் ஊடுருவியது.

வீரேன் இவ்வளவு கோபப்பட்டதற்கு, கார்த்திக்கின் மேல் அவனுக்கு வந்த பொறாமைதான் காரணமோ என்றும் தோன்றியது.

மனம், எந்த முடிவுக்கும் வர முடியாமல் தத்தளித்தது. வீரேனின் கோபமும், அணைப்பும் அவளைப் பயமுறுத்தின.

வீடு போட்டுவிட்டுச் சென்று விடலாமா என்று உள்ளத்தில் மிரட்சி வந்த போதும், நேற்றுதான் அரை நாள் விடுப்பு எடுத்து இருந்ததால், அவனிடம் சென்று லீவு கேட்கவும் மனம் வரவில்லை.

தீக்ஷா, பலத்த யோசனைகளுக்கிடையில், அவன் அறைக்குச் செல்வதையே தவிர்த்து, தேவியையே அனுப்பினாள்.

வீரேனும் அதற்குப் பிறகு எதற்கும் அவளை அழைக்க வில்லை.

மாலையில் கார்த்திக்கும் ஐஸ்வர்யாவும் நேரே அலு வலகத்துக்கு வந்து விட்டனர்.

அவளைக் கோவிலுக்குத் தங்களுடன் அழைத்துச் செல்ல வந்திருப்பதாக ஐஸ்வர்யா கூறினாள்.

அவள் வேலைகளை முடிப்பதற்குள், வீரேனிடம் சென்று தங்கள் திருமணச் செய்தியை கூறி விடலாம் என்றான் கார்த்திக்.

ஐஸ்வர்யா, அவளையும் அழைத்தபோது, தீக்ஷா வேலை இருக்கிறதென்று மறுத்து, அவர்களை மட்டும் போகச் சொன்னாள்.

அவர்கள் வருவதற்குள், வேலை எல்லாம் முடித்து விட்டுத் தயாராக இருப்பதாகவும் கூறினாள்.

வீரேந்தரின் முகத்தில், தன் அறைக்குள் வந்த ஐஸ்வர் யாவையும், கார்த்திக்கையும் கண்டதும் முதலில் திகைப்பட வந்தது.



பிறகு எழுந்து வரவேற்று, இருவரையும் அமரச் சொன்னான்.

இன்டர்காமில் தேவியை அழைத்து, காபி கொண்டு வரச் சொல்லிவிட்டு, இருவரும் எதற்காக வந்திருப்பார்கள் என்று யோசித்தான்.

ஐஸ்வர்யா ஸ்வீட் பாக்ஸை எடுத்து நீட்டவும் திகைத்து, "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"தீக்ஷா உங்ககிட்டே ஒன்னுமே சொல்லலையா?" என்று கேட்ட ஐஸ்வர்யா, கார்த்திக்கை வெட்கத்துடன் ஒரு பார்வை பார்த்து விட்டு, எல்லாம் கூறினாள்.

கார்த்திக்கைத் தான் விரும்பியதை, தீக்ஷா அதற்கு உதவி செய்ததை, தன் அப்பாவுக்கு நேற்று விஷயம் தெரிந்து, இருவரும் வந்து பேசியதை, திருமணம் முடி வானதை, ஒன்று விடாமல் எல்லாம் கூறினாள்.

ஒரு கணம் திகைத்த வீரேந்தருக்கு, தன் கணிப்பு தவறாகிப் போனது புரிவதாய்...!

ஆனால் தன் மனம் எப்படி உணர்கிறது என்றே அவ னுக்குப் புரியவில்லை.

அப்பாடா என்ற நிம்மதியும், எல்லாம் கடந்த மகிழ்ச்சியும், தவறு செய்த குற்ற உணர்வும், மனதில் வரிசையாய் இழை கோர்த்தன.

மனதில் குற்ற உணர்வு, மற்ற உணர்வுகளை மீறித் தெரிவ தாய்...!

நெஞ்சம் முழுவதும், தீக்ஷன்யாவே மையம் கொண் டிருந்தான்.

அவர்கள் இருவரிடமும், சிறிது நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தவன், ஐஸ்வர்யாவும் கார்த்திக்கும் கிளம்பிச் சென்ற உடனே, இன்டர்காமில் தீக்ஷாவை

அழைத்து, தன் அறைக்கு வந்து விட்டுச் செல்லும்படி கூறினான்.

* * *

ஐஸ்வர்யாவையும், கார்த்திக்கையும் தன் அறையில் உட்காரச் சொல்லிவிட்டு, தீக்ஷா வீரேனின் அறைக்குச் சென்றாள்.

அவனுடைய மேஜை அருகே சென்று நிமிர்ந்து பார்த்தால், எதிரே அவன் இல்லை.

ஜன்னலருகே, கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தவன், தன் அருகே வருவதற்குள், கையிலிருந்த ஃபைல்களை எல்லாம் அவன் மேஜையில் வைத்து விட்டு, வேகமாகத் திரும்பி, தன் அறைக்கு வந்து விட்டாள், தீக்ஷா.

ஒரு நொடிதான் அவன் முகத்தைப் பார்த்தாலும், அதில் எதையோ சொல்லத் துடிக்கும் பாவனை தெரிவது புரிந்து, அவளுக்கு மூச்சடைத்தது.

அன்று இருவிழியால் சண்டை இட்டவன், இன்று தன் இதயத்தை வென்று விட்டானே என்று தோன்ற, தன்னையே கடிவாளமிட்டு அடக்கினாள்.

தன்னைச் சமனப்படுத்தி, நிமிர்ந்தால், வீரேன் அவள் பின்னாலேயே, அறைக்குள் வேகமாக வந்திருப்பது தெரிந்தது.

அவள் பார்வை, தன் முகத்தில் பதியாததை யோசனையாகப் பார்த்தவன், கார்த்திக்கிடம் திரும்பினான்.

''மிஸ்டர் கார்த்திக்! இன்னிக்கு நைட், நான் உங்க மூணு பேருக்கும் ஹோட்டல்லே டின்னர் ஏற்பாடு பண்றேன்.



நாம நாலு பேரும் போகலாம். இன்னிக்கு என்னோட ட்ரீட்... ஓக்கேயா?'' என்று உற்சாகமாகக் கேட்டான்.

''தேங்க்யூ, ஸார்! நான் கூட உங்களைப் பார்த்தப்ப, நீங்க எப்படிப் பழகுவீங்களோன்னு யோசிச்சேன். ஆனா, நீங்களும் தீக்ஷண்யா மாதிரியே ஃப்ரெண்ட்லியா இருக்கீங்க!'' என்றான்.

உடனே சிரித்த வீரேன், ''நாங்க ரெண்டு பேருமே எல்லா விஷயத்துலயும் அப்படித்தான்! ஒரே மாதிரிதான் இருப்போம்! இல்லே, தீக்ஷண்யா...?'' என்று சீண்டலாகக் கேட்டான்.

மனம் விதிர்த்துப் போய் விட, அவள் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

எந்த ஹோட்டல் என்று கூறிவிட்டு, எட்டு மணிக்கு வந்து விடும்படி கூறினான் வீரேன்.

அவர்களுடன் தீக்ஷாவும் கிளம்பிச் செல்லவும், அவனால் அவளிடம் தனியே எதுவும் பேச முடியவில்லை.

வீட்டுக்குச் செல்லும்போதே, தான் ஹோட்டலுக்குப் போகக்கூடாது என்ற தீர்மானத்துடன் சென்றவள், வீரேனிடமிருந்து போன் வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

கேசவனிடம் பேசிவிட்டு, அவளை அழைத்தான் வீரேந்தர்.

அவர் அருகிலேயே இருந்ததால், எதுவும் செய்ய முடியாமல் ''ஹலோ!'' என்றாள் தீக்ஷா மெல்லிய குரலில்.

உடனே ஒலித்தது, அவனுடைய ஆழ்ந்த குரல்.

''நான்தான் தப்பா நினைச்சேன்னா, நீயாவது உண்மையைச் சொல்லி இருக்கலாமே...? நான் பேச வந்ததைக் கூட

கேக்காம வேகமா வெளியே போயிட்டே? முன்னாடியே, அப்படி எல்லாம் இல்லைன்னு சொல்ல வேண்டியது தானே... வேணும்னே உண்மைய மறைச்சதுக்கு, நான் தண்டனை தர வேண்டாமா...?

''இந்த நிமிஷம் உனக்கு என்னைப் பார்க்கவே பிடிக்கலை, இல்லை...? ஆனா, நீ என் கூட ஹோட்டலுக்கு வரே! சரியா ஏழரை மணிக்கு, நான் வந்து உன்னைப் பிக்கப் பண்ணிக்கறேன்'' என்று கூறிவிட்டு, அவள் பதில் பேசும் முன்பே, போனை வைத்து விட்டான்.

* * *

**த**னக்கான முடிவுகளை அவன் எடுப்பதும், அவன் தவறு செய்துவிட்டு, அதற்குத் தன்னை காரணமாக்கு வதையும் நினைத்தபோது ஆயாசமாய்!

அவனைத் தன் விஷயத்தில் வெற்றி பெற விடக் கூடாது என்ற வேகமும் உடனே எழுந்தது.

ஒரு முடிவுடன் உள்ளே சென்றவள், ஆறரை மணிக் கெல்லாம் தயாராகி வந்து, கேசவனிடம் தான் கோவிலுக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு, ஆட்டோவில் புறப்பட்டாள்.

வீரேனுடன் ஹோட்டலுக்குச் செல்ல ஏனோ மனம் விரும்பவில்லை.

கோவிலுக்குச் சென்றால், மனம் அமைதி அடையும் என்று தோன்ற மாரியம்மன் கோவிலுக்குச் சென்றாள்.

வாசலிலேயே செல்லை 'ஆஃப்' செய்துவிட்டு உள்ளே சென்றால் அங்கு கூட்டமாக இருந்தது.

அம்மனைப் பார்க்கும்போது, தன் தாயின் நினைவு வந்தது அவளுக்கு!

தங்களால் எடுக்க முடியாத பல முடிவுகளுக்குத் தெய்வமே துணையென்று எண்ணியபடி வருபவர்களைப் பார்த்துக் கொண்டு, மௌனமாக, பிரகாரத்தில் அமர்ந்திருந் தாள், தீக்ஷண்யா!

தெய்வ சந்நிதானத்தை விட மனதுக்கு சாந்தி தரும் இடம் வேறெங்கும் இல்லை என்று தோன்றியது.

ஆனால் இங்கு மக்கள் ஏன் அமைதியாக இருப்பதில்லை என்ற கேள்வியும், ஒருங்கே எழுந்தது.

மனதில் கடவுளை நினைத்து, கண் மூடி உருகி மௌனமாய் வேண்டுகோள் விடுத்து... அந்த மௌனமே அர்த்தச் செறிவு மிகுந்ததாய்... ஆட்படுத்தும் விதமாய்!

இது ஏன் ஒருவருக்கும் புரிவதில்லை என்ற ஆதங்கம் மனதில் வந்தது!

கோவில் மணி ஓசையில், நினைவுகள் கலைந்தன. நிழலாய் அவன் நினைவுகள் மட்டும் தொடர்ந்தன!

மெல்ல மெல்லத் தன் மனதைக் கொள்ளையடித்தவனை, உள்ளத்திலிருந்து அகற்ற வழியின்றித் தவித்த போது அவன் நினைவு, உணர்வுகளை உரசிப் பார்த்தது.

## 12



**தீ**க்ஷாவின் மனம், தன் வாழ்க் கையின் போக்கை எண்ணி, பல சிந்தனைகளை நெஞ்சத்தினுள் மலரச் செய்ய, புதிதாய் மனதில் நுழைந்திருந்த காதல், உயிர்வரை பாய்ந்து துண் டாடுவதாய்...!

பிறரின் முகம் காட்டும் கண்ணாடிக்கு... தனக்கென்று தனி முகம் இல்லாததுபோல், தன் நிலையும் ஆகி விடுமோ என்ற தவிப்பு வந்து விட யாரோ தன் அருகில் வந்து அமர்வது புரிந்தது!

நினைவுகளின் ஓட்டத்திலிருந்து கலைந்து நிமிர்ந்தால், ஐஸ்வர்யா தான் எதிரில் அமர்ந்திருந்தாள்.

மனதில் திடுக்கிடலோடு, ''என்ன ஐஷூ... இங்க என்ன பண்றே? ஹோட்டலுக்குப் போகலை...?'' என்றாள்.

உடனே, ''அதையே நானும் உன்னைக் கேக்கலாமா..? நீ ஏன் இங்க வந்து உட்கார்ந்திருக்கே?'' என்றாள் ஐஸ்வர்யா.

''ஸாரி! நான் உங்களோட வரலை ஐஷூ... என் மனசு சரியில்லை. நீங்கள்லாம் போயிட்டு வாங்க... ப்ளீஸ்!'' என்ற தீக்ஷா, தன் தோளின் மீது ஆதரவாகப் பதிந்த ஐஸ்வர்யாவின் கைகளை மெல்லப் பிடித்துக் கொண்டாள்.

ஐஸ்வர்யா, அவளையே ஒரு நிமிடம் கூர்ந்து விட்டு, ''என்னடி! என்கிட்டக் கூடச் சொல்ல முடியாதபடி, அப்படி என்ன பிரச்சினை உனக்கு...?'' என்றபோது, ''ஒன்றுமில்லை'' என்பது போல் தலை அசைக்க மட்டுமே அவளால் முடிந்தது.

''ஏன்டி என்கிட்ட மறைக்கிறே? காத்தையும் காதலையும் கைக்குள்ளே மறைச்சு வைக்க முடியாது. நீ வீரேந்தரைத் தானே விரும்பறே...? கொஞ்ச நாளா, நானும் உன்னைக் கவனிச்சிட்டுதான் இருக்கேன்... நீ அவரை விரும்பறது எனக்கும் தெரியும். ஆனா, அதை மறைச்சி வச்சிட்டு ஏன் தவிக்கிறே? அவர்கிட்டச் சொல்லிட வேண்டியது தானே..?



நான் வேணா அவர்கிட்டப் பேசவா?'' என்றபோது, பதறிப் போய் நிமிர்ந்த தீக்ஷாவின் கண்கள் கலங்கி இருந்தன.

ஐஸ்வர்யாவை அவள் பார்த்த பார்வையில் வேதனை மிகுந்து தெரிவதாய்!

''ப்ளீஸ்! வேண்டாம்டி'' என்றபடி தலை குனிந்தவளை, ஐஸ்வர்யா அப்படியே தன் தோளோடு சேர்த்து அணைத்து ஆறுதல் படுத்தினாள்.

எவ்வளவு தைரியமானவள்!

ஆண்களைக் கண்டால், சிறிதும் சலனப்படாதவள்... முதன் முறையாகத் தன் மனதை, ஒரு ஆண் மகனிடம் இழந்து தவிப்பது புரிந்து, அவள் மீது சொல்லொணாப் பரிவு வந்தது.

சிறிது நேரம் இருவருமே அவரவர் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தனர்.

மெல்லத் தன் நினைவுகளில் இருந்து கலைந்து நிமிர்ந்த ஐஸ்வர்யா, ''தீக்ஷா, ப்ளீஸ்! எது எப்படி இருந்தாலும், இன்னிக்கு நாம போறது எங்க காதலுக்காக ஸெலிப்ரேட் பண்றதுக்கு... நீதானே எங்களுக்கு எல்லாமே... நீ வராம நான் மட்டும் எப்படிப் போறது... நானும் போகலை! இங்கேயே உன்னோடவே இருக்கேன்!'' என்றாள் உறுதியாக.

''ப்ளீஸ்! புரிந்து கொள்ளேன்'' என்கிற மாதிரி பார்த்த தீக்ஷாவிடம், ''முடியாதுடி! நீ வந்தா, நானும் போறேன். இல்லைன்னா, நம்ப ரெண்டு பேருமே எங்க வீட்டுக்குப் போறோம்... அவ்வளவுதான்'' என்றாள்.

தன் பிடிவாதத்தைவிட, அவளுடைய காதல் பெரிது என்று பட்டதால், ''சரி! நான் வரேன், ரெண்டு பேருமே போகலாம்'' என்று எழுந்தாள் தீக்ஷண்யா.

பிறகு "நான் இங்க இருப்பேன்னு உனக்கு எப்படித் தெரியும்?" என்றாள்.

"உனக்குப் போன் பண்ணி நான் வந்து பிக்கப் பண்ணிக்கட்டுமான்னு கேக்கலாம்னு பார்த்தா, அங்கின் நீ கோவிலுக்குப் போய் இருக்கிறதாவும், ஹோட்டலுக்குப் போறதைப் பத்தி ஒன்னுமே சொல்லலையேன்னும் சொன்னார். சாயந்தரம் பார்த்தப்ப, உன் முகமே சரியில்லை! நீ இங்கே தான் வந்திருப்பேன்னு யூகிச்சு உடனே இங்கே வந்தேன்" என்றபடி ஐஸ்வர்யாவும் எழுந்தாள்.

தீக்ஷண்யாவை அழைத்துச் செல்வதற்காக, அவள் வீட்டுக்கு வந்த வீரேந்தர், அவள் ஆறரை மணிக்கே கிளம்பி வெளியே சென்று விட்டதாக, கேசவன் கூறவும், ஒரு கணம் திகைத்தான்.

பிறகு, மனதில் மூண்ட கோபத்துடன், ஐஸ்வர்யாவின் 'செல்' நம்பரைக் கேட்டு வாங்கியவன், உடனே அவளை செல்லில் தொடர்பு கொண்டான்.

* * *

ஐஸ்வர்யாவும், தீக்ஷாவும் கோவில் வாசலுக்கு வந்தபோது, அவளுடைய செல்போன் ஒலிக்கவும், 'ஆன்' செய்து பேசினாள் ஐஸ்வர்யா.

"ஹலோ, நான் வீரேந்தர்... தீக்ஷண்யா உங்ககூட இருக்காளா?" என்று வீரேனின் குரல் கோபமாகக் கேட்கவும், போனை தீக்ஷாவிடம் கொடுத்து, "உனக்குத் தான்" என்றாள்.

ஐஸ்வர்யாவின் செல் நம்பர், தன் அப்பாவிற்கு மட்டுமே தெரியும் என்ற நம்பிக்கையில், "ஹலோ அப்பா! நான் ஐஸ்வர்யா கூடத்தான் இருக்கேன். அவ கூட ஹோட்டலுக்குப் போறேன். வர நேரமாகும்பா... நீங்க சாப்பிட்டுடுங்க. எனக்காக வெயிட் பண்ண வேணாம்." என்றவுடன் மறுமுனையில் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"அப்பா!" என்று தீக்ஷா அழைக்க, ஒரு ஆழ்ந்த குரல் கோபமாக, "நான் வீரேன்! உன் அப்பா இல்லை! நான் உனக்காக இங்கே வெயிட் பண்ணினது வேஸ்ட்டுன்னு இப்பப் புரியுது. நேரே பார்க்கலாம்" என்று கூறியது.

தீக்ஷாவின் மனம் ஏனோ படபடத்தது.

ஹோட்டலுக்குச் செல்லும் வரை, அவள் ஒன்றுமே பேசவில்லை.

மணி எட்டேகால் ஆகி இருந்தது. கார்த்திக்கும், வீரேந்தரும், அவர்களுக்காகக் காத்திருந்தனர்.

வீரேனின் முகம், எந்த உணர்ச்சியும் இன்றி பாறையாக இறுகி இருந்தது.

அன்பின் சாரல்கள் மட்டுமே சிலிர்க்க வைக்கும் என்று நினைத்திருந்தவளுக்கு, இன்று அவன் புறக்கணிப்புகூட மனதை விதிர்க்க வைப்பதாய்...!

ஆனால் தீக்ஷா, அவனை ஏறெடுத்தும் பார்க்காமல், மௌனமாக இருந்தாள்.

டின்னர் சாப்பிடும்போது, ஐஸ்வர்யாவும், கார்த்திக்கும் மட்டுமே பேசிக் கொண்டு இருந்தார்கள்.

வீரேன், அவ்வப்போது அவர்களைக் கவனிக்கும் விதமாக மட்டுமே பேசினான்.

* * *

இரவு டின்னர் முடிந்ததும், தீக்ஷாவும் ஐஸ்வர்யா வுடன் கிளம்பினாள்.

அவளை நிறுத்திய வீரேந்தர், "மிஸ் ஐஸ்வர்யா! நான் தீக்ஷண்யாவை அழைச்சிட்டுப் போறேன்... நீங்க கிளம்புங்க" என்றான்.

"இல்லை! நான் ஐஷூவோட போறேன்!" என்று கூறிவிட்டுக் கிளம்பியவளை, கையைப் பிடித்துத் தடுத்தவன், அவள் விழிகளைக் கூர்ந்து "என் கூட வா! நான் உன்னோட கொஞ்சம் பேசணும்" என்று தன் காரில் ஏற வைத்தான்.

கார்த்திக்குடன் ஐஸ்வர்யா விடைபெற்று செல்ல, பின் தொடர்ந்தது வீரேனின் கார்.

சிறிது நேரம் காருக்குள், அமைதியே அழுத்தமாய் ஆட்சி செய்தது.

இரவும் தன் மௌனம் கலைக்காமல் விழித்திருந்தது. உதடுகளை இறுக மூடிக் கோபமாக அமர்ந்திருந்தாள் தீக்ஷா.

அவளையே ஓரப் பார்வையால் கவனித்துக் கொண்டு வந்த வீரேனுக்கு, அவள் விறைத்தபடி கோபமாக அமர்ந் திருந்தது ஏனோ சிரிப்பை வரவழைத்தது.

அவன் சன்னமாகச் சிரிக்கும் ஒலி கேட்டதும் கோபமாகத் திரும்பிய தீக்ஷா, "ப்ளீஸ்! காரை நிறுத்தறீங்களா? நான் இறங்கி ஆட்டோல போறேன்" என்றாள்.

"நான் உன் கூடத் தனியாப் பேசணும்னு சொன்னேன்!" என்றான் வீரேன் அழுத்தமாக.

"எதுவா இருந்தாலும் நாளைக்கு ஆபீஸ்லே பேசிக் கலாம். நான் இப்ப வீட்டுக்குப் போகணும்" என்றாள் அவள் தன் பார்வையை எங்கோ பதித்து!

"இல்லை! இது பர்ஸனல்! இன்னிக்கு உன்கிட்ட, அதுவும் இப்போதே பேசியாகணும்" என்றான் வீரேன் அதிகாரமாக.

பிறகு காரில் சிறிது நேரம் நிலவிய மௌனத்தை உடைத்தவன்,

"நீ... என்கிட்டே ஐஸ்வர்யாதான் கார்த்திக்கை விரும் புறான்னு ஏன் சொல்லலை?" என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

"அது ஐஸ்வர்யாவோட பர்சனல் மேட்டர். நான் அதை எல்லார்கிட்டயும் சொல்ல முடியாது" என்றாள் தீக்ஷாவும் அதே குரலில்.

"நான் யாரோ இல்லை..!" என்று நிறுத்திவிட்டு, "உன்னோட பாஸ்" என்றான் அழுத்தமான குரலில்.

தீக்ஷாவும், "ஸாரி! நீங்க என்னோட பாஸ்ங்கறது சரிதான். ஆனா அது ஆஃபீஸ் வரைக்கும்தான்! என் னுடைய எண்ணங்களுக்கு இல்லை... என்னை உங்க ளாலே கண்ட்ரோல் பண்ண முடியாது... உங்களோட உரிமைகளுக்கும் ஒரு லிமிட் இருக்கு... நான் உங்க அடிமை இல்லை.... பிஹேவ் யுவர்ஸெல்ஃப்" என்று கூறிவிட்டு, இருக்கையில் சாய்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கண்களில் மெலிதான ஆச்சர்யமும், கோபமும் மேலிட, இமைகள் இடுங்க, அவளையே பார்த்த வீரேன், ஒரு

இரவு டின்னர் முடிந்ததும், நீக்ஷாவும் ஐஸ்வர்யா வுடன் கிளம்பினாள்.

அவளை நிறுத்திய வீரேந்தர், "மிஸ் ஐஸ்வர்யா! நான் நீக்ஷண்யாவை அழைச்கிட்டுப் போறேன்... நீங்க கிளம்புங்க" என்றான்.

"இல்லை! நான் ஐஷுவோட போறேன்!" என்று கூறிவிட்டுக் கிளம்பியவளை, கையைப் பிடித்துத் தடுத்தவன், அவள் விழிகளைக் கூர்ந்து "என் கூட வா! நான் உன்னோட கொஞ்சம் பேசணும்" என்று தன் காரில் ஏற வைத்தான்.

கார்த்திக்குடன் ஐஸ்வர்யா விடைபெற்று செல்ல, பின் தொடர்ந்தது வீரேனின் கார்.

சிறிது நேரம் காருக்குள், அமைதியே அழுத்தமாய் ஆட்சி செய்தது.

இரவும் தன் மௌனம் கலைக்காமல் விழித்திருந்தது. உதடுகளை இறுக மூடிக் கோபமாக அமர்ந்திருந்தாள் நீக்ஷா.

அவளையே ஓரப் பார்வையால் கவனித்துக் கொண்டு வந்த வீரேனுக்கு, அவள் விறைத்தபடி கோபமாக அமர்ந்திருந்தது ஏனோ சிரிப்பை வரவழைத்தது.

அவன் சன்னமாகச் சிரிக்கும் ஒலி கேட்டதும் கோபமாகத் திரும்பிய நீக்ஷா, "ப்ளீஸ்! காரை நிறுத்தறீங்களா? நான் இறங்கி ஆட்டோல போறேன்" என்றாள்.

"நான் உன் கூடத் தனியாப் பேசணும்னு சொன்னேன்!" என்றான் வீரேன் அழுத்தமாக.



"எதுவா இருந்தாலும் நாளைக்கு ஆபீஸிலே பேசிக் கலாம். நான் இப்ப வீட்டுக்குப் போகணும்" என்றாள் அவள் தன் பார்வையை எங்கோ பதித்து!

"இல்லை! இது பர்ஸனல்! இன்னிக்கு உன்கிட்ட, அதுவும் இப்போதே பேசியாகணும்" என்றான் வீரேன் அதிகாரமாக.

பிறகு காரில் சிறிது நேரம் நிலவிய மௌனத்தை உடைத்தவன்,

"நீ... என்கிட்டே ஐஸ்வர்யாதான் கார்த்திக்கை விரும் புறான்னு ஏன் சொல்லலை?" என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

"அது ஐஸ்வர்யாவோட பர்சனல் மேட்டர். நான் அதை எல்லார்கிட்டயும் சொல்ல முடியாது" என்றாள் நீக்ஷாவும் அதே குரலில்.

"நான் யாரோ இல்லை..!" என்று நிறுத்திவிட்டு, "உன்னோட பாஸ்" என்றான் அழுத்தமான குரலில்.

நீக்ஷாவும், "ஸாரி! நீங்க என்னோட பாஸ்ங்கறது சரிதான். ஆனா அது ஆஃபீஸ் வரைக்கும்தான்! என் னுடைய எண்ணங்களுக்கு இல்லை... என்னை உங்க ளாலே கண்ட்ரோல் பண்ண முடியாது... உங்களோட உரிமைகளுக்கும் ஒரு லிமிட் இருக்கு... நான் உங்க அடிமை இல்லை.... பிஹேவ் யுவர்ஸெல்ஃப்" என்று கூறிவிட்டு, இருக்கையில் சாய்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கண்களில் மெலிதான ஆச்சர்யமும், கோபமும் மேலிட, இமைகள் இடுங்க, அவளையே பார்த்த வீரேன், ஒரு

கணம் யோசித்துவிட்டு, பிறகு காரை வேகமாகச் செலுத்தினான்.

அவள் வீட்டு வாசலில் 'சடன் பிரேக்' போட்டுக் காரை நிறுத்தியவன், அவள் இறங்கியதும், திரும்பிக்கூடப் பார்க்காமல், காரை வேகமாக எடுத்துச் சென்றான்.

* * *

அவன் சென்ற திசையையே பார்த்து நின்ற தீக்ஷா, ஒரு பெருமூச்சுடன் வீட்டிற்குள் சென்றாள்.

சூரியனின் வருகைக்காக மொட்டவிழ்க்கக் காத்திருக்கும் மலர்களைப் போல், அவன் என்ன செய்தாலும் மனம், இமை மூடாமல் அவனுக்காகக் காத்திருப்பது மட்டும் புரிவதாய்...!

கேசவன், அவள் வரும்வரை தூங்காமல் விழித்திருந்தார்.

அவரிடம், வீரேன் 'ட்ரீட்' கொடுத்ததைப் பற்றிக் கூறிவிட்டு, தலை வலிப்பதாகச் சொல்லி உடனே படுக்கச் சென்று விட்டாள், தீக்ஷா.

மறு நாளில் இருந்து கம்பெனிக்குச் சென்றவள், வீரேன் இருக்கும் திசைக்குக் கூடப் போகவில்லை.

தேவியே சென்று எல்லா வேலைகளையும் பார்த்துக் கொள்ளும்படி செய்தாள்.

அவன் கோபமாகித் தன் அறைக்கு வந்து விடுவானோ என்று முதலில் பயந்தாலும், அவனும் ஒதுங்கி இருப்பது போல் தெரியவும், நிம்மதியானாள்.



சில நேரங்களில் 'லிஃப்டில்' அவனுடன் ஒன்றாகப் பயணிக்கும் நிலை வந்தபோதும், அவள் பார்வை தரையிலேயே பதிந்து இருந்தது.

ஓரக் கண்ணில், அவன் தன்னைத் திரும்பிப் பார்ப்பது தெரிந்தும், அவள் தன் பார்வையை உயர்த்தவே இல்லை.

வீரேனின் பார்வை, முதலில் அவள் முகத்தில் பதிந்து, பிறகு அவள் இதழ்களில் நின்று, கோபமாகி விலகியது.

மனதில் ஒரு முடிவுடன் வீட்டுக்குச் சென்றவள், தன் தந்தையிடம் அன்றிரவே பேசினாள்.

மறுநாள் காலையில், தீக்ஷா கம்பெனிக்குக் கிளம்பத் தயாராகி வந்தபோது, கேசவன் அவளை அழைத்தார்.

"நான் உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்மா. இன்னிக்கு லீவு போட்டுடேன்" என்றார் மகிழ்ச்சியாக.

"என்னப்பா திடீர்னு...? ரொம்ப ஜாலி மூட்லே இருக்கீங்க போல இருக்கு... என்னாச்சு..?" என்று கேட்டபடி வந்து தந்தையின் அருகில் அமர்ந்தாள் அவள்.

அவள் தலையைப் பாசத்துடன் வருடியவர், "உனக்கு ஒரு குட் நியூஸ் சொல்லப் போறேன். இன்னிக்குக் காலையிலே கதிரேசன் எனக்குப் போன் பண்ணினார், வீரேந்தருக்கு உன்னைப் பெண் கேட்டார். வீரேந்தருக்கும் உன்னைப் பிடிச்சிருக்காம்... கதிரேசனே, உன்னைப் பெண் கேட்டு நேர்ல வரேன்னார். இப்ப நீதான் எனக்குப் பதில் சொல்லணும். உனக்கு வீரேனைப் பிடிச்சிருக்கா? இந்தக் கல்யாணத்துல உனக்குச் சம்மதமான்னு நீதான் சொல்லணும்" என்றார்.

அவர் கூறியதைக் கேட்டதும், தீக்ஷாவுக்குத் தன்னையே ஒரு கணம் நம்ப முடியவில்லை.

அவள் மனதில் நூறு பூங்குயில்கள் ஒன்றாகக் கூவின.

அவளுக்குள் பெண்மை எனும் மொட்டு மலர்ந்து விரிந்தது.

கனவுக் கூடு மெல்லத் திறந்து, கண்களில் லட்சம் சந்தோஷ மின்னல்களை அறிமுகப்படுத்தின.

அவள் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த கேசவ னுக்கு, வார்த்தைகள் வராமலேயே, அவளுடைய பதில், முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

அதற்குள் போன் ஒலித்ததால், எழுந்து சென்று எடுத்த கேசவன், பேசிவிட்டுத் திரும்பி, ''உன்கிட்டதான் பேசனு மாம், மாப்பிள்ளை பேசறார்'' என்றார்.

அதற்குள் வீரேன் மாப்பிள்ளை ஆகிவிட்டாரா என்ற மகிழ்ச்சிப் பரவசத்தில் போனை எடுத்தாள் தீக்ஷா.

''நான்தான் பேசறேன்! அப்பா நாளைக்கு வரேன்னார், இந்த வாரக் கடைசியிலே நிச்சயதார்த்தம். உனக்குச் சம்மதம் தானே?'' என்றான் வீரேன் ஆழமான குரலில்.

''ம்...'' என்று கூறிவிட்டு வேறு எதுவும் பேசத் தோன் றாமல், அவள் விழித்து நிற்க, ''நீ இனிமே ஆபீஸுக்கு வர வேண்டாம். நாளைக்கு சாயந்தரம், நாங்க வரோம்... உன் வீட்டுக்கு...!'' என்று கூறிவிட்டு, ரிஸீவரை வைத்தான் அவன்.

வெற்றிச் சிரிப்பு அவன் முகத்தில் படர்ந்தது.

அன்று முழுவதும் தீக்ஷண்யா கனவுகளிலும், கற்பனை களிலும் மிதந்து கொண்டிருந்தாள்.



மனதில் மணம் வீசும் மலர்களைச் சுமப்பது போல், அவன் நினைவும் சுகமான சுகந்தமாய்...!

ஐஸ்வர்யாவுக்கு விஷயத்தைக் கூறியவுடன், உடனே ஓடி வந்தவள், அவளைக் கிண்டலிலும், கேலியிலும் மூழ் கடித்தாள்.

தீக்ஷாவுக்கு அன்றையப் பொழுது, தனக்கெனவே பிறந்தது போல்... மலர்கள் தனக்கெனவே மலர்ந்தது போல்! உலகமே ரம்யமாய்த் தெரிந்தது.

வானம்பாடியாய்ச் சிறகடித்த மனது, அவன் இதய வாசல் தேடிச் சென்று சரண் புகுந்து விட, இனி அவன் அன்பு தரப் போகும் சுகமே, தன்னை வாழ வைக்கும் என்றும் புரிந்தது.

அவன் வார்த்தைகளால், இன்று உலகமே அழகானது போன்ற ஒரு பிரமை எழ, உறக்கம் வராமல் 'துயில் கொண்டு வா வெண்ணிலவே' என்று மனம் தூது விட ஆரம்பித்தது.

மேலிமைகள், கீழிமைகளை சேர மறுத்துப் போராட் டம் நடத்தின.

13



மறுநாள் காலையில் கதிரேசனே அவளிடம் போனில் பேசினார்.

தீக்ஷாவின் முகத்தில் வெட்கப் புன்னகை அன்று முழுவதும் வில காமல் படித்துவிட அவளுக்கு வீரேனை உடனே பார்க்க வேண்டும் போல் இருந்தது.

மனம், காதல் சிறகு விரித்துப் பறந்தது... நிலை கொள்ளாமல் தவித்தது.

இஸ்வர்யாவும், மதியம் வந்துவிட, ஆழ்ந்த வயலட் நிறத்தில் மெல்லிய ஜரிகைக் கரை போட்ட சில்க் காட்டன் புடவை அணிந்து தீக்ஷா காத்திருந்தாள்.

நாணம் அவள் அழகைப் பன்மடங்கு அதிகரித்திருக்க, கிருஷ்ணாபுரத்துச் சிற்பம் போலிருந்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டவுடன், அவர்களை வரவேற்கத் தயாராகக் கேசவனும் இஸ்வர்யாவும் வாசலுக்குச் சென்றனர்.

வீரேந்தரைக் கண்டதும் தீக்ஷண்யாவின் மனம் மத்தளம் போல் படபடத்தது.

உள்ளே வந்து அமர்ந்தவன், அவளைப் பார்த்த ஒரு பார்வையில், அவள் முகம் நாணத்தில் குனிந்தது.

கதிரேசனின் அருகில் சென்று, அவரின் பாதம் தொட்டு வணங்கிய தீக்ஷண்யா, கேசவனின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்.

அவளைப் பார்த்ததுமே, கதிரேசனுக்கு மஹாலட்சுமியே தங்கள் வீட்டுக்கு மருமகளாக வரப் போவது போல் தோன்றியது.

கேசவனும், கதிரேசனும் பேசிக் கொண்டிருக்க, எழுந்த வீரேன் ''அங்கிள்! நான் நைட் கிளம்பி, சென்னைக்குப் போறேன். நாளைக்கு ஃபிளைட்டில் டெல்லி போறேன். நான் கிளம்பறேன். ஒரு வார ட்ரிப்பா? போய் பேக் பண்ணனும். இப்ப கிளம்பினால்தான் சரியாக இருக்கும்'' என்று கூறியபடி தீக்ஷாவைப் பார்க்க, அவள் முகம் ஒரு நிமிடம் சோர்ந்து போனது.



அவளிடம் ''நான் வரேன் தீக்ஷண்யா! ஸண்டே பார்க்கலாம்.'' என்று கூறிவிட்டுக் கிளம்பிச் சென்றான்.

அவன் வந்ததும் போனதும் ஒரு கணம் ஆனாலும், அவள் மனம் மட்டும் களவாடப்பட்டது!

நீ வந்த பிறகுதான் இங்கு என் தோட்டத்தில் மலர்களே மலரும் என்று கூற வேண்டும் போல்!

ஞாயிறன்று எளிமையான முறையில் நிச்சயதார்த்தம் நடத்த ஏற்பாடானது.

கதிரேசன், புடவை நகைக்கான பணத்தைச் செக்காகக் கேசவனிடம் கொடுத்து தீக்ஷண்யாவிற்குப் பிடித்த மாதிரி வாங்கிக் கொள்ளச் சொன்னார்.

* * *

மறு நாளிலிருந்து இஸ்வர்யாவுடனும் கேசவனுடனும் சென்று வாங்க வேண்டியதை வாங்குவதற்கே அவளுக்கு நேரம் சரியாக இருந்தது.

நான்கு நாட்களே இடையில் இருந்தன.

இஸ்வர்யாவை ஒவ்வொரு முக்கியமான நேரங்களிலும் தன்னுடன் இணைத்துக் கொண்டாள் தீக்ஷா.

நிச்சயதார்த்தத்திற்கு என்று, கரும் பச்சையில், ஜரிகைக் கொடிகள் ஓடிய புடவையை எடுத்தனர்.

கேசவன், அவர் பங்குக்கு நிறைய பட்டுப் புடவைகள், மைசூர் கிரேப், சில்க் காட்டன் என்று எடுத்தார்.

நகைகளும் நிறைய செட்களாக வாங்கினர். துணிகளைத் தைக்கக் கொடுத்து வாங்கவும், ப்யூட்டி பார்லர் சென்று மெஹந்தி போட்டு ஃபேஷியல் செய்யவும் என்று நேரம் விரைவாகப் பறந்தது.

டெல்லியிலிருந்து ஒரு முறை பேசிய வீரேன், அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டான்.

''ஒன்றும் வேண்டாம். நீங்க எப்ப வருவீங்க?'' என்றாள் வெட்கத்துடன்.

''ஸண்டே மார்னிங் வருவேன். ஈவினிங் வீட்டுக்கு வரேன்'' என்று கூறிவிட்டு வைத்தான்.

அன்றுதானே நிச்சயதார்த்தம் என்ற பரவசத்துடன் நாட்களை எண்ணத் தொடங்கினாள் அவள்.

அவன் கேட்டதற்குப் பதிலாக, ''உன் புன்னகை தான் வேணும்!'' என்று சொல்லி இருந்தால் என்ன நினைப்பான் என்ற எண்ணம் ஓடியது மனதில்!

தீக்ஷாவுக்கு, ஞாயிறன்று காலையிலிருந்தே பரபரப்பாக இருந்தது.

ஐஸ்வர்யாவும் வந்துவிடவே கிண்டலும் கேலியுமாகப் பொழுது செல்ல, நாணத்துடன் அமர்ந்திருந்த மகளைக் கண்டதும் கேசவனின் மனம் நிறைந்தது.

இன்றுதான் வீரேன் வருகிறான் என்பதால், அவனிடமிருந்து 'போன் காலை' எதிர்பார்த்துக் காத்திருந்தாள், அவள்.

காதலின் ரேச ரேகைகள் மனதில் ஆழமாய்! அவன் நினைவுகள், அவளுக்கு தன்னையே அறிமுகப்படுத்தின.

கேசவனின் நண்பர் ஒருவரின் குடும்பமும், ஐஸ்வர்யாவின் குடும்பத்தினரும், கார்த்திக்கும் மட்டுமே, கேசவனின் சார்பில் அழைக்கப்பட்டு இருந்தனர்.

. மாலை ஐந்து மணிக்கு நிச்சயதார்த்த நேரம் குறிக்கப்பட்டு இருந்தது.

மதியம் மூன்று மணிக்கு ப்யூட்டி பார்லரிலிருந்து வருவதாகக் கூறி இருந்தனர்.



சாப்பிட்டுவிட்டு, தீக்ஷாவை ஒரு மணி நேரம் ஓய்வெடுக்கச் சொன்ன ஐஸ்வர்யா, அப்போதுதான் முகம் நன்றாக இருக்கும் என்றாள்.

படுத்தாலும், ஏனோ உறக்கம் வரவில்லை. ஆனாலும் கண்மூடி ஓய்வாகப் படுத்திருந்தாள் தீக்ஷண்யா.

மனம் முழுவதும் வீரேன் நிறைந்திருந்தான். அவன் முகம் தேடி, மனம் காத தூரம் அலைந்தது.

அவனுடைய மூச்சுக் காற்றைத் தனியாக இனம் காண மனம் தவித்தது.

அவனிடமிருந்து இன்னும் போன் வரவில்லை.

மனம் நினைத்தது... ''உன்னைக் கண்டவுடன் நின்று போனது வார்த்தைகள் மட்டுமல்ல... ஒரு நிமிடம் என் இதயத் துடிப்பும்! என்னிடமிருந்த கோபப்படும் குணம் போய், ஆட்படும் குணம் வந்து...! காதலுக்குத்தான் எத்தனை வலிமை... மனம் கூடத் தன்னுள் சிறகு வளர்த்து உன்னிடம் பறந்து சென்று...!''

அவளுடைய கவிதைக் கனவு, போன் மணி ஒலித்ததில் சிதைந்தது.

உடனே பக்கத்தில் படுத்திருந்த ஐஸ்வர்யாவும் விழித்து விட்டாள்.

மெல்ல ரிஸீவரைக் கையில் எடுத்தாள் தீக்ஷா.

வீரேனின் கம்பீரமான குரல், ''ஹலோ'' என்றதும் மனம் பரவசமானது.

கீழே கேசவனும் போனை எடுத்திருந்தார்.

ஆனால், அவன் கூறிய செய்தி அவள் மேல் இடியாய் இறங்கியது.

உடம்பைப் பதற வைத்துத் தன்னிலை மறந்து தவிக்கச் செய்தது. நிலை குலைந்து போனாள் தீக்ஷண்யா.

வீரேன், போனில் நிச்சயதார்த்தத்தை உடனே நிறுத்தும் படிக் கூறினான்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன சொல் றீங்க...? கிண்டல் பண்றீங்களா? எல்லா ஏற்பாடும் செஞ்சாச்சு..." என்றாள் பதட்டத்துடன்.

"உனக்கு மட்டும்தான், நடந்து முடிஞ்ச நிச்சயதார்த் தத்தை நிறுத்தற உரிமை இருக்கா? விரும்பியவனை ஏமாத்தறது... கல்யாணத்தை நிறுத்தறதுன்னு எல்லாமே நீ மட்டும்தான் செய்யணும், இல்லை? ஒரு பெண்ணுக்கு இவ்வளவு இருந்தா... எங்க குடும்பத்து ஆண்களை என்ன... கோழைன்னு நினைச்சிட்டியா நீ? உனக்குப் பாடம் கத்துக் கொடுக்கத்தான் நான் இந்த ஏற்பாடே பண்ணினேன்!" என்று கூறிப் பட்டென்று லைனைக் 'கட்' செய்தான் வீரேந்தர்.

* * *

தீக்ஷண்யாவின் முகம் இடிவிழுந்தாற்போல் ஆனது.

உணர்வுகள் மரத்துப்போய், கண்களில் எந்தக் காட்சி களும் பதிய மறுத்தன. தனக்குள் ஏதோ மெல்லச் சாவது புரிவதாய்...!

உள்ளம் சுக்கு நூறாய் உடைந்து, கண்கள் கண்ணீர் அருவியை உற்பத்தி செய்ய ஆரம்பித்தன.

உயிர்ப்பூ, மலர்ந்த உடனே சருகாகி உதிர்ந்ததைப் போல் இதயத்தில் வலித்தது.

அவள் விழிகளில், சரம் சரமாய் நீர்த் துளிகள் கரை புரண்டு வழிந்தது.



மரித்துப் போன காதலுக்கு அஞ்சலியைப் போல், மரண்டு போன மனதின் மேல் கண்ணீர்த் துளிகளாய் உதிர்த்தன.

ஐஸ்வர்யாவுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. திடீரென்று போன் வந்ததும், அதிலிருந்து பைத்தியம் பிடித்தவள் போல் தீக்ஷா மாறியதும், அழுததும் மனதை மிகவும் பாதித்தன.

என்னவென்று புரியாமல் அவளை அணைத்து ஆறுதல் படுத்திவிட்டு வெளியே வந்து, கேசவனிடம் பேசினாள் அவள்.

கேசவனும், போனில் கேட்ட செய்தியால் இடிந்து போய் அமர்ந்திருந்தார்.

மெல்ல அவரிடமிருந்து, விஷயத்தைக் கிரகித்த ஐஸ்வர்யா, அதிர்ந்து போனாள்.

உடனே தீக்ஷாவை ஆறுதல் படுத்த உள்ளே சென்றாள்.

சிறிது நேரத்தில், வாசலில் கார் வந்து நின்று, கதிரேசன் வேகமாக உள்ளே வந்தார்.

பரபரப்பாக வந்தவர், கேசவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "சாரி, கேசவன்... இப்படியெல்லாம் நடக்கும்னு நானும் எதிர்பார்க்கலை. ஆனா, நான் இன்னைக்குச் சொல்றேன், தீக்ஷண்யாதான் என்னோட மருமக! இப்பத் தான் வீரேன் பேசினான். நானே பதறிப் போய் கிளம்பி வந்தேன். எனக்கு ஒண்ணு தெரியணும்... கிரியோட நடக்கவிருந்த கல்யாணத்தை தீக்ஷண்யா ஏன் நிறுத்தினா? அதுதான் அவன் மனசை பாதிச்சிருக்கு. நான் வீரேன் கிட்டப் பேசறேன். எனக்குத் தெரியும்! என் மருமக,

காரணமில்லாம எதுவும் செஞ்சிருக்க மாட்டான்னு!'' என்று பரிதவித்தார்.

உடனே, ''இது வீரேனுக்குத் தெரியலையே!'' என்று பெருமூச்சு விட்டவர், கேசவனிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அவர் உடைந்து போய், ஒன்றும் கூற முடியாமல், பிரமை பிடித்தது போல் அமர்ந்திருந்தார்.

இரண்டாவது முறையும் நிச்சயித்த திருமணம், நின்று போனால், தன் மகளின் நிலை என்னாகுமோ என்ற படபடப்பு அவரிடம் தெரிந்தது.

அறை வாசலில் நின்று, அவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐஸ்வர்யா, கதிரேசனைத் தனியே அழைத்துச் சென்று, நடந்த உண்மைகளை அவரிடம் கூறினாள்.

அவர் முகம், கோபத்தில் துடித்தது.

எல்லாம் தான் பார்த்துக் கொள்வதாகக் கூறியவர், அவளை தீக்ஷ்ண்யாவை நன்றாகக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, வேகமாக வெளியேறினார்.

ஐஸ்வர்யா உடனே கார்த்திக்கின் வீட்டுக்கும், தேவிக்கும், தன்னுடைய வீட்டுக்கும் போன் செய்து விவரம் கூறி விட்டு, வீரேன் டெல்லியிலிருந்து கிளம்ப முடியாத காரணத்தால், நிச்சயத்தைத் தள்ளிப் போட்டிருப்பதாகச் சொல்லி வைத்தாள்.

கேசவனிடம் நம்பர் வாங்கி, அவர் நண்பருக்கும், ஹோட்டலுக்கும் பேசி விட்டு, தீக்ஷாவைக் கவனிக்கச் சென்றாள்.



அரை மணி நேரத்தில், அரை உயிராய்ப் போய், மனதால் உருக்குலைந்து நின்றவளைப் பார்த்தால், அவளுக்குத் தாங்கவில்லை.

அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டு ஆறுதல் படுத்தியபோது, உணர்வுகளே மரத்துப் போன நிலையில் மனம் சோர்ந்து கிடந்தாள் தீக்ஷா.

அழைப்பு மணி சப்தம் கேட்டு வெளியே வந்த ஐஸ்வர்யா, கதவு திறந்து பார்த்தால், ப்யூட்டி பார்லரிலிருந்து அந்தப் பெண் வந்திருந்தாள்.

இவளை எப்படி மறந்தோம் என்ற உணர்வுடன், விஷயத்தைக் கூறி, அவளுக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைத்தாள் ஐஸ்வர்யா.

அன்பெனும் கற்களால் கட்டப்பட்ட அவர்கள் நட்பு மட்டுமே, தீக்ஷாவை மேலும் உடைந்து விடாமல், அந்த நேரத்தில் ஆறுதல் படுத்தியது.

இரு மனங்களின் ஆத்மார்த்தமான பிணைப்பு, இந்த நேரத்தில் ஆழமாய் வெளிப்பட்டது.

அவளை சமாதானப்படுத்தி ஒரு கப் பாலைக் கொடுத்துப் படுக்க வைத்துவிட்டு, காபியுடன் ஹாலுக்கு வந்த ஐஸ்வர்யா, ஹாலில் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களைக் கண்டவுடன் பெரிதும் பரிதவித்துப் போனாள்.

நேரே, கேசவனின் அறைக்குச் சென்றவள், அவரிடம் காபியைக் கொடுத்து வற்புறுத்திப் பருகச் செய்துவிட்டு, மெதுவாக ஒரு யோசனை கூறினாள்.

''அங்கிள்! நான் ஒரு யோசனை சொல்லவா? தீக்ஷா ரொம்ப உடைஞ்சு போயிட்டா! தப்புப் பண்ணாம

தண்டனை அனுபவிக்கும்போது, அதுவும் வாழ்க்கையில இந்த விஷயத்துல தோத்துப் போயிட்டா, மனசு தேறக் கொஞ்ச நாளாகும். அதனாலதான் சொல்றேன். தீக்ஷா, கொஞ்ச நாள் என் கூட வந்து எங்க ஊர்ல இருக்கட்டுமே'' என்றாள்.

ஒன்றும் புரியாமல் பார்த்த கேசவனிடம், ஈரோடு அருகிலிருக்கும் தங்களின் சொந்த கிராமத்திற்கு, அவளை அழைத்துச் செல்வதாகத் தெரிவித்தாள்.

ராகவனுக்கு அங்கு நிறைய நிலமும், வீடும் இருந்தன. அதை, வேலையாட்கள் மூலம் பராமரித்து வந்தார் அவர்.

வருடம் ஒரு முறை, திருவிழாவின் போது, அவர்கள் குடும்பத்துடன் சென்று அங்கு தங்கி விட்டு வருவார்கள்.

அங்கு அழைத்துப் போனால், இந்தச் சூழ்நிலையிலிருந்து இடம் மாறி, அவள் மனம் சிறிது நாட்களில் இயல்பாகி விடக் கூடும் என்ற நம்பிக்கை ஐஸ்வர்யாவுக்கு இருந்தது.

சிறிது நேரம் யோசித்த கேசவனும் சரி என்றார்.

அவரையும் தங்களுடன் வரச் சொல்லி அழைத்தபோது ''இல்லம்மா! என்னால, அவ படற வேதனையைப் பார்க்க முடியாது. அவ மனசு சரியாகட்டும். நானே அங்கே வந்து அழைச்சிட்டு வரேன். நம்ப காரையே டிரைவர் போட்டு அழைச்சிட்டுப் போங்க. இங்க நான் என் நண்பரோட இருந்துக்கறேன். ஆனா நீ அவளை ஒரு குழந்தை மாதிரி பாத்துக்கணும்... பாத்துப்பியாம்மா?'' என்றார் கண்ணீருடன்.

அவருக்குத் தன் பெண் காயம் பட்ட குழந்தை போல் அழுவதைக் காண மனம் சகிக்கவில்லை.



ஐஸ்வர்யா, உடனே தன் அப்பாவிடம் பேசி, எல்லா வற்றுக்கும் ஏற்பாடு செய்தாள்.

தீக்ஷண்யா ஓய்ந்து போய் படுத்திருந்தாள்.

சமையல்கார அம்மாவிடம் சென்று கேசவனைக் கவனித்துக் கொள்ளும்படி கூறியவள், தீக்ஷாவிடம் அவர்கள் தங்கள் ஊருக்குப் போகப் போவதைப் பற்றிக் கூறினாள்.

மலங்க மலங்க சிறு குழந்தை போல் விழிக்கும் அவளைப் பார்த்தபோது, மனமே கசங்கிப் போனது ஐஸ்வர்யாவுக்கு!

அவளுடைய துணிகளை எடுத்து அடுக்கியவள், கேசவனுடைய நண்பர் வந்தவுடன், அவரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் காரில், தன் வீட்டுக்குத் தீக்ஷாவுடன் சென்றாள்.

சூழிக் காற்றில் அடிபட்ட பறவைபோல், தன் சிறகொடிந்து மனமிழந்து வந்திருக்கும் தீக்ஷாவை ஆதரவுடன் கைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார் விஜயா.

தன்னுடைய துணிகளையும் அடுக்கி வைத்த ஐஸ்வர்யா அவளைச் சாப்பிட வைத்துவிட்டு, இரவானதால் கார்த் திக்கை வரவழைத்து, அவன் துணையுடன், தன் கிரா மத்துக்கு அவளை அழைத்துச் சென்றாள்.

தீக்ஷண்யாவுக்குள் உணர்ச்சிக் குவியலான உணர்வுகள் வேதனையுடன் சங்கமித்திருந்தன.

கரையில் பெரிதாய் எழுதி வைத்த பெயரை, தன் அலைக்கரங்களால் அவசரமாக அழித்து விடும் கடலைப் போல், நெஞ்சம் அவன் நினைவுகளை அழிக்க தைரிய மின்றிப் பரிதவித்தது.

அவன் வார்த்தைகள் மூச்சுத் திணற வைத்தாலும், அவனுடைய நினைவுகளே சுவாசமாய்...!

நீக்ஷாவைப் பார்க்கும்போது ஐஸ்வர்யாவுக்குள் ஏதோ ஒன்று உடைந்து, கண்களில் நீர் கோர்த்தன.

'எவ்வளவு மென்மையானவள் இவள்... பாவி, இப்படிச் செய்து விட்டாயே!' என்று மனம் அரற்றியது.

''அன்பு சாவதில்லை... அன்பினால் கிடைத்ததை ஆயுள் முழுக்க மனதில் இருத்திக் கொள்ளலாம்! ஆனால் வெறுப்புணர்ச்சி நித்தம் மரண வேதனையை அளிக்கும்.. வெறுப்பினால் கிடைத்ததோ, வேதனையை மட்டும் மனதில் சுமையாக்கும்!'' என்ற பொன்மொழி அவள் நினைவுக்கு வந்தது.

சொல்லில் புரியாத பல சோகங்களைத் நீக்ஷாவின் விழிகளில் கண்டபோது, ஐஸ்வர்யாவின் மனம் தவிக்க ஆரம்பித்தது.

## 14



ஐஸ்வர்யாவுக்கு, கிளம்புவதற்கு முன், வீரேனிடம் பேச வேண்டும் போல் தோன்றியது.

அவன் நம்பருக்குத் தொடர்பு கொண்டவள், ''ஐஸ்வர்யா பேசறேன். நான் உங்களை ரொம்பப் புத்திசாலின்னு நினைச்சேன். ஆனா சரியான கிரிமினல் புத்தின்னு இப்பதான் தெரியுது... நீக்ஷா ஏன் கல்யாணத்தை நிறுத்தினான்னு உங்களுக்குத் தெரியா தில்லே...! உங்க அப்பா கிட்ட கேளுங்க! தெரியும். ஆனா, ஒரு நல்ல வைரத்தை, மனைவியா அடையற



அதிர்ஷ்டத்தை நீங்க இழந்திட்டீங்கங்கிறது அப்புறம் உங்களுக்குப் புரியும். ரொம்பத் தேங்க்ஸ் ஸார்!'' என்று நக்கலாகக் கூறிவிட்டு, அவனைப் பேச விடாமல் செல்லை ஆஃப் செய்தாள்.

தன் தந்தையிடம் சென்றவள், எக்காரணத்தை முன் விட்டும், யார் வந்து கேட்டாலும், தாங்கள் தங்கி இருக்கும் இடத்தை மட்டும் சொல்லவே கூடாது என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

கார்த்திக்குக்கும், நீக்ஷாவைப் பார்த்தால் பாவமாக இருந்தது.

குற்றுயிராய், ஒடுங்கி அமர்ந்திருந்த அவளைக் கண்ட போது, துறுதுறுவென்றிருந்த ஒரு பெண்ணை இப்படி ஆக்கி விட்டானே என்று வீரேனின் மேல் கடும் கோபம் வந்தது.

அன்றையப் பயணம் முழுவதுமே மௌனத்தில் கடந்தது.

இரவு நெடு நேரம் ஆகிவிட்டது. ஐஸ்வர்யா, நீக்ஷாவை உறங்கச் செய்துவிட்டு, கார்த்திக்குடன் வெகு நேரம் பேசிக் கொண்டு இருந்தாள்.

காலையில் எழுந்து குளித்து டிபன் சாப்பிட்டு விட்டு, இருவரிடமும் சொல்லிக் கொண்டு கார்த்திக் பஸ்ஸில் கிளம்பிச் சென்று விட்டான்.

அன்று முழுவதும், நீக்ஷண்யா ஓய்ந்து போய்ப் படுத்திருந் தாள்.

மனதில் நினைவுகள் கரை புரளும் வெள்ளம் போல், அவளுடைய மன அணையை உடைத்தன.

ஐஸ்வர்யா, அவளை அணைத்து ஆறுதல் படுத்திச் சாப்பிட வைத்துவிட்டு, அன்று மாலை வெளியில் அழைத்துச் சென்றாள்.

சுற்றிலும் பசுமையான வயல்களும், வாழைத் தோப்பும், தென்னந் தோப்பும், போர் செட்டிலிருந்து வழியும் தண்ணீரும், சாதாரணமாக இருந்திருந்தால், தீக்ஷண்யாவைத் துள்ளிக் குதிக்க வைத்திருக்கும்.

ஆனால், இன்று எந்தக் காட்சியுமே மனதில் பதிய வில்லை.

அவளுடைய இதயத்து ஓசை, அவன் பெயரில்தான், தன் உயிர் மூச்சை சுவாசித்துக் கொண்டு இருந்தது.

அவன் நினைவுகள் மட்டுமே, அதில் சாசுவதமானது.

* * *

அங்கு டெல்லியில் வீரேனின் நிலையோ, வேறு விதமாக இருந்தது.

தீக்ஷண்யாவிடம் பேசிவிட்டு வைத்தவுடன், மனம் வெற்றிச் சிரிப்பில் மகிழ்ந்து இருந்தது.

அவளுக்குச் சரியான பதிலடி கொடுத்த திருப்தி, இதழ்களில் பொருள் பொதிந்த புன்னகையாக வெளிப்பட்டது.

நேரம் ஆக ஆக, மனதின் ஒரு மூலையில் லேசாக வலிக்க ஆரம்பித்தது.

தன்னை அறியாமலே, அவளை விரும்ப ஆரம்பித்திருந்த மனம், சத்தியாக்கிரகம் செய்து, தான் செய்தது தவறோ என்ற பயத்தை, உள்ளே விதைத்தது.



மாலையில் கதிரேசனிடம் பேசியபோது, அவர் அவனிடம் பேசும் மனநிலையில் இல்லை. உடனே கிளம்பி நேரே வரச் சொன்னார்.

அன்று இரவு பேசிய ஐஸ்வர்யாவின் குரலால், வீரேனுக்குள் முதன் முறையாக ஒரு சலனம் வந்தது.

உடனே கதிரேசனிடம் பேசினான்.

உண்மை என்னவென்று கூறும்படி அவன் கேட்கவும், அவர் நடந்தவைகளை எடுத்துக் கூற, அவன் மனம் இரண்டாகப் பிளந்தது.

அவர் கூறிய உண்மைகள், மனதைக் கீறி வலிக்கச் செய்தன.

பனிப் பாறையாய் இறுகி இருந்த மனது, அவள் நினைவு தந்த வெப்பத்தால் உருக ஆரம்பித்தது.

உடனே இரவே கிளம்பி, கோவை வந்த வீரேன், தன் தந்தையுடன் பேசிவிட்டுப் படுத்தபோது, இமைகள் மூட மறுத்தன.

அவளுடைய நினைவுகள், அவனைப் பந்தாடின.

* * *

காலையில் எழுந்து, முதன் முதலில் நேரே கிரியின் வீட்டுக்குச் சென்றான் வீரேன்.

யசோதா அவனை வரவேற்றாள். கிரி இன்னும் எழுந்திருக்கவில்லை.

"சித்தி! எனக்கு நீங்கதான் சொல்லணும்! தீக்ஷா, கிரியோட நடக்க இருந்த கல்யாணத்தை ஏன் நிறுத்தினா..? எனக்கு உண்மை வேணும்... கிரியோட பொய்யாலே என்னோட மனசே உடைஞ்சு போயிருக்கு! நீங்களாவது உண்மை பேசுவீங்களா சித்தி...?" என்றான் வீரேன் ஆதங்கத்துடன்!

கண்கள் கலங்க, நடந்த உண்மைகளை, அப்படியே அவனிடம் கூறினார் அவர். கிரியை மன்னித்து விடும் படியும் கேட்டுக் கொண்டார்.

கிரி அப்போதுதான் எழுந்து வந்து கொண்டிருந்தான்.

வீரேனைப் பார்த்த உடன் ஆச்சர்யமானவனை, அப் படியே அறைக்குள் தள்ளிச் சென்ற வீரேன், உள்ளே சென்றவுடன் அறைந்த அறையில், அவன் பொறி கலங்கிப் போனான்.

தன் வாயாலேயே அவன் உண்மைகளை உரைத்த போது, தான் செய்த தவறின் அளவு, அப்போதுதான் மலையளவு தெரிந்தது வீரேனுக்கு!

தான் என்ன செய்து, இதை சீர் செய்யப் போகிறோம் என்று புரியாமல் தவித்தவன், காரை எடுத்துக் கொண்டு நேரே தன் தந்தையிடம் சென்றான்.

வானில் ஏறி நட்சத்திரங்களைப் பறிக்கும் திறன் கொண்ட தன் மனது, இன்று சிறு மலர் பறிக்கத் தயங்குவது புரிந்து, தன்னுள் இறுகிப் போனான் அவன்...!

கதிரேசன், அவனைக் கண்டதும், ஒன்றும் பேசாமல் திரும்பிக் கொண்டார்.

வேகமாகச் சென்று, அவர் அருகில் அமர்ந்தவன், ''அப்பா! கிரி சொன்னதை வச்சு நான் ஏமாந்திட்டேன்ப்பா! இப்பதான், எனக்கு உண்மையே புரியுது! ஒரு நல்ல பெண்ணோட மனசை ரொம்ப நோகடிச்சுட்டேனே...! எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலை. நான் என்ன செஞ்சா அவ என்னை மன்னிப்பா..? ஒண்ணுமே புரியலை. இத எப்படித் தீர்க்கப் போறேன்னும் தெரியலை...'' என்று



கூறி, தலையைத் தன் இரு கைகளாலும் தாங்கியபடி அமர்ந்திருக்கும் மகனைப் பார்த்தால் தாங்கவில்லை கதிரேசனுக்கு!

எத்தனையோ பிரச்சனைகளைச் சுலபமாகத் தீர்த்து வைப்பவன், தன் வாழ்க்கைப் பிரச்சனையை எப்படிச் சரி செய்வது என்று தெரியாமல் கலங்கியது கண்டு, உடைந்து போனார் அவர்.

நிமிர்ந்தவன், ''நான் அவளை ரொம்பக் காயப் படுத் திட்டேனாப்பா...? இப்ப அவ எப்படி இருக்கா..? நான் உடனே பார்க்கணும்..!'' என்றான்.

அவன் கையை ஆதரவாகப் பிடித்தவர், ''இதை நீ மட்டும்தாம்ப்பா சரி செய்ய முடியும். போய் அந்தப் பொண்ணு கிட்டப் பேசு! நடந்ததை எல்லாம் சொல்லு...! அப்புறம், கடவுள் என்ன நினைச்சிருக்காரோ, அது தானே நடக்கும். ஆனா, நல்லது நடக்கணும்னு வேண்டிக்கிறேன்'' என்றார்.

அவன் கிளம்பிச் சென்றவுடன், பூஜை அறைக்குச் சென்றார் அவர்.

''என் வாழ்க்கைதான், முறை தவறிய ஒரு பெண்ணாலே பாழானது. என் மகனுடைய வாழ்க்கையையாவது, அந்த நல்ல பெண்ணின் மூலமா மலரச் செய்!'' என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

வீரேந்தர், தன் நிலை மறந்தான்.

தன் உள்ளத்தில் நுழைந்து, உயிரிலே கலந்து போன அவளை நினைத்து, மனம் உன்மத்தமானது.

தன் வாழ்வில், எதற்கும் கலங்காதவன், முதன் முதலாக உடைந்து போனான்.

வழியில் வாடியிருந்த மலர்களைப் பார்த்தபோது, "நீ என்னுடன் இணைந்து விட்டால், இங்கு வாடியதெல்லாம் மலர்ந்துவிடும்... என் மனமும் அதோடு கூட..!" என்று மனம் ஏங்கியது, தீக்ஷண்யாவை எண்ணி!

நேரே கேசவனின் வீட்டுக்குச் சென்றவன், உள்ளே சென்று அவரைப் பார்த்து, அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு, நடந்ததை எல்லாம் கூறி, அவரிடம் மன்னிப்புக் கேட்டான்.

மனதளவில் மறுகிப் போயிருந்த அவருக்கு, வீரேன் கூறியதைக் கேட்டதும், சிறிய நம்பிக்கை, துளிர் விட்டது.

ராகவனிடம் பேசி முகவரியை வாங்கி, கார்த்திக்கையும் வரச் செய்து, வீரேனை அனுப்பி வைத்தார் அவர்.

அவனிடம் எல்லா விஷயங்களையும் கூறிவிட்டு, தீக்ஷண்யாவைப் பற்றிக் கேட்டான் வீரேன்.

"ஸாரி, வீரேன்! நீங்க யோசிக்காமச் செஞ்ச ஒரு விஷயத்தால, ரொம்ப பாதிக்கப்பட்டது அவங்க தான்...! என்னாலேயே அவங்க படற வேதனையைப் பார்க்க முடியலை. நீங்க, அவங்களை ரொம்ப நோகடிச்சிட்டீங்க! உங்களுக்கு நேர்ல பார்த்தா தான் தெரியும்" என்று கூறிய கார்த்திக் மௌனமானான்.

தன் சொற்களின் கனமையால் சிதறிப் போன அவள் மனதைத் தன்னால் சரி செய்ய முடியுமா என்ற பயம் நெஞ்சினுள் கிளர்ந்தது வீரேனுக்கு..!



அவள் முகம், காற்று தீண்டிய அனிச்ச மலர்போல் கூம்பியது.

ஒவ்வொரு இதயத்துடிப்பும், அவன் பேர் சொன்னது.

* * *

இருவரும், ஐஸ்வர்யாவின் சொந்தக் கிராமத்துக்குச் செல்லும்போது மாலையாகி விட்டது.

வீட்டிற்குச் சென்று இறங்கியதுமே, வீரேன் சற்று படபடப்பாக உணர்ந்தான்.

பெண்கள் இருவருமே வீட்டில் இல்லை.

தீக்ஷண்யாவை அழைத்துக் கொண்டு, ஐஸ்வர்யா மாந்தோப்புக்குச் சென்று இருப்பதாக வேலையாள் கூறினான்.

கார்த்திக்கையும் வீரேனையும் தோப்புக்கு அழைத்துச் சென்றான் அவன்.

உயிரைத் தவிர எதுவும் சொந்தமில்லாதது போல், அன்பை உணராது தரிசாய் தனித்திருந்த அவன் மனதில், காதல் பெரும் வசந்தத்தை அறிமுகம் செய்வதாய்...!

தோப்பில் அமர்ந்து இருவரும் பேசிக் கொண்டிருந்தாலும், தீக்ஷண்யாவின் மனம் வீரேனிடமே இருந்தது.

அவள் உடலை மட்டுமல்ல மனதையும் சேர்த்து உடைத்திருந்தது, அவனது சொற்கள்...

அவனுடைய வார்த்தைகள் முட்களாய் நெஞ்சுக்குள் கீறி, ஆறாத ரணத்தை ஏற்படுத்தி இருந்தன.

வீரேன், அவளிடமிருந்து விலகித் தொலை தூரம் போய் இருந்தாலும், அவளுடைய மனப் பேழைக்குள் என்றும் அவனுடனே இருந்தான்.

''என் உயிரானவனே..! என் மனச் சிப்பிக்குள், கண்ணீர் முத்துகளை அறிமுகப்படுத்தி விட்டு ஏன் நீ மட்டும் தொலைந்து போனாய்?'' என்று மனம் ஊமையாய் அழுதது.

ஐஸ்வர்யா பேசுவதைச் செவிகள் கேட்டுக் கொண்டு இருந்தாலும், அவள் மனம் துயர நினைவுகளை, அசை போட்டுக் கொண்டே இருந்தன.

அவள் குரல் பாதியிலேயே தடை படவும், என்னவென்று நிமிர்ந்து பார்த்தாள் நீக்ஷண்யா.

ஐஸ்வர்யாவின் பார்வை சென்ற வழியை அவள் விழிகள் தொடர்ந்தபோது, அதிர்ச்சியில் அவள் மனம் பதறி, முகம் வெளுத்தது.

கண்ணீர், எதிரில் தெரிந்த பாதையை, கண் முன் கலங்கலாய்ச் சமர்ப்பித்தது.

உள்ளம் துவண்டு போய், தைரியமின்றித் தொய்ந்து போயிருந்ததால், ஏனோ உடலும் குலுங்கியது.

எதிர்பாராத ஒரு விஷயம் கண்ணெதிரில் நடப்பதைப் போன்ற ஒரு விழிப்புணர்வு, உடலையும் மனதையும் விதிர்க்கச் செய்தது.

## 15

**வீ**ரேனும், கார்த்திக்கும், எதிரே சிறிது தூரத்தில் வந்து கொண்டு இருந்தனர்.

பதறிப் போய் எழுந்த நீக்ஷண்யா, ஐஸ்வர்யாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டு மிரண்டு போனாள்.



அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டவள், கட்டும் விழிகளால் வீரேனைச் சுட்டு எரித்தாள்.

''இங்க ஏன் வந்தீங்க..? இன்னும் இவ உயிரோட இருக்காளான்னு பாக்க வந்தீங்களா? உயிரோடு தான் இருக்கா... ஆனா அவ மனசைத்தான் கொன்னுட்டீங்களே! இப்ப திருப்தி தானே..?'' என்றாள், தாங்க முடியாத கோபத்துடன்.

கண்களில் வருத்தமும், வேதனையும் ஒன்றை ஒன்று போட்டியிட, அவளைப் பார்த்த வீரேன், ''நான் நீக்ஷண்யா கிட்டத் தனியாப் பேசணும்'' என்றான் பிடிவாதமாக.

''எதுக்கு...? இன்னும் அவளை முழுசா சாகடிக்கவா...? நோ! நான் விடமாட்டேன்!'' என்று கோபத்துடன் இரைந்த ஐஸ்வர்யாவை, கார்த்திக் முன்னால் வந்து, சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றான்.

நீக்ஷாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி, கார்த்திக்குடன் சோர்வாகச் சென்றாள் அவள்.

நீக்ஷண்யாவின் உள்ளத்தில் தாங்க முடியாத வேதனை எழுந்தது.

ஆனால், அமைதியாக எங்கோ பார்த்தபடி நின்றிருந்தாள். மனதின் வலி, முகத்தில் தெரிந்தது.

மெதுவாக, அவளருகில் வந்த வீரேன், ஒரு நிமிடம் அவளையே கூர்ந்து விட்டு, ''ஸாரி நீக்ஷா!... இப்படி நான் இது வரைக்கும் யார்கிட்டயும், எதுக்காகவும் மன்னிப்புக் கேட்டதில்லை.. இன்னிக்கு உன்கிட்டக் கேக்கறேன், என்னை மன்னிப்பியா?''

''தகுதி இல்லாத ஒருத்தனோட பொய்யாலே, நான் இப்படித் தப்பா முடிவெடுத்துட்டேன்! என்னை நீ ஏத்துக்கறதும், மறக்கறதும் உன் இஷ்டம்... ஆனா, நான் ஏன் இப்படிச் செஞ்சேன்னு நீ தெரிஞ்சுக்கணும்'' என்றவன், தன்னிடம் கிரி கூறிய விபரங்களையும், அதனால் தான் எடுத்த தவறான முடிவையும் பற்றிக் கூறினான்.

அவள் அனைத்தையும் கேட்டுவிட்டுச் சலனமின்றி, எங்கோ பார்த்தபடி நிற்பதைக் கண்டு மனம் குறுங்கி விட ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தான்.

''சின்ன வயசுலயே, என் அம்மாவோட பிரிவு என்னை ரொம்பப் பாதிச்சது... பெரியவனான உடனே, உண்மை தெரிஞ்சப்ப, பெண்கள்ளாலே தாங்க முடியாத வெறுப்பு வந்தது. பெண்கள் மேலே எனக்கு என்னிக்குமே பெரிசா மதிப்பு இருந்ததில்லை.''

''என் கூடப் படிச்சப் பெண்கள் கூட அப்படித்தான். நான் பெரிய பணக்காரன்னு தெரிஞ்சவுடனே, வலிய வந்து பழகினப்ப, பெண்கள்ளாலே பொதுவா அலட்சியமாவே நினைக்கத் தோணிச்சு... அதனாலே, கல்யாணம்கிற ஒரு விஷயத்தையே நான் வெறுத்தேன். எந்தப் பெண்ணையும், நான் என் விரலாலக்கூடத் தொட்டதில்லை! நான், முதன் முதலாத் தொட்டவளும் நீ தான்; என் மனசை முதல்லே தொட்டவளும் நீதான்!'' என்றான், உணர்ச்சிகள் நிரம்பிய குரலில்!

அப்போதும், அவளிடம் எந்த மாற்றமும் தெரியாததால், தவிப்புடன் தொடர்ந்தான்.

''ஆனா, நீ என் மனசுல ஆழமாப் பதிஞ்சிட்டே...! சில சமயங்கள்லே என் மேலேயே எனக்கு வெறுப்பு வந்தது...



உன்னை மறக்க முடியாமே! உன்னைப் பத்தி, தப்பா நினைக்கவும் முடியாம, உன்னை மனசிலேருந்து வெளியேத்தவும் முடியாம, பெண்ணுங்கிற மாயைதான் என்னை ஆட்டிப் படைக்குதோன்னு, எத்தனையோ நாள் நான் பேதலிச்சுப் போயிருக்கேன்... ஆனாலும் உன்னை விரும்பினேன்!''

''ஒரு பெண்ணோட அன்புன்னா என்னன்னே தெரியாம, பாலைவனமா இருந்த என் மனசுக்குள்ளே, அன்பு, காதல்கிற பன்னீர் சிதறலை, முதல் பார்வையிலேயே எனக்கு அறிமுகப்படுத்தியவ நீ...! ஆனா, அந்த அற்புதமான மனசை, நான் ரொம்ப நோகடிச்சிட்டேன்னு இப்ப எனக்குப் புரியுது. ஆனா, கிரியை நீ ஏமாத்திட்டதா நினைச்சுத்தான், நான் அப்படிச் செஞ்சேன். உன்னைப் பழிவாங்கிட்டேன்னு நான் சந்தோஷப்படவும் முடியாமத் தவிச்சப்பதான், என்னையே நான் ஏமாத்திக்கிட்டது தெரிஞ்சது...'' என்று நிறுத்தினான்.

அவளை நிமிர்ந்து பார்த்தபோது, அவள் பார்வை எந்த உணர்ச்சியுமின்றி எங்கோ பதிந்து, முகம் நிச்சலனமாய் இருந்ததை, அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தான், அவளை அளவுக்கதிகமாகவே நோகடித்திருப்பது புரிந்தது.

மனதில் தாங்க முடியாத வலியுடன், அவள் எதிரே சென்று,

''தீக்ஷா...! இனிமே பொய்யான கௌரவம் எல்லாம் தேவை இல்லை. என்னைப் பொறுத்தவரைக்கும், உன்னை விலையில்லாத செல்வமா, என் உயிராத்தான் நான்

நினைக்கிறேன். உன் உதடுகளிலிருந்து "மன்னிச்சிட்டேன்கிற வார்த்தை வேணும் எனக்கு... கூடவே சொந்தமாய் உன் இதழ்களும்...!" என்று உணர்ச்சியுடன் முடித்தான், வீரேன்.

* * *

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த தீக்ஷண்யாவிடமிருந்து ஒரு வேக மூச்சு, சீறலாக வெளிப்பட்டது.

அந்த தேவதை, இறுகிக் கல்லாகி இருந்தாள்.

இடி மேல் இடி விழுந்த இதயம் இறுகிப் பாறையாகி இருந்தது.

மனதில், தன் உடைந்த பகுதிகளை, அவன் சொற்களால் இணைக்க முயன்று, தோற்றுப் போயிருந்தாள்.

அவனுடைய மனம் தெளிவாகப் புரிந்தாலும், தன் மனம் ஏற்க மறுப்பதை உணர்ந்து தவித்தாள்.

இன்னும், அவளுடைய மனதின் ரணம் ஆறவில்லை... கற்கள் வீசப்பட்ட குளமாக இருந்தது மனது.

காயப்பட்ட காதல் சிறகாய், உள்ளம் துவண்டு படபடத்தது.

தீக்ஷண்யா, அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

குரலில் எந்த உணர்ச்சியுமின்றி, "நான் உங்களை மன்னிச்சிட்டேன்..." என்றதும், அவன் வேகமாக அருகில் வருவதையும், அவனுடைய முகத்தில் தெரிந்த நிம்மதி கலந்த பிரகாசத்தையும், கண்களில் தெரிந்த லட்சம் சந்தோஷ மின்னல்களையும் கண்டாள்.



"ஒரு நிமிஷம்..! ஆனா..!" என்று கூறவும், அப்படியே நின்று விட்ட வீரேந்தரின் முகம், வேதனையில் கசங்கியது; மனம் இறுகியது...!

அவனைப் பரிதவிப்புடன் நிமிர்ந்து பார்த்தவள், "என்னாலே உங்களை மன்னிக்க மட்டும்தான் முடியும் வீரேன்... ஏத்துக்க முடியாது. என் மனசு செத்துப் போய் ரெண்டு நாளாச்சு... என்னால இனிமே, இயல்பா இருக்க முடியுமான்னே தெரியலை...

"என்னால அதை உயிர்ப்பிக்க முடியலை வீரேன்!" என்று கூறி அப்படியே சரிந்து அமர்ந்து, முகத்தைத் தன் கைகளால் மூடி அழ ஆரம்பித்தாள் தீக்ஷண்யா.

இதயம் சிதறி, உடல் பதறி அருகில் வந்தான் வீரேன்.

"என்னால அதை உயிர்ப்பிக்க முடியும் தீக்ஷா... எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்! நான் உன்னை மலர வச்சிக் காட்டறேன். எனக்கு நீ வேணும் தீக்ஷா... என்னால உன்னைப் பிரிஞ்சி இனிமே ஒரு நொடி கூட இருக்க முடியாது... ப்ளீஸ்!" தவிப்புடன் கூறினான்.

அவள் விழிகள், தனக்காக அழுவது பெரிதும் ஆனந்தமாய் இருந்தாலும், அவள் நிலை மனதைக் கசக்கிப் பிழிந்தது.

வீரேன் காத்திருந்தான்... நிமிடங்கள் அவனுக்கு யுகங்களாகின.

* * *

வெகு நேரம் கழித்து மெதுவாக நிமிர்ந்த தீக்ஷாவின் விழிகள் ஜீவனின்றிச் சிவந்திருந்தன.

வேறு எந்த உணர்ச்சிகளுமின்றி, நிராசையும், நம்பிக்கையின்மையும் கலந்து விரக்தியுடன் ஊடுருவிய அவள் பார்வையே பதிலை உணர்த்த, உடைந்த மனதுடன் மௌனமாகத் திரும்பிச் செல்ல ஆரம்பித்தான் வீரேன்!

முதன் முறையாக நடையில் சிறு தடுமாற்றம் தெரிய, குலுங்கிய மனதுடன் அவன் போவதையே இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்த தீக்ஷாவின் விழிகளுக்குள், கலங்கலாய் அவனுடைய உருவப் பதிவு!

அவன் விலகிச் செல்லச் செல்ல, மனம் அவன் பின்னால் ஏக்கமாய்த் தொடர ஆரம்பித்தது.

வீரேனுக்குள், இழப்பின் வலி நெஞ்சுக்குள் கனமாய் உணரப் பட்டு, பதுங்கிக் கிடந்த வேதனைகளைப் பதியன் போட்டன.

தன்னம்பிக்கையும் தைரியமும், ஒடுங்கிப் போய், ஏன் பழைய நினைவுகளின் தாக்கங்கள் என்னைத் தகர்க்க அனுமதிக்கிறேனென்ற கேள்வி, அவளுக்குள் நெருடலாய்!

தூரப்புள்ளியாய் அவன் மறையும் போதே, அவன் வார்த்தைகளால் துண்டாடித் துடித்தது மனது.

நட்சத்திர மீன் எத்தனை முறை வெட்டுப் பட்டாலும் ஒவ்வொரு துண்டும் முழு மீனாய் மாறி விடுவது போல், அவன் நினைவுகள் தீக்ஷாவின் மனதை காற்றுப் புகவும் இடமின்றி ஆக்ரமித்தன.

* * *

மெதுவாக நடந்து சென்று கொண்டிருந்த வீரேன், விரக்தியின் பிடியிலிருந்தான்.

மனமெல்லாம் அவள் நினைவுகளை, முன்பை விட அதிகமாகச் சுமக்க ஆரம்பித்திருந்தான்.

நான் என்ன செய்தால் உன்னுடைய உயிர்ப்பூ மலரும் என்று தவிப்புடன் எண்ணும் போதே மெல்லக் கொல்லும் விஷமாய், அவன் உயிரையும் உணர்வுகளையும் கொன்றது, காதல்!

அந்தத் தோப்பின் முடிவில் நின்றிருந்த கார்த்திக்கும் ஐஸ்வர்யாவும், வேகமாக அவனருகில் வந்தனர்.

''மிஸ்டர் வீரேன்... தீக்ஷா எங்கே?'' என்றாள் ஐஷூ.

வேதனையில் அவன் முகம் சுருங்கி இறுகியது.

''அவ என்னை மன்னிக்கலைன்னு சொல்றத விட, மன்னிக்க முடியாத பெரிய தப்பை நான் செஞ்சிட்டேன்னு தான் சொல்லணும்'' என்றவனின் முகம் துயரத்தில் கசங்கி, ஒரே நாளில் ஓய்ந்து போய்!

ஒற்றைப் பார்வையில், ஒருவனின் கம்பீரத்தையே சரித்து விடும் சக்தி பெண்ணுக்கிருப்பது இன்று இருவருக்கும் புரிந்தது.

என்ன சொல்லி அவனை ஆறுதல் படுத்துவது என்பது புரியாமல், கார்த்திக் தர்ம சங்கடத்துடன் நிற்க, ஐஸ்வர்யா மட்டும் வேகமாகத் தோப்பிற்குள் சென்றாள்.

இலக்கின்றி வெறித்த விழிகளுடன் மரத்தில் சாய்ந்து அமர்ந்திருந்த தீக்ஷாவின் அருகில் சென்றவள், அமைதியாக அவள் கையை எடுத்துத் தன் கையினுள் ஆதரவாக வைத்துக் கொண்டாள்.

வான்வெளியில் எதையோ தேடிய அவளின் முயற்சி ஒரு முடிவுக்கு வந்தது.

வெகு நேரம் கழித்து உயிர் பெற்ற பொற்சிலையாய் நிமிர்ந்த தீக்ஷாவை தன் தோளில் சாய்த்து சமாதானப் படுத்தி, மெதுவாக வீட்டுக்கு அழைத்து வந்தாள் ஐஸ்வர்யா.

* * *

**கா**ர்த்திக் மட்டும் அங்கிருக்க, வீரேன் கிளம்பிச் சென்றிருந்தான்.

வெற்றிடமாய்த் தெரிந்த வாசலை வெறித்த தீக்ஷாவின் விழிகள், கசிந்தன.

அவள் தனக்குள்ளேயே போராடுவதை உணர்ந்த ஐஸ்வர்யா, அவளை அமைதிப்படுத்தி ஓய்வெடுக்கச் செய்து விட்டு, ஹாலுக்கு வந்தாள்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்த கார்த்திக், "என்ன ஐஷு, நாம ஒன்னு நினைச்சா... நடக்கறது வேற மாதிரி இருக்கு?" கவலையுடன் கேட்டான்.

"கார்த்திக்! நீங்க கிளம்புங்க... அப்பப்ப போய் வீரேந்தரைப் பார்த்துக்குங்க! நான் எப்படியாவது அவ மனசை மாத்தி, ஊருக்கு அழைச்சிட்டு வரேன். அவ மனசுல அந்த சம்பவம் ஆறாத ரணமாப் பதிஞ்சிடுச்சு... கொஞ்ச நாள் போகட்டும்! அம்மாவை மட்டும் அடுத்த முறை வரப்ப அழைச்சிட்டு வாங்க!" என்று அவனை அனுப்பி வைத்தாள்.

அவள் திரும்பி வருகையில், கிளையிலிருந்து பிரிந்து விவாகரத்துப் பெற்ற இலைகள், பூமியில் வாடிக் கிடந்தன... தீக்ஷண்யாவைப் போல!

ஐஸ்வர்யாவின் மனம் கனத்துப் போனது.



16



**ப**யணம் செய்யும்போது, கால் சுற்றுக்குக் கீழே வேகமாய் நழுவி ஓடும் அற்புதமாய், நாட்கள் கடந்தன.

விஜயாவும் இப்போது அவர்களுடன் பண்ணை வீட்டில் வந்து தங்கி இருந்தார்.

தீக்ஷண்யாவின் மனநிலை என்னவென்றே இருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

தனக்குள்ளேயே எண்ணங்களைச் சுருக்கியபடி உறைந்து போயிருந்தவளின் உள்ளத்தில், காதலுக்கான புதிர் முடிச்சு மெல்ல அவிழத் தொடங்கியது.

வற்றாத ஜீவநதியைப் போல் நேச அலைகள் கரை உடைக்க ஆரம்பித்தன, அவளுடைய உள்ளத்தில்!

உறவின் வலிமை இன்று பிரிவில் தெரிந்து மனம் தத்தளிக்க, சங்ககாலப் பாடலின் நிலையில் அவள்!

தலைவி தோழியிடம் கூறுகிறாள். 'நான் போகட்டுமா' என்று தலைவன் கேட்டபோது, வழக்கமான பொய்யென்று நினைத்து, 'போயேன்... எங்கு வேண்டுமானாலும் போ...' என்றேன் கோபமாக!

'ஆனால், எங்கே அவன் என்று இப்போது துடிக்கிறேன்... விழுகின்ற கண்ணீர் என் நெஞ்சினில் தேங்குகிறது... வானில் பறக்கும் கொக்குகள் அதை நீர்த்தேக்கம் என்று நினைத்துக் குழம்புகின்றன. என் செய்வேன் தோழி?' என்று உருகுகிறாள்.

அந்நிலையில் இன்று தீக்ஷாவும்!

வான்வெளியில் எதையோ தேடிய அவளின் முயற்சி ஒரு முடிவுக்கு வந்தது.

வெகு நேரம் கழித்து உயிர் பெற்ற பொற்சிலையாய் நிமிர்ந்த தீக்ஷாவை தன் தோளில் சாய்த்து சமாதானப் படுத்தி, மெதுவாக வீட்டுக்கு அழைத்து வந்தாள் ஐஸ்வர்யா.

* * *

**கா**ர்த்திக் மட்டும் அங்கிருக்க, வீரேன் கிளம்பிச் சென்றிருந்தான்.

வெற்றிடமாய்த் தெரிந்த வாசலை வெறித்த தீக்ஷாவின் விழிகள், கசிந்தன.

அவள் தனக்குள்ளேயே போராடுவதை உணர்ந்த ஐஸ்வர்யா, அவளை அமைதிப்படுத்தி ஓய்வெடுக்கச் செய்து விட்டு, ஹாலுக்கு வந்தாள்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்த கார்த்திக், ''என்ன ஐஷு, நாம ஒண்ணு நினைச்சா... நடக்கறது வேற மாதிரி இருக்கு?'' கவலையுடன் கேட்டான்.


''கார்த்திக்! நீங்க கிளம்புங்க... அப்பப்ப போய் வீரேந்தரைப் பார்த்துக்குங்க! நான் எப்படியாவது அவ மனசை மாத்தி, ஊருக்கு அழைச்சிட்டு வரேன். அவ மனசுல அந்த சம்பவம் ஆறாத ரணமாப் பதிஞ்சிடுச்சு... கொஞ்ச நாள் போகட்டும்! அம்மாவை மட்டும் அடுத்த முறை வரப்ப அழைச்சிட்டு வாங்க!'' என்று அவனை அனுப்பி வைத்தாள்.

அவள் திரும்பி வருகையில், கிளையிலிருந்து பிரிந்து விவாகரத்துப் பெற்ற இலைகள், பூமியில் வாடிக் கிடந்தன... தீக்ஷண்யாவைப் போல!

ஐஸ்வர்யாவின் மனம் கனத்துப் போனது.



16



**ப**யணம் செய்யும்போது, கால் களுக்குக் கீழே வேகமாய் நழுவி ஓடும் அற்புதமாய், நாட்கள் கடந்தன.

விஜயாவும் இப்போது அவர்களுடன் பண்ணை வீட்டில் வந்து தங்கி இருந்தார்.

தீக்ஷண்யாவின் மனநிலை என்னவென்றே இருவ ராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

தனக்குள்ளேயே எண்ணங்களைச் சுருக்கியபடி உறைந்து போயிருந்தவளின் உள்ளத்தில், காதலுக்கான புதிர் முடிச்சு மெல்ல அவிழத் தொடங்கியது.

வற்றாத ஜீவநதியைப் போல் நேச அலைகள் கரை உடைக்க ஆரம்பித்தன, அவளுடைய உள்ளத்தில்!

உறவின் வலிமை இன்று பிரிவில் தெரிந்து மனம் தத்தளிக்க, சங்ககாலப் பாடலின் நிலையில் அவள்!

தலைவி தோழியிடம் கூறுகிறாள். 'நான் போகட்டுமா' என்று தலைவன் கேட்டபோது, வழக்கமான பொய்யென்று நினைத்து, 'போயேன்... எங்கு வேண்டுமானாலும் போ...' என்றேன் கோபமாக!

'ஆனால், எங்கே அவன் என்று இப்போது துடிக்கிறேன்... விழுகின்ற கண்ணீர் என் நெஞ்சினில் தேங்குகிறது... வானில் பறக்கும் கொக்குகள் அதை நீர்த்தேக்கம் என்று நினைத்துக் குழம்புகின்றன. என் செய்வேன் தோழி?' என்று உருகுகிறாள்.

அந்நிலையில் இன்று தீக்ஷாவும்!

அவனுடைய நேசத்துக்குள் வீழ்ந்து மடிவதிலும், ஒரு தனி சுகம் இருப்பது போல் இன்று தோன்றியது அவளுக்கு.

இடையில் ஒரு முறை வந்து சென்ற கார்த்திக், வீரேன் மிகவும் உடைந்து போயிருப்பதாகவும், அலுவலகத்திலேயே முக்கால்வாசி நேரம் இருப்பதாகவும், பாதியாக மெலிந்திருப்பதாகவும் ஐஸ்வர்யாவிடம் கூறியதைக் கேட்டுக் கொண்டுதான் அமர்ந்திருந்தாள் அவள்.

விழிகள் மட்டும் டி.வி.யில் பதிந்திருந்தாலும், மனம் அவன் வார்த்தைகளில்...!

பொருத்தமாக அந்த நேரம் ஒலித்த பாடல் வரிகள், அவள் பிடிவாதத்தையும், வீம்பையும் சிதறச் செய்வதாய்!

"பொத்திவச்சா அன்பு இல்லை...

சொல்லிப்புட்டா வம்பு இல்லை...

சொல்லத்தானே தெம்பு இல்லை...

இந்தத் துன்பம் யாரால...?"

இறக்கம் தாங்க முடியாமல், அந்த இடத்தை விட்டு எழுந்து வேகமாகத் தன் அறைக்குள் சென்றாள் தீக்ஷண்யா.

* * *

அங்கு கோயமுத்தூரில், எதிலும் பிடிப்பின்றி நடைப் பிணம் போல் இருந்த வீரேந்தருக்கு, தனது சுய அடையாளத்தைத் தொலைப்பது போன்ற அவலம் வேறெதுவுமில்லை என்று இன்று புரிந்தது.

தொழிற் சிகரத்தில் வெற்றியுடன் ஏறித் திரும்பியவனை, காதல் பாதை சுலபமாகச் சரித்துச் சாய்த்தது.

சுரேஷ் அவனுக்காகவே இப்போது கோயம்புத்தூருக்கு வந்து தங்கியிருந்தார்.

கார்த்திக்கும் அடிக்கடி வந்து அவனைப் பார்த்துச் சென்றாலும், அவன் மனம் ஒரு நிலையில் இல்லை.

அவள் வருவாளா என்று ஒரு கணமும், அவள் வருகின்ற வழியை நோக்கி மறுகணமும், மனப்பறவை ஏக்கத்துடன் தன் சிறகு விரித்துக் காத்திருந்தது.

தான் செய்த தவறின் அளவு புரிந்தாலும், மனம் அவளிடம் மானசீகமாக ஒரு சமாதானப் புறாவை தினமும் தூது விட்டபடித் தனித்துத் தவித்திருந்தது.

ஒற்றை வார்த்தையால் தன் மனக்காயத்தை ஆறச் செய்து விடும் சக்தி, அவளுக்கு மட்டுமே இருப்பது புரிய மனம் சிலிர்த்துப் போனது.

அவளுடைய இதழ்கள் எழுதுகோலாகித் தனக்கு காதல் தீர்ப்பு வழங்கப் போகும் நாளுக்கென, அவன் காத்திருந்தான்.

* * *

அன்று அலுவலகத்தில், அவளைப் பற்றிய யோசனைகள் வீரேனுடைய நிம்மதியைப் பறித்துக் கொண்டன.

தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்தவனை, செல் போன் அழைப்பு கலைத்தது.

அவனுடைய அப்பாதான் பதட்டத்துடன் பேசினார்.

"கேசவனுக்கு திடீர்னு நெஞ்சுவலி வந்துடுச்சி வீரேன்! ஆம்புலன்சுக்குப் போன் பண்ணியாச்சு... நல்லவேளை, நான் எதேச்சையா அவரைப் பாக்கப் போயிருந்தேன்.

கூட அவரோட ஃப்ரெண்டும் இருந்தாரு... மூணு பேரும் பேசிட்டிருக்கும்போதே இப்படி ஆயிடுச்சி! நீ உடனே கிளம்பி ஹாஸ்பிடலுக்கு வந்துடு!" என்றபடி மருத்துவமனையின் பெயரைப் பதட்டத்துடன் கூறிவிட்டு வைத்தார்.

சி.சி.யூ.வில் அனுமதிக்கப் பட்டிருந்த கேசவனுக்கு எல்லாப் பரிசோதனைகளும் செய்து முடித்து, "ஆஞ்சியோகிராம்" செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறினர்.

உடனே, இதை தீக்ஷாவுக்குத் தெரியப் படுத்த வேண்டும் என்று கதிரேசன் கூறியபோது, உடனே தடுத்து விட்டான் வீரேன்.

"இல்லப்பா... வேணாம்! அவளே மனசொடிஞ்சு போய் இருக்கா... அங்கிளுக்கு சரியாகட்டும்... அப்புறமா சொல்லலாம். ப்ளாக் இருக்கான்னு பாக்கறதுக்கு தானே டெஸ்ட் பண்றாங்க... இதெல்லாம் முடியட்டும். ஆபரேஷன் தேவைன்னா அப்ப வரவழைக்கலாம்" என்றான் முடிவாக!

பிறகு, வீரேந்தர் அவருடனே மருத்துவமனையில் இருக்க, இதயக் குழாயில் அடைப்பில்லை என்று ஆஞ்சியோவில் தெரிந்தது.

மருந்து மாத்திரைகள் மட்டும் கொடுத்து, மறுநாள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார் கேசவன்.

* * *

மறுநாளே ஐஸ்வர்யாவுக்குப் போன் செய்து விபரம் கூறிய கார்த்திக், தான் உடனே அங்கு கிளம்பி வருவதாகக் கூறினான்.

ஆனால், தீக்ஷாவிடம் உடனே இந்த விபரத்தைக் கூறலாம் என்று ஐஸ்வர்யா தேடியபோது அவள் தோப்பிற்குச் சென்றிருப்பதாக விஜயா கூறினார்.



தோப்பிற்குச் சென்றபோது, தீக்ஷா சோர்ந்து போய் அமர்ந்திருந்தாள்.

வறண்ட விழிகளுடன் மௌனமாய் அவளை வெறித்தவளிடம் "நாம இங்கிருந்து கிளம்பணும்டி... அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாம் அதான் கார்த்திக் நம்மளை அழைச்சிட்டுப் போக வந்திருக்காரு" என்றாள்.

விஷயத்தைக் கேட்டதும் பதறி எழுந்தவள், "இப்ப அங்கிளுக்கு எப்படி இருக்கு ஐஷு? ஆன்ட்டி வேற இங்க இருக்காங்க... பாவம்! என்னாலதானே இதெல்லாம்... சாரிடி! நான் போய் எல்லா திங்ஸையும் எடுத்து வைக்கிறேன்" என்றபடி எழுந்தாள்.

தான் 'அப்பா' என்றதை அவள் தவறாகப் புரிந்து கொண்டதும் நல்லதாகத் தோன்ற, மௌனமாகப் பின் தொடர்ந்தாள் ஐஸ்வர்யா.

கார்த்திக்கும் அமைதியாகவே இருக்க, பயணம் கனத்த மௌனத்துடன் சென்றது.

தீக்ஷாவின் நினைவுகள் வீரேனிடம் சரண் புகுந்தன.

கோயம்புத்தூருக்குச் சென்று தீக்ஷன்யாவின் வீட்டிற்குள் கார் நுழைந்தது.

வாசலில் இறங்கியவள், "நீ போய் உடனே அங்கிளைப் பாரு ஐஷு! ஆன்ட்டி... நான் அப்பாவப் பாத்துட்டு உடனே கிளம்பி அங்கிளைப் பாக்க வரேன். நீங்க அவரைக் கவனிங்க!" என்று விடை பெற்றாள்.

உள்ளே சென்றவளைக் கதிரேசன் வரவேற்க, பழைய நினைவுகள் உடனே அவளைத் தீண்டித் தாக்க ஆரம்பித்தன.

வெளிறிப் போன அவளுடைய முகத்தைப் பார்த்ததும், "வாம்மா, அப்பா அந்த ரூமிலேதான் இருக்காரு... போய்ப் பாரு!" என்றார்.

அப்பாவிற்கு என்ன என்று யோசித்தபடியே, அவ ருடைய அறைக்குள் நுழைந்தபோது, அவரைப் பரி சோதித்துக் கொண்டிருந்த டாக்டரைப் பார்த்தபோது தான், ஏதோ விளங்குவது போல்!

"அப்பா... உங்களுக்குத்தான் உடம்பு சரியில்லையா? என்னாச்சி...? ஆனா இஷூ..." என்றபடித் திரும்பிய போது, மறுபுறமிருந்த நாற்காலியிலிருந்து வீரேன் எழுவதைக் கண்டாள்.

அவன் வேகமாக வெளியே செல்ல, தன் உயிரே தனை விட்டு நீங்கிச் செல்வது போல் உருகி நின்றவளை, டாக்டரின் குரல் கலைத்தது.

"தீக்ஷா! அப்பாவுக்கு இப்ப எந்த ப்ராப்ளமும் இல்லை. ரெஸ்ட் எடுத்தாப் போதும்... அவர் டென்ஷன் ஆகாமப் பாத்துக்க வேண்டியது இனிமே உன் பொறுப்பு!" மெதுவாகக் கூறினார்.

அவளைப் பார்த்து பலவீனமாகச் சிரித்த கேசவனின் அருகே சென்று அமர்ந்தவள், "என்னப்பா! என்னாச்சி... ஏன் என்கிட்ட எதுவுமே சொல்லலை?" தவிப்புடன் கேட்டவளின் விழிகளில் கண்ணீர்த் துளி.

"எனக்கு ஒன்னுமில்லைம்மா... ஐயம் நார்மல்! லேசா நெஞ்சுவலி! ஆஞ்சியோகிராம் பண்ணி ப்ளாக் எதுவு மில்லேன்னு சொல்லிட்டாங்க... மருந்து மட்டும் குடுத் திருக்காங்க... அவ்வளவுதான்! நான் நல்லாருக்கேன்டா."

"டாக்டர்... அப்பா சொல்றது உண்மையா? வேற எதுவும் ப்ராப்ளம் இல்லையே? நான் இருக்கும்போது நீங்க ஏன்ப்பா அநாதை மாதிரி ஹாஸ்பிடல்லே தனியா இருந்தீங்க?" வேதனையுடன் கேட்டாள்.

"நான் தனியா இல்லை... என்னைக் கூட இருந்து வீரேன்தான் பொறுமையாப் பாத்துக்கிட்டாரும்மா..." பெருமையுடன் கூறினார் கேசவன்.

மனதிற்குள் பெரும் நன்றியுணர்வு வந்தாலும், உணர்வு கள் அவனுக்குச் சாதகமாய் செயல் புரிந்தாலும், ஏதோ ஒரு தடை உள்ளுக்குள்ளேயே அவனை மறுக்கச் செய்தது.

காயப்பட்ட மனம், தடைகளை உடைக்க முயன்று தோல்வியுற்றிருந்தது.

அன்றிரவு, தன் வாழ்க்கையைப் பற்றிய பலத்த யோசனையுடன் அமர்ந்திருந்தபோதுதான், தன்னால் வீரேனை மறக்க முடியாதென்பதை உறுதியாக உணர்ந் தாள் தீக்ஷா.

* * *

**ம**றுநாள் காலையில் எழும்போதே மனம் பெரும் குழப்பத்திலிருந்தது.

ஜன்னல் திரையை விலக்கி, விடியலைப் பார்த்த போது, பிரமிப்பாய்...!

ஒப்பிட முடியாத இந்த இயற்கைக்குத்தான், என்னென்ன வித்தைகள் சாத்தியமாகிறதென்ற ஆச்சர்யம் வந்தது..!

பறவைகளின் கூடுகளிலிருந்து சங்கீதம் கேட்க ஆரம் பிக்க, இரைக்காக இசைக்கின்ற கூவல் மெலிதாய் மனதை நிறைத்தது.

சிறிது நேரம் இயற்கையை ரசித்த பிறகு, குளித்து தயாராகி கேசவனைப் பார்க்க அவருடைய அறைக்குச் சென்றாள்.

அப்போதுதான் அங்கு வீரேன் வந்திருப்பது தெரிந்தது.

சட்டென்று உடலெங்கும் பரவிய விதிர்ப்புடன் அப்படியே உறைந்து நின்றவளை,

''வாம்மா... வீரேன் வந்திருக்காரு பாரு!'' உற்சாகமாக வரவேற்றார் கேசவன்.

அவள் மெதுவாகத் திரும்பி வீரேனை நோக்கிய போதுதான், அவனிடம் தெரிந்த பெரிய மாற்றத்தை உணர்ந்தாள், அவள்.

உடல் மெலிந்திருக்க, முகத்தில் இனம் புரியாத ஒருவித அமைதியும், விழிகளில் பெரும் அலைப்புறுதலும் தெரிந்தன.

''சரி அங்கிள்... நான் கிளம்பறேன்... டேக் கேர்!''

அவளைக் கண்டதும் மெதுவாக எழுந்தபடிக் கூறியவன் அவளருகில் வந்தவுடன், ஒரு கணம் மௌனமாக நின்றான்.

தீக்ஷாவின் விழிகள், அவனுடைய தோள் வளைவிற்கு மேல் ஏனோ உயரவேயில்லை.

''ஹௌ ஆர் யூ தீக்ஷா?'' மென்மையான குரலில் கேட்டான் வீரேன்.

தவிப்புடன் தலைகுனிந்தபடி, ''ம்... ஃபைன்'' என்றாள் அவள்.

பிறகு அவன் விடைபெற்றுச் செல்ல, ஏனோ அவள் மனமே வெற்றிடமானதைப் போல ஒரு உணர்வு!



''என்னம்மா... ராத்திரி நல்லாத் தூங்கினியா...?'' அக்கறையுடன் விசாரித்தார் கேசவன்.

''நான் நல்லாத் தூங்கினேன்ப்பா! உங்களுக்கு இப்ப எப்படி இருக்கு? உடம்பு சரியில்லைன்னா உடனே என் கிட்டே ஏன்ப்பா முதல்லே சொல்லலை?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''வீரேன் தாம்மா உன்னை டிஸ்டர்ப் பண்ண வேணாம்னாரு... ஏற்கெனவே தன்னால உனக்குப் பெரிய 'ஷாக்'குன்னு எங்களை எல்லாம் தடுத்திட்டாரு! இந்தக் கெடுதல்லேயும் ஒரு நல்லது மாதிரி, ஈஸ்வர் எல்லா உண்மையையும் புரிஞ்சிக்கிட்டு வந்து என்கிட்டே மன்னிப்புக் கேட்டான்மா! கிரி கூட இப்ப திருந்திட்டதா கேள்வி... அவனுக்குக் கல்யாணத்துக்குப் பாத்திட்டிருக்கறதா ஈஸ்வர் சொன்னான்.'' ஒரு பெருமூச்சுடன் கூறினார்.

இதயம் விரக்தியுடன் புன்னகைத்து, ரணமாய் சிதறிக் கிடந்த தன் துகள்களை வருடியது.

17



மறுநாள், ஐஸ்வர்யாவும் கார்த்திக்கும் கேசவனைப் பார்க்க வந்திருந்தனர்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பும்போது, கோவிலுக்குச் செல்வதாகக் கூறி தீக்ஷாவையும் அழைத்தனர்.

''தீக்ஷா! நாங்க ரெண்டு பேரும் கோவிலுக்குப் போறோம். நீயும் வாயேன்... ஒரு சேஞ்சா இருக்கும்...'' என்று வற்புறுத்தி அவளை அழைத்துச் சென்றாள் ஐஸ்வர்யா.

அங்கு சென்றதும்தான் தெரிந்தது... வீரேனும் அங்கு வந்திருந்தான்.

தரிசனம் முடிந்து பிரகாரத்தில் அமர்ந்திருந்த போதும், மௌனமாகவே அமர்ந்திருந்தாள் அவள்.

ஐஸ்வர்யாவும், கார்த்திக்குமே உற்சாகத்துடன் பேசிய படி, தங்கள் பேச்சில் வீரேனையும் இணைத்துக் கொண்டனர்.

ஆனால், வீரேனுடைய விழிகள், தீக்ஷாவிடமே விலகாமல் பதிந்திருந்தன.

"என்ன வீரேன்... நீங்களும் எங்களை மாதிரி அடிக்கடி கோவிலுக்கு வருவீங்களா?" கார்த்திக் கேட்டான்.

சோம்பலாக நிமிர்ந்தவன், "ஊஹூம்... கோவிலுக்குப் போற பழக்கமே எனக்குக் கிடையாது... ஆனா முதல் தடவையா, கொஞ்ச நாள் முன்னாடி என்னோட ஒரு விஷ் நிறைவேறணும்னு ஒரே ஒரு தடவை வந்திருக்கேன்" என்றான் எங்கோ பார்த்தபடி!

அவன் கூறியது என்னவென்று புரிந்ததும், தீக்ஷாவின் மனம் சிலிர்த்தாலும், எந்த நிமிடத்திலும் தன்னை சந்தேகப் படாத ஒரு உறுதி அவனிடம் இருக்குமாவென்ற சந்தேகமும் கூடவே வந்தது.

அவளுடைய முகத்தையே பார்த்திருந்த ஐஷூவிற்கும் அவளுடைய தவிப்பு புரிவதாய்...!

பிறகு, வீரேன் கிளம்பும்போது அவனை நிறுத்தினாள் ஐஸ்வர்யா.

"வீரேன்! எங்களுக்கு ஒரு சின்ன ஹெல்ப்! நீங்க போகும் போது தீக்ஷாவை அவங்க வீட்டில ட்ராப் பண்ணிட முடியுமா? நாங்க இப்படியே ரயில்வே ஸ்டேஷ



னுக்குப் போறோம்... இவங்க அக்கா ஊரிலே இருந்து வரேன்னிருக்காங்க... ரிசீவ் பண்ணனும்! ப்ளீஸ்..." தர்ம சங்கடத்துடன் கேட்டாள்.

உடனே, பதட்டத்துடன் நிமிர்ந்தாள் தீக்ஷண்யா.

"வேண்டாம் ஐஷூ... நான் ஆட்டோவிலேயே போயிடு வேன்." என்றவளைத் தடுத்தது வீரேனின் ஆழ்ந்த குரல்!

"எப்படியும் நான் கேசவ் அங்கிளைப் பாக்க, அங்கே உங்க வீட்டுக்குத்தான் போறேன்... ஆட்டோ டிரைவரை நம்பறவங்க, என்னையும் நம்பலாம்!" சிறு விரக்தியுடன் கூறினான்.

பதில் சொல்லாமல் மௌனமாய் பூமியையே வெறித்த வளிடம், விடைபெற்று ஐஸ்வர்யாவும் கார்த்திக்கும் செல்ல, எந்தவித எதிர்ப்புமின்றி காரில் ஏறி அமர்ந்தாள் அவள்.

மடியில் கோர்த்திருந்த கைகளையே பார்த்திருந்த வளின் மனதிற்குள் பெரும் குழப்பம்!

வீரேனும், எதுவும் பேசாமல் இலக்கின்றி எதிரே வெறித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

இருவருக்கிடையேயும், இனம் புரியா ஊடல்... சிறு பிணக்காய்!

வீதியெங்கும் வெளிச்ச தீபமாய்... இரவல் வெளிச்சம் வாங்கி ஒளிர்ந்து கொண்டிருந்தன, மின் விளக்குகள்!

தன்னுடைய வாழ்க்கை மட்டும், விடியா இருளுடன் இருண்டிருப்பது போல் ஒரு பிரமை எழ, சட்டென்று இனம் புரியாத பயத்தில், அவளுடைய உடல் சிலிர்த்தது.

கண்ணோரப் பார்வையில் அவளுடைய அசைவை... உணர்வுகளைப் படித்தவன், சட்டென்று 'ஏசி'யைக் குறைத்தான்.

தனக்காக, அவன் பார்த்துப் பார்த்து செய்கின்ற ஒவ்வொரு விஷயமும் தன்னைப் பெரும் கடன் காரியாக்குவதை அவளால் உணர முடிந்தது.

ஆனால் எந்தவித உணர்வையும் வெளிக்காட்டாமல், கல்லாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள் அவள்.

அவனும், எதுவும் பேசாமல், நெறித்த புருவ மத்தியில் யோசனையுடன் வர, அந்தப் பயணம் முழுவதுமே ஒரு வித மௌன யுத்தமாய்!

வீட்டு வாசலில் கார் நின்றவுடனே, எங்கோ ஒரு காட்டில் புலியிடமிருந்து தப்பி ஓடும் மானைப் போல் அவள் வேகமாக இறங்கிச் செல்ல, வீரேனுடைய முகம் பாறையாய் இறுகியது.

ஆனால், எந்தவித உணர்ச்சியையும் முகத்தில் கசிய விடாமல் காத்தபடி உள்ளே வந்து, கேசவனிடம் நலம் விசாரித்து விட்டு உடனே கிளம்பிச் சென்றான் அவன்.

காரில் திரும்பும்போது, நினைவுகளைத் தோண்டினால் புதையலாய் மேலெழும்பின, தீக்ஷாவின் ஞாபகங்கள்!

அவள் அருகில் இல்லாத நிமிடங்கள், இப்போதெல்லாம் தகிப்புடன் தீயாய்ப் பற்றியெரிந்தன.

தேய்ந்த நிலவு வளர்ந்து முழு நிலவாய் பிரகாசிப்பது போல், அவள் மனதிலும் நேசமும் அன்பும் வளர்ந்து தன்னை வந்து சேர மாட்டாளாவென்று மனம் ஏங்கித் தவித்தது.



அவனால், அவள் விலகி விலகிச் செல்வதைத் தான் தாங்க முடியவில்லை.

என்ன செய்தால் அவளுடைய மனம் மாறுமென்பது புரியாமல் மூச்சுக் காற்றிற்கு திணறுவது போல் துடித்தான் அவன்.

அன்றிரவு, தீக்ஷாவிற்கும் பெரும் தவிப்பாய்!

தூங்கா இரவில் இரு விளக்குச் சுடர்களாய்... அவளுடைய இரு கண்மணிகளும் மின்னின.

* * *

பிறகு வந்த நாட்களில், தினமும் ஒரு முறையாவது அவர்களின் வீட்டிற்கு வந்து கேசவனைப் பார்த்து நலம் விசாரித்து செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் வீரேன்.

அவன் வருகின்ற நேரங்களில் தனிமையை நாடிச் செல்பவள், தந்தை அழைத்த பிறகு, அதுவும் அவன் கிளம்பும் நேரத்திற்குத்தான் கீழே வருவாள்.

ஒரு நாள் ஐஸ்வர்யாவிடமிருந்து போன் வந்திருப்பதாக தனம்மா வந்து கூறினார்.

ஆவலுடன் சென்று எடுத்தபோது, "தீக்ஷா! இன்னிக்கு உனக்குப் பிடிச்ச ஒரு புரோக்ராம் இருக்கு... அதுக்கு டிக்கெட் புக் பண்ணியிருக்கேன்" உற்சாகத்துடன் கூறினாள் ஐஸ்வர்யா.

"என்ன புரோக்ராம்டி...?" சுவாரசியமின்றி கேட்டவளை அவள் கூறிய பதில், உடனே விழி விரிக்கச் செய்தது.

"கே.ஜே.யேசுதாஸ் சாரோட பாட்டுன்னா உனக்கு ரொம்பப் பிடிக்கும் இல்லையா? இன்னிக்கு ஈவினிங்

அவரோட கர்நாடிக் கன்சர்ட் ஒன்னு இருக்கு! உனக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணியாச்சு!''

அதைக் கேட்டதும் மனம் சிறகு விரிக்க, மென்மையான இசை மட்டுமே இப்போதெல்லாம் தன்னை அமைதிப் படுத்துவதை உணர முடிந்தது.

அன்று மாலையானதும் தயாராகி, கேசவனிடம் கூறி விட்டு, ஐஸ்வர்யாவுடன் அந்த நிகழ்ச்சிக்குச் சென்றாள் அவள்.

முன் வரிசையிலேயே டிக்கெட் பதிவு செய்திருந்தனர்.

நிகழ்ச்சி ஆரம்பித்தவுடனே, அவளுக்கு அருகில் காலி யாக இருந்த ஒரு இருக்கையில் யாரோ ஒருவர் வந்து அமர்வதை உணர்ந்து இயல்பாகத் திரும்பியவளின் விழிகள், அப்படியே நிலை குத்தி நின்றன.

சிறு புன்னகையுடன் ''ஹலோ...'' என்றபடி அமர்ந்த வீரேனுக்குப் பதிலாக ஒரு 'ஹலோ' சொல்லக்கூட அவளுக்கு மனமில்லை.

இதெல்லாம் அவனுடைய வேலைதானாவென்று எண்ணும்போதே, மனதின் மூலையில் சிறு கோபம் துளிர் விட்டது.

அவனைக் கண்டும் காணாததைப் போல் திரும்பியவள், அந்த நிகழ்ச்சி ஆரம்பித்தும் ஒருவித இறுக்கத்துடனே இருந்தாள்.

உடலில் ஓடும் ஒவ்வொரு துளி உதிரமும் அவனுடைய பெயரையே உச்சரிக்கும்போது அலை பாய்ந்த மனதை அடக்கவும் தெரியவில்லை.



பிறகு, நேரம் செல்லச் செல்ல, இசையின் மகத்துவத்தில் மனம் உருகிக் குழைந்து போனது.

ஒவ்வொரு பாடலையும் தேன் துளியாய்... சக்கர வாகப் பறவையாய், நெஞ்சம் உள்வாங்க ஆரம்பித்தது.

விழிகளில் மின்னலுடன்... செப்பு உதடுகள் அழகாகக் குவிந்திருக்க... தன்னை மறந்து இசையில் லயித்திருந்த வளை ரசனையுடன் வருடின, வீரேனுடைய விழிகள்!

''கண் பார்த்து கதைக்க முடியாமல் நானும்

தவிக்கின்ற ஒரு பெண்ணும் நீதான்...

கண் கொட்ட முடியாமல்... முடியாமல் பார்க்கும்

சலிக்காத முதல் பெண்ணும் நீதான்!''

என்ற பாடல் வரிகள் ஏனோ அழையா விருந்தாளி யாய் நினைவிற்கு வந்தன.

தன்னுடைய மொத்த உணர்வுகளின் அர்த்தச் செறிவும், அந்தப் பாடலாய் வந்திருப்பது போல்!

ஒரு பெருமூச்சுடன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தான் வீரேன்.

அன்று வீடு திரும்பிய பிறகும், அவளுடைய அருகாமை அவனைப் பெரிதும் அலைக்கழித்து பேதலிக்கச் செய்ய, இனம் புரியாத தவிப்பில் ஓய்ந்து போனது அவன் மனம்!

அவளுடன், மனதிற்குள்ளேயே பேசிய காலங்கள் தான் இப்போதெல்லாம் அதிகமாய்!

நினைவாலேயே அவள் உருவம் செய்து, அதை தாபத் துடன் அணைத்தது மனது!

## 18



**வா**ழ்க்கை தன் போக்கில் நடம் பதிக்க, காதலின் தாக்கம் நீக்ஷாவை யும் உருக்கிப் புரட்டிப் போட்டது.

வீரேந்தர், அவளுடைய ஒப்புதலுக் காக மௌனமாய் காத்திருக்க, அவளுக்குள்ளும் பெரும் போராட்டம்!

இப்போதெல்லாம் வீட்டிற்கு அவன் வந்து போகும் வரையில், கேசவன் எத்தனை முறை அழைத்தாலும் அவள் வெளியே வருவதே இல்லை.

ஒரு நாள், அவளிடம் இது பற்றி மெதுவாகக் குறை பட்டுக் கொண்டார் அவர்.

''என்ன நீக்ஷா? நான் கூப்பிட்டனுப்பியும் நீ வரவே இல்லை... வீரேன் தம்பி எவ்வளவு நேரம் காத்திருந்தாரு தெரியுமா? பாவம்... அவருதான், தான் செஞ்ச தப்புக்கு நம்மகிட்டே மன்னிப்புக் கேட்டுட்டாரே! எதனால அப்படிச் செஞ்சாருங்கிற உண்மையும் நமக்குத் தெரிஞ்சிடுச்சு!

''இப்போ, என்ன, ஏதுன்னு ஒண்ணும் சொல்லாம மாட்டேன்... வேண்டாம்னு இது என்னம்மா வீம்பு? என் பொண்ணு இப்படி இருக்க மாட்டாளே? என்னாச்சுடா உனக்கு?''

பரிவுடன் அவளுடைய தலையைக் கோதியபடி கேட்டார் கேசவன்.

சட்டென்று, அவளுக்குள் ஏதோ ஒன்று உடைவது போல்!

''அப்பா... ப்ளீஸ் என்னை எதுவும் கேக்காதீங்க... எனக்கு பயமா... குழப்பமா இருக்கு! இப்ப கிரி சொல்லி என்னைப்பத்தி தப்பா நினைச்சவரு... நாளைக்குக் கல்யாணத்துக்கப்புறம் வேற யாராவது சொல்லி என்னை சந்தேகப்பட்டா... என்னால சத்தியமா இன்னொரு தடவை வார்த்தைகளாலே தீக்குளிக்க முடியாதுப்பா!''

சொல்லிவிட்டு முகம் மூடி அழ ஆரம்பித்தாள் நீக்ஷன்யா!

உடனே பதறிப்போய் மகளை அணைத்துக் கொண்டவர், அவளுடைய அழுகை குறையும் வரை பொறுமையுடன் காத்திருந்தார்.

''நீக்ஷாம்மா! நீ நினைக்கிற மாதிரி இல்லைம்மா வீரேன்... ரொம்ப அற்புதமான ஒரு மனுஷன்! அது மாதிரி எதுவும் நடக்காது... ஒரு பாதையில போறோம்... எதிரிலே இருட்டா இருக்கு... வரப் போற திருப்பத்துல ஒரு வேளை ஏதாவது கொடிய மிருகம் இருக்குமோன்னு பயந்துட்டுப் போகாமலா இருக்கோம்... தைரியமாப் போய் பாத்துடறதில்லையா?

''அதுதாம்மா வாழ்க்கை! எதுக்கெடுத்தாலும் பயந்துட்டிருந்தா அவ்வளவுதான்! முன்னெல்லாம் நீ ஒரு 'ஆப்டிமிஸ்டா' இருக்கியேன்னு நான் ரொம்ப சந்தோஷப் படுவேன்... ஆனா இப்போ மாறிட்டியேன்னு கவலையா இருக்கு.''

அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தியபடி விழி நீரைத் துடைத்து விட்டார்.

நீக்ஷாவின் மனம், பெரிதும் குழம்பியிருந்தது. அவளுடைய நெஞ்சுக்குள், நீங்காமல் நிறைந்திருந்தான் வீரேன்.

அவனை நேருக்கு நேர் பார்த்து இரு வார்த்தைகள் பேசவே தடுமாறி விட நேரும் போல் தோன்றியது.

யோசனையுடன் அமைதியாக அமர்ந்திருந்தவளை, ஆதரவாகத் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றார் கேசவன்.

அவனைப் பற்றிய நினைவுகள் தனக்கு நன்மையைத் தராதென்பதும், அவை தன்னுடைய நிம்மதியைக் குலைக்கப் போகிறதென்பதும் அவளுக்குப் புரிந்தன.

ஆனால், எல்லாம் தெரிந்தும் அதிலிருந்து மீள மட்டும் வழி தெரியாமல் தத்தளித்தாள் தீக்ஷா!

* * *

மறுநாள் காலையிலேயே அவளை அழைத்தார் கேசவன்.

"தீக்ஷா! நாம ஒரு இடத்துக்குப் போகப் போறோம். எங்கேன்றது சர்ப்ரைஸா இருக்கட்டும்... சீக்கிரம் ரெடியா யிடும்மா... இன்னிக்குக் காலையில நமக்கு டிபன் கூட வெளியிலதான்...! கிளம்பு... கிளம்பு!" என்றார் உற்சாகத்துடன்.

"எங்கேப்பா? நேத்து கூட இதைப் பத்தி நீங்க ஒன்னுமே சொல்லலை" சலுகையுடன் சிணுங்கினாள் அவள்.

"ம்... இப்பதான் சொல்றேனே! நான்... நீ... ஐஷூவும், கார்த்திக்கும் கூட வராங்க! சீக்கிரம்... கெட் ரெடி மை கேர்ள்!" உற்சாகமாகக் கூறிவிட்டுச் சென்றார்.

வெள்ளை நிற ஆர்கன்ஸாவில், ஒரு மென் சோக தேவதையாய்த் தயாராகி வந்தவளை, பெருமையுடன் மெச்சியது கேசவனின் பார்வை!



காரில் செல்லும்போதும், அவள் எங்கே செல்கிறோ மென்று அவரிடம் கேட்கவேயில்லை.

ஊரைத் தாண்டிச் சென்று, அந்த மன வளர்ச்சி குன்றிய மழலைகளின் காப்பக வாசலில் கார் நின்றபோது மன திற்குள், இங்கு ஏன் வந்திருக்கிறோமென்ற கேள்வி ஊற்றாய் எழும்பியது.

உள்ளே சென்றபோதுதான், அங்கு வீரேனுடைய கார் நின்றிருப்பதைக் கவனித்தாள் அவள்.

கேள்வியாக நிமிர்ந்து தந்தையை நோக்கும் போதே, "ஹாய் தீக்ஷா..." என்ற உற்சாகக் குரலுடன் ஐஷூ வந்துவிட்டாள்.

பின்னாலேயே கார்த்திக்கும் புன்னகையுடன் அவர்களை வரவேற்றனர்.

குழப்பத்துடன் அவர்களைத் தொடர்ந்தபோது, அழ வலக அறையில், கதிரேசனும் வீரேனும் அமர்ந்திருந்தனர்.

அவர்களைக் கண்டதும் வேகமாக எழுந்த கதிரேசன், "வாங்க... வாம்மா தீக்ஷண்யா... உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருந்தோம்" என்று ஆவலுடன் வர வேற்றார்.

அவரிடம் மென்மையாகப் புன்னகைத்தபடி, "நல்லா இருக்கீங்களா அங்கிள்...?" மெல்லிய குரலில் வினவினாள் அவள்.

"நல்லாருக்கேன்மா... நீ நம்ம வீட்டுக்கு வந்துட்டேன்னா, துள்ளிக் குதிக்கற அளவுக்கு இன்னும் தெம்பாயிடுவேன்" பாதி கேலியும் பாதி உண்மையுமாகக் கூறினார்.

சட்டென்று முகம் கசங்கிவிட, இமைகளைத் தாழ்த்திய வளிடம், "நீக்ஷா! இன்னிக்கு வீரேனுக்கு பர்த் டே... அவரோட பிறந்த நாளை எப்பவுமே இது மாதிரி இல் லங்கள்லேதான் கொண்டாடறது வழக்கமாம்... இந்த தடவை இங்கே இருக்கறதாலே எங்கிட்டே கேட்டாரு! கார்த்திக்தான் ஏற்பாடு செஞ்சாரு... ப்ளீஸ் அவரை விஷ் பண்ணு!" தணிந்த குரலில் கூறினாள் ஐஸ்வர்யா.

நீக்ஷாவிற்கு, ஒரு கணம் என்ன செய்வதென்றே புரியவில்லை.

அதற்குள், அனைவரும் வீரேனை வாழ்த்த ஆரம்பிக்க, "ஒரு ஃபார்மாலிட்டிக்காகவாவது அவரை வாழ்த் தேன்டி!" காதோரம் கிசுகிசுத்தாள் ஐஷு.

மெல்ல நிமிர்ந்தபோது, வீரேனுடைய விழிகள் மொழி புரியாத ஏதோ ஒரு செய்தியைத் தாங்கியபடி, எதிர்பார்ப் புடன் அவள் முகத்திலேயே பதிந்திருந்தன.

"மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ்!"

பிசிறடித்த குரலில் அவள் வாழ்த்தியபோது, வார்த் தைகள் ஓசையின்றித் தேய்ந்தன.

நேசிப்புக்கான வாசலை விழிக்கதவாய் திறந்து வைத்து, ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்தவளின் இதயத்தை மெலிதாய் வருடி சிலிர்க்கச் செய்தன... அவன் வார்த் தைகள்!

மறு நொடியே, அதுவரை நிலவிய மௌனம் சில்லென்று உடைய, "தேங்க்யூ நீக்ஷா..." மிருதுவான குரலில் கூறினான் வீரேன்.

இன்று அதிகாலையில் கண் விழிக்கும் போதே, இனி தூக்கம் கலைந்து எழும்போதெல்லாம், அவள் முகம் தன்னருகில் இருக்க வேண்டுமென்ற, ஒரு வேட்கை வந்ததை, சிலிர்ப்புடன் நினைவு கூர்ந்தது அவன் மனது.

மெதுவாகத் தலையைக் குலுக்கி அந்த நினைவுகளின் தாக்கத்திலிருந்து விடுபட்டான் அவன்.

* * *

பிறகு அனைவரும் உள்ளே சென்றபோது, ப்ரேயர் ஹாலில் பிள்ளைகள் வரிசையாகக் காத்திருந்தனர்.

மன வளர்ச்சி குன்றிய அந்த மழலை மலர்களைப் பார்த்தபோது, எல்லோருடைய இதயமும் கனத்துப் போனது.

கடவுளின் குழந்தைகளாக... உண்மையின் உருவாய்... மனதில் எந்தவிதக் குரோதமுமின்றி... வெள்ளை மனதுடன் சிரிக்கும் அந்தப் பிஞ்சுகள் அனைவரையும் ஈர்த்தனர்.

முதலில் கடவுள் வாழ்த்துப் பாடிவிட்டு, எல்லாப் பிள்ளைகளும் கோரஸாக வீரேனுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர்.

ஏனோ, உடனே சிலிர்த்த அவளின் இதயம், அவன் நூறாண்டு காலம் வாழ வேண்டுமென்று பிரார்த்தித்தது.

பிறகு, அந்தக் குழந்தைகளின் மொழி புரியாத பேச்சுக் களை கேட்டபடி, அவர்களுக்குத் தங்கள் கையால் உணவைப் பரிமாறியபோது, பெரிதும் நெகிழ்ந்து போனாள் அவள்.

குழந்தைகள் உணவை ஆர்வத்துடன் ருசித்துச் சாப்பிட்ட போது, இனம் புரியாத ஒரு அமைதி மனதில் படர்வதை அவளால் உணர முடிந்தது.

பிறகு, அவர்களும் சாப்பிட்டு விட்டு அங்கிருந்து விடைபெற்று வரும் வழியில், பெரும் மௌனப் போராட்டத்துடனிருந்தாள் தீக்ஷண்யா.

கேசவனுடைய குரல் அவளைக் கலைத்தது.

"தீக்ஷா! இன்னிக்கு நைட் நமக்கு வீரேன் வீட்டில் தான் டின்னர்! கதிரேசன் உன்னைக் கட்டாயமா அழைச்சிட்டு வரச் சொன்னாரு!" என்றார் மெதுவாக.

யோசனையுடன் தலையசைத்தபோது, தாயின் வெதுவெதுப்பான சிறகிற்குள் பாதுகாப்பாய் பதுங்கியிருக்கும் சிறு பறவையாய், வீரேனுடைய நினைவுகளைப் பத்திரமாக ஒளித்துப் பாதுகாத்தது மனது!

* * *

அன்று மதியம், தன் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியானதை எண்ணியபடி, தீக்ஷா யோசனையுடன் படுத்திருந்தாள்.

"மனிதன் பனிக்கட்டியைப் போல் குற்றமில்லாதிருந்தாலும், பனியைப் போல் பரிசுத்தமாக இருந்தாலும், அவன் சக மனிதனின் பழிச் சொல்லிலிருந்து தப்ப முடியாது."

ஷேக்ஸ்பியரின் அற்புதமான வரிகள் நினைவிற்கு வந்தன. வாழ்க்கையின் போக்கில் சென்றுதான், நமக்குண்டான வெகுமதிகளையோ, வேதனைகளையோ அடைய முடியுமென்பது புரிந்தபோது இதழோரம் விரக்திப் புன்னகையொன்று கசிந்தது.



அப்போது டெலிபோன் ஒலிக்க ஆரம்பித்தது.

கேசவனின் மதிய உறக்கம் கெட்டு விடுமேயென்று அவசரமாக எடுத்தாள், மறுமுனையில் சப்தமே இல்லை.

அவள், "ஹலோ... ஹலோ..."வென்று பலமுறை அழைத்துப் பார்த்துவிட்டு, எதிர்முனை நிசப்தமாக இருக்கவே வைத்துவிட்டாள்.

பிறகு, மறுபடியும் மணி ஒலிக்க எடுத்தாள். "ப்ளீஸ் தீக்ஷா... வெச்சிடாதே... நான் கிரி பேசறேன்" தயக்கத்துடன் கூறினான் அவன்.

உடலெங்கும் அக்னிப் பிழம்பாய்த் துடிக்க, விதிர்ப்புடன் எழுந்து அமர்ந்தாள் அவள்.

"சாரி தீக்ஷா... என்னை மன்னிச்சிடுன்னு நேரிலே வந்து உன் கால்லே விழுந்து கதறணும்னு ஆசைதான்! ஆனா... என்னை நினைச்சா எனக்கே அருவெறுப்பா இருக்கு! ஒரு நல்ல பொண்ணைப் பத்தி தப்பு தப்பா பேசிட்டு... இப்போ எந்த முகத்தை வச்சுக்கிட்டு அவ முன்னாடி போய் நிற்பேன்னு என் மனசாட்சியே என்னைக் கொல்லுது!"

"என்னோட சுயரூபம் அம்மாவுக்குத் தெரிஞ்ச அதிர்ச்சியிலே... நீ என்னை அவமானப்படுத்தினதா நினைச்சி செய்யக் கூடாத ஒரு பெரிய தப்பை நான் செஞ்சிட்டேன்... இப்ப எல்லாத் தப்பையும் உணர்ந்து திருந்திட்டேன்... என்னை மன்னிப்பியா தீக்ஷா?"

அவன் உடைந்த குரலில் முடித்ததும், அவளிடமிருந்து கனத்த மௌனமே பதிலாய்...!

சில நொடி தயக்கத்திற்குப் பிறகு, கிரிதர் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"நீ என்னை மன்னிச்சிட்டேன்னு, நான் எப்போ நம்புவேன் தெரியுமா? உன் மனசை மாத்திக்கிட்டு, வீரேன் அண்ணாவை நீ மணந்தப்புறம் தான்...

"அப்பாகிட்டே முடிவா சொல்லிட்டேன்... எனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடக்கணும்னா, அதுக்கு முன்னாடி நீயும் வீரேன் அண்ணாவும் சந்தோஷமா இருக்கணும்! அதுக்கப்புறம்தான் எனக்கு வாழ்க்கையிலே எல்லாமேன்றதை உறுதியா சொல்லிட்டேன்...

"பண்ணின பாவமெல்லாம் ரொம்ப உறுத்திட்டே இருக்கு தீக்ஷா! நிம்மதியா தூக்கம் கூட வரதில்லை... எல்லாத்துக்கும் நல்ல முடிவு, உன்னோட பதில்லே தான் இருக்கு... என்னோட பாவத்துக்குப் பிராயச்சித்தம்னா அது உங்க கல்யாணம் தான்...

"அம்மா ரொம்ப ஒடிஞ்சு போயிருக்காங்க... அப்பாவும் தான்! என் ஒருத்தனோட செயல்கள் எத்தனை பேரை பாதிச்சிருக்குன்னு நினைக்கிறப்போ வெக்கமா இருக்கு... தற்கொலை பண்ணிக்கலாம்னு நினைச்சா, அதுக்கும் தைரியமில்லை" உடைந்து போன மனத்துடனும், கம்மிய குரலுடனும் கூறினான்.

சட்டென்று பதறிப் போனாள் அவள்.

"கிரி... தயவு செஞ்சு அந்த மாதிரியெல்லாம் ஒரு தப்பான முடிவெடுத்திடாதே... தான் செய்த தவறுகளை தைரியமா ஒத்துக்கிட்டு, அதுக்காக வருத்தப்பட்டு தன்னைத் திருத்திக்கறவங்கதான் வெற்றிப் படிகள்லே ஏற முடியும்னு படிச்சிருக்கேன்... உன் தப்பை நீ உணர்ந்ததே போதும்... பை!" என்று வைத்து விட்டாள்.

அவன் திருந்தியது பெரும் நிம்மதியைத் தர, மனம் ஏனோ லேசாகி எடையற்ற இலவம் பஞ்சாய்ப் பறந்தது.

வெளியே மழையின் வரவை அறிவித்தபடி, வெட்கத்துடன் பூமிப்பெண் மணக்க ஆரம்பித்திருந்தாள்.

பால்கனிக்கு வந்தபோது, இனிதான சாரல் காற்று முகத்தை வருட, வெகு நாட்களுக்குப் பிறகு இயல்பான புன்னகையொன்று இதழில் பூத்தது.

சோக வாழ்க்கைப் பாதையில், ஆறுதல் மந்திரமாய் அவன் வார்த்தைகள்!

மழை கழுவிய மலராய் அவளுடைய விழிப் பூக்கள் பளபளத்தன.

தன்னுடைய நெஞ்சின் அலைகள், இனி உறங்கவே உறங்காதென்று புரிந்தது.

## 19



அன்று மாலையில், அழகிய சுடிதாரணிந்து தீக்ஷண்யா தயாராகும் போது, ஐஸ்வர்யாவும், கார்த்திக்கும் வந்து விட்டனர்.

பிறகு, நான்கு பேரும் கிளம்பிச் சென்றபோது, வாசலிலேயே அவர்களை எதிர் நோக்கிக் காத்திருந்தார் கதிரேசன். வீரேனுடைய அத்தையும் ஊரிலிருந்து வந்திருந்தார்.

அவர்கள் வந்துவிட்ட விஷயமறிந்து வேகமாக அங்கு வந்த வீரேன், ஜிப்பா, குர்தாவில் ஒரு கம்பீரமான இளவரசனைப் போலிருந்தான்..

உள்ளே செல்லும்போதே, தீக்ஷாவை நிறுத்திய ஐஸ்வர்யா, கார்த்திக்கிடமிருந்து ஒரு கிஃப்ட் பார்சலை வாங்கி அவளிடம் கொடுத்திருந்தாள்.

புரியாமல் வாங்கிக் கொண்டவளிடம், "வீரேன் வந்தவுடனே அதை நீயே அவர்கிட்டே குடு... எங்க கிஃப்ட் தனியா இருக்கு" என்றாள் குறும்புடன்.

"ஏய்... ஜஷூம்... நான்... என்னால முடியாது...! என்ன ஐஷு இது..?"

தவிப்புடன் கடிந்தவளுக்கு முள்ளின் மேல் நிற்பது போல்...!

வீரேன் வந்தவுடன், கதிரேசனே நினைவு படுத்தினார்.

"என்னம்மா? ரெண்டு பேரும் பரிசைக் குடுக்காம கையிலேயே வச்சிருக்கீங்க?" கேலியாகக் கேட்டார்.

"போடி..." ஐஷு அவளை நெட்டித் தள்ள, வேறு வழியின்றி பரிசைக் கொடுத்தாள் அவள்.

தன்னையறியாமல், தீக்ஷாவின் விழிகள் மெல்ல உயர்ந்து வீரேனை நோக்கின.

அந்த நிமிடம், அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி கண்களில் குறுகுறுப்புடன் ரகசியமாகப் புன்னகைக்க, சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்டாள் அவள்.

அவனுடைய விழிகள், அனிச்சைச் செயலாய்க் காதலையும், ஏக்கத்தையும் இணைத்து அரங்கேற்ற, இனம் புரியாத ஒரு உணர்வு அவளை ஆக்ரமித்து உள்ளம் சிறகாய்ப் படபடத்தது.



வீரேனுடைய பார்வை, இன்னும் தன் மீது கூர்மையாகப் படிந்திருப்பதை நிமிர்ந்து பார்க்காமலே, உணர்ந்தாள் அவள்.

மனதிற்குள் பெரும் தவிப்பும், படபடப்பும் சூழ்ந்தன.

"வாங்க... கேக் கட் பண்ணலாம்..." கதிரேசனின் அழைப்பு, அவளை உசுப்பி அழைத்தது.

மௌனமாகச் சென்று தந்தையின் அருகில் அவள் நின்றபோது, அவர்களைத் தவிர வீட்டு மனிதர்கள் மட்டுமே அங்கிருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள் அவள்.

வீரேன் கேக் வெட்டியதும், முதல் துண்டை எடுத்து கதிரேசன் அவனுக்கு ஊட்டினார்.

பிறகு ஒரு கேக் துண்டை வெட்டி எடுத்து அவன் நிமிர்ந்த போது, இருவருடைய பார்வையும் ஒரே நேர்க்கோட்டில் சந்திக்க, பெரும் எதிர்பார்ப்பும் ஏக்கமும், அவன் பார்வையிலேயே கசிவதாய்...!

மறுகணமே, படபடக்கும் இதயத்தோடு திரும்பிக் கொண்டாள் அவள்.

ஆனால், அவனுடைய அழுத்தமான காலடியோசை அருகில் வர வர, மனம் மத்தளமாய் முரசு கொட்ட ஆரம்பித்தது.

அவளெதிரில் வந்து நின்றவன், அந்தக் கேக்கை மெதுவாக அவள் முன் நீட்டினான்.

எங்கே, அதை அவன் தன் உதட்டருகில் கொண்டு வந்து விடுவானோ என்ற பதைப்புடன், அவசரமாக வாங்கிக் கொண்டாள் தீக்ஷா.

"தேங்க்ஸ்..." அவளுடைய உதடுகள் மென்மையுடன்... ஆனால் அழுத்தமாக முணுமுணுத்தன.

விருந்து பிரமாதமாகத் தயாராகியிருக்க, எல்லோருக்கும் கார்த்தாவும், சமையல்காரம்மாவுமே பரிமாறினர்.

சாப்பிட்டு முடித்த பிறகு, பெரியவர்கள் தொழில் பற்றிய பேச்சுகளில் இறங்க, வீரேன் மெதுவாக எழுந்து கார்த்திக்கை அழைத்தான்.

"கார்த்திக்... மாடியில ஒரு ரூஃப் கார்டன் அமைச்சிருக்கேன்.. பாத்துட்டு வரலாமா?" இயல்பான ஆர்வத்துடன் அழைத்தான்.

உடனே கார்த்திக் உற்சாகத்துடன் எழ, ஐஸ்வர்யாவும் அவளைப் பற்றி எழுப்பினாள்.

நால்வரும் மொட்டை மாடிக்குச் சென்றபோது, அங்கு தொட்டிகளில் சீராக அடுக்கப்பட்டிருந்த மலர்ச் செடிகளும்.. செயற்கை நீர் வீழ்ச்சியும்.. வண்ணக் குடைகளின் கீழ் தெரிந்த இருக்கைகளும் இதயத்தை அள்ளிச் சென்றன.

மேலே வேயப்பட்டிருந்த ட்ரான்ஸ்பரண்ட் ஓடுகளின் வழியே நிலவொளி தங்கச் சாரலாய் கசிய, வெளிச்சத்தை வாரி இறைத்தன மின்நிலவுகள்!

அந்த செயற்கை நீர்வீழ்ச்சி ஓடும் பாதையில் கூழாங்கற்களுக்கிடையில் அழகிய வண்ண மீன்கள் துள்ளிக் குதித்தாட, பசுமையான செடிகள் சுற்றிலும் படர்ந்திருந்த விதம் வெகு அழகாய்...!

நல்ல ரசனையுடன் அலங்கரிக்கப் பட்டிருந்தது, அந்த இடம்!



ஆனால், பிரம்மன் வடித்திட்ட காவியச் சிற்பமாய் நின்றிருந்தவளின் அழகில் மெய்மறந்து போயிருந்த வீரேனுடைய விழிகள், சட்டென்று பெண் மின்மினிகளாய் ஒளிர்ந்தன.

அந்த மலர்களின் அழகில் லயித்திருந்தவளை, "பிடிச்சிருக்கா...?" என்ற வீரேனின் ஆழ்ந்த குரல் கலைத்தது.

காதோரம் கேட்ட குரலால் விதிர்த்துப் போய் திரும்பியவள், தடுமாறி விழப்போக, உடனே அவளை மென்மையாக ஏந்திக் கொண்டான் அவன்.

ஒரு மலரை ஏந்துவதைப் போன்ற மென்மையுடன் அவளைத் தாங்கி நிறுத்தியவன், சுற்றுப்புறம் மறந்து... தன்னை இழந்து.. அவளின் இதழ்களை நோக்கிக் குனிந்தான்.

அந்த நிமிடம்.. அவளைத் தவிர வேறு ஒருவரும் பெண்ணாய்... தனக்கு இணையாய் வரமுடியாதென்பது உறுதியாக புரிந்தது.

அவளுடைய மூச்சுக்காற்றின் இதமான நிழலில் உறங்க ஆசை வந்தது...

அவளுடைய அற்புதமான அழகு அவனைப் பெரிதும் நிலைகுலையச் செய்வதாய்...!

மறுகணமே சிலிர்த்து நிமிர்ந்தவள், அவனுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டு பதட்டம் கலந்த லாவகத்துடன் உடனே விலகினாள்... முகம் குங்குமமாய் சிவந்து போனது!

வீரேனிடம் சட்டென்று ஒரு விறைப்புத் தன்மை வந்தது...!

புறக்கணிக்கப்பட்ட கோபமும் வேதனையும், மனம் முழுவதும் விரவிப் பரவின.

இறுகிய நாணின் உறுதியுடன், ஒருகணம் கண்களை இறுக மூடித் திறந்தவன், மறுகணமே வேகமாகக் கீழிறங்கிச் சென்றான்.

ஒரு வித இயலாமையுடன் கார்த்திக் அவனைத் தொடர, எல்லாவற்றையும் கவனித்த ஐஸ்வர்யா, வேகமாக அவனிடம் வந்தாள்.

''ஏன்டி.. அவரை இப்படி வதைக்கிறே? எனக்கு இப்பல்லாம் உன் மேலதான் கோபம் வருது.. அவர்தான், தான் செஞ்ச தப்பை உணர்ந்து உன்கிட்ட மன்னிப்பு கேட்டார் இல்லை? அப்புறமும், ஏன்டி இப்படி வறட்டுப் பிடிவாதம் பிடிக்கறே? இதுவே அவரோட இடத்துல நான் இருந்திருந்தேன்னா, வலுக்கட்டாயமா எப்படியாவது உன்னை அடைஞ்சிருப்பேன்... உன்னோட உணர்வுகளுக்கு அவர் எவ்வளவு மதிப்பு குடுக்கிறாருங்கறதை புரிஞ்சிக்கடி தீக்ஷா... ப்ளீஸ்!'' என்றாள் கெஞ்சும் குரலில்!

மனம் வறண்டு போயிருந்தது... ஆனால், அவன் விலகி சென்ற மறுகணமே, இதயம் பாறையாய் கனத்தது.

இருவரும் கீழே வந்தபோது, ஹாலில் ஆண்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

வீரேனை மட்டும் காணவில்லை.

அவர்களைக் கண்டதும் திரும்பிய கதிரேசன், ''தீக்ஷா! உங்களுக்காகத்தான் காத்திருக்கோம்.. கேசவ் கிளம்பணுமாம்.. டயர்டா இருக்காம்! உள்ளே போங்கம்மா... காந்தா ஆன்ட்டி டைனிங் ஹாலிலே தான் இருப்பா! சொல்லிட்டு வாங்க.. கிளம்பும் போது சொல்லச் சொன்னா!'' என்றபடி இருவரையும் உள்ளே அனுப்பினார்.

வீரேனைக் காணாமல், அவள் மனம் தவித்தது. அவனை தொடத் தயங்கிய மனம், மழைக்கால சிறகுகளாய் அவன் நினைவுகளுடன் ஒட்டியபடி இணைந்திருந்தது.

## 20



தீக்ஷண்யாவும், ஐஸ்வர்யாவும் சாப்பாட்டு அறைக்குள் நுழையும் போதே, அங்கு கேட்ட குரல் இருவரையும் தடுத்து நிறுத்தியது.

''ஏன்ப்பா வீரேன்? நான் சொல்றேன்னு கோபிக்காதே... அந்தப் பொண்ணு தீக்ஷாதான் உன்னைக் கண்டாலே முகம் திருப்பிக்குதே... அப்புறம் ஏன் அதைத்தான் கல்யாணம் செஞ்சிப்பேன்னு அடம் பிடிக்கறே? வேற அழகான பொண்ணுங்களே உலகத்துல இல்லையா என்ன..? நீ 'ம்'ன்னு சொன்னா நூறு பொண்ணுங்க கியூவில நிப்பாங்களே!''

காந்தா ஆதங்கத்துடன் கேட்டார்.

ஒரு பெருமூச்சைத் தொடர்ந்து, சீறலாக வந்தது அவனுடைய பதில்!

''அத்தை.. போதும்! இதைப்பத்தி இனிமே யாருமே பேச வேண்டாம்.. அவதான் என்னோட மனைவி! இந்த ஜென்மத்துல மட்டும் இல்லை.. இனி வர ஜென்மங்களுக்கும் அவதான்! அவ, மாட்டேன்னாலும் வேற ஒருத்தியை நான் கல்யாணம் பண்ணிப்பேன்னு கனவில கூட நினைக்காதீங்க!

''எனக்கு அவ.. அவளுக்கு நான்தான்! என்னால அவ வேதனைப்பட்டா தாங்க முடியாது அத்தை! அதனால

தான் என்னால அவளைக் கல்யாணத்துக்கு ஃபோர்ஸ் பண்ண முடியலை.

''அவ ஒருத்தியால் மட்டும்தான் எனக்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் தரமுடியும்கிறதையும், அவ இல்லாம எனக்கு வாழ்க்கையே இல்லைங்கிறதையும், நானே லேட்டாத்தான் புரிஞ்சிக்கிட்டேன்... இனிமே அவளைப் பொக்கிஷமாப் பாத்துக்கணும்னு முடிவெடுத்திருக்கேன்.''

''ஒரு தடவை அவளைத் தப்பா நினைச்சி துடிக்கச் செஞ்ச.. அதனாலே நான் தீக்குளிச்சமாதிரித் தவிச்சதெல்லாம் என் ஆயுசு வரைக்கும் போதும்.. இனி ஒருமுறை அவளைக் கஷ்டப்பட நான் விடவேமாட்டேன்...

''அது யார்கிட்டேயிருந்தாலும்... ஏன்... என்கிட்டே இருந்தே.. என்னோட கோபம், ஈகோ இதெல்லாம் கூட இனி அவளைக் காயப்படுத்தாமக் காப்பேன்...

''இது வரைக்கும் எந்தப் பொண்ணுமே எட்டிக் கூடப் பாத்திருக்காத என் இதயத்துக்குள்ளே மயிலிறகா நுழைஞ்சவ அவ! எத்தனை நாட்களானாலும்.. ஏன் வருஷங்களானாலும் கூட நான் அவளுக்காகக் காத்திருப்பேன்..

''அம்மாவைப் பத்தின வெறுப்போட பெண்கள் எல்லாருமே பெரிய துரோகிகள்னு நினைச்சிட்டிருந்தப்போ... தான் ஒரு மாசற்ற தேவதைங்கிறதை நிரூபிச்சு என் மனசிலே பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியவ அவ!

''அவளைத் தவிர என் வாழ்க்கையிலே வேற யாருக்கும் இடமில்லை...!'' உறுதியாக முடித்தான் அவன்.



ஒரு நொடி அமைதிக்குப் பிறகு, ''வீரேன்... நான் உன்னை வளர்த்த உரிமையில் கேக்கறேன்ப்பா.. உன்னோட ஆயுசு காலம் வரைக்கும் அவ உன்னைப் புரிஞ்சிக்கலைன்னா...?'' கவலையுடன் கேட்டார் காந்தா.

உடனே, அவனிடமிருந்து அழுத்தமாக வந்தது பதில்!

''அப்பவும், நான் அவளுக்காகத்தான் காத்திருப்பேன் அத்தை... என்னோட ஆயுட்காலம் வரைக்கும் அவளை என்னால மறக்க முடியாதுங்கறதை விட, அவளை ஞாபகம் வச்சிருக்கற வரைக்கும் தான் நான் உயிரோட இருப்பேன்கிறது மட்டும், இப்போ எனக்கு நல்லாப் புரியுது.''

அழுத்தமான குரலில் தெளிவாக முடித்தான் வீரேன்.

* * *

**வீ**ரேன் கூறியதைக் கேட்டதும், தீக்ஷாவின் நெஞ்சம் பதறிப் போய் மௌனமாக அழத் துவங்கியது.

சிப்பியின் பெருமை முத்தாய் விளைவதைப் போல், மனதிற்குள் தன் காதலை மூடி வைத்து அவன் நம்பிக்கையுடன் காத்திருப்பது புரிந்தது.

உணர்வுப் பிழம்பாய் உருகி நின்றவள், மறு விநாடியே வேகமாகத் திரும்பி ஹாலுக்கு வந்தாள்.

அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டியிருந்தது. அதற்கு தனிமை பெரும் அத்தியாவசியத் தேவையாய்!

''அப்பா... நாம கிளம்பலாமா?'' பதைப்புடன் அவள் கேட்க, அப்போதுதான், காந்தாவும் வீரேனும் உள்ளிருந்து வந்தனர்.

"ஒரு நிமிஷம்மா.." என்று அவர்களைத் தடுத்த காந்தா, இரு பெண்களையும் பூஜையறைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு, மஞ்சள், குங்குமத்துடன் இரு பட்டுப் புடவைகள் ஒரு ட்ரேயில் வைக்கப்பட்டிருந்தன.

"எம்மா... எதுக்கு இதெல்லாம்?" தர்மசங்கடத்துடன் மறுத்த நீக்ஷாவிடம், பிடிவாதமான புன்னகையோடு தாம்பூலம் வைத்துக் கொடுத்தார். அவர்.

பிறகு அவர்களிடம் விடைபெற்றுக் காரில் செல்லும் போது, பெரும் யோசனையிலிருந்த நீக்ஷாவிடம் கனத்த மௌனம் மட்டுமே பதிலாய்...!

அப்போது, அந்த நிசப்தத்தை சிதறடித்தது.. அவளுடைய செல்லிலிருந்து ஒலித்த மழலையின் மந்திரச் சிரிப்பொலி அழைப்பு!

எடுத்தால், வீரேனின் குரல் கம்பீரமாகக் காதோரம் வருடியது.

"உன் கிஃப்டுக்கு ரொம்பத் தேங்க்ஸ் நீக்ஷா! எனக்கு ரொம்பப் பிடிச்ச தாஜ்மஹால்... அதுவும் இதய வடிவில இருக்கற கண்ணாடிக் கூட்டுக்குள்ளே... ரியலி ஃபன்டாஸ்டிக்! இந்த நிமிஷம் நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்... தேங்க்யூ ஸோ மச்!" உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான்.

பிறகு நிலவிய தர்ம சங்கடமான மௌனத்தை கலைத்தவள், "சாரி.. நான் அதை.. வாங்கலை.." மெல்லிய குரலில் தவிப்புடன் கூறினாள்.



மறுகணமே ஒரு சீறலான மூச்சு அவனிடமிருந்து வெளிப்பட.. எதிர்முனையில் கனத்த மௌனத்துடன் பதிலின்றி இணைப்பு உடனே துண்டிக்கப்பட்டது.

அவனுடைய ஏமாற்றத்தையும், பரிதவிப்பையும் அந்தக் கணமே உணர்ந்த நீக்ஷாவின் மனம், அப்படியே ஆடிப் போனது.

"என்னடா? வீரேனா... என்ன சொன்னாரு..?"

ஆவலுடன் கேட்ட கேசவனுக்கு, பதிலேதும் கூறாமல் அவர் தோள் மீது ஆதரவாக சாய்ந்து கொண்டாள் அவள்.

இதயம் முழுவதும் காற்றுப் புக இடமின்றி வீரேனே நிறைந்திருந்ததால், மூச்சு முட்டுவதைப் போல்...!

அவன் கஷ்டப்பட்டால்... தாங்க முடியாத ஒரு வலி எழுவதாய்...! தன் மூச்சை விட்டு உயிர் நீங்குவதைப் போல் ஒரு உணர்வு!

சட்டென்று அவள் விழிகள் பனித்தன.

மனதிற்குள் வியாபித்திருந்த இருள் முழுவதுமாக விலகி, வெளிச்சக் கீற்றொன்று மெல்ல எட்டிப் பார்க்க ஆரம்பித்தது.

"போர்வாள் இல்லாமல் தன் சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்வது.. காதல்! இடைவெளி இருந்தால், இதயம் இன்னும் நேசிக்கும்...!" என்ற வரிகளின் நிஜம் புரிந்தது.

கோடிச் சிறகுகள் முளைத்து வானத்தில் பறப்பதைப் போன்ற ஒரு உணர்வு அவளை ஆட்படுத்தியது.

காதலுக்குரிய ஆற்றல் அளவிட முடியாதென்பதும், அது ஆழ்மன வெளியில் நுழைந்து ஆயுள் வரை அலைக்கழிக்குமென்றும் புரிந்தது.

## 21



வீட்டிற்குச் சென்றதும் அவளை தனியே அழைத்துப் பேச ஆரம்பித்தார் கேசவன்.

"தீக்ஷா! வீரேன் ரொம்ப நல்லவரு... உன்மேல உயிரையே வச்சிருக்காரு. என்னை ஒரு சொந்த மகன் மாதிரி அருமையாப் பாத்துக்கிட்டாரு! அவருக்குத்தான் நாம நன்றி சொல்லணும்மா.. அதோட அவரை நீ மன்னிக்கவும் செய்யணும்!" உறுதியான குரலில் கூறினார் கேசவன்.

"அப்பா... என்ன சொல்றீங்க?"

"ஆமாம்மா.. வீரேன் ரொம்ப அற்புதமானவர்... உனக்காக அவர் ஏங்கி அலைபாயறதைப் பாத்தா, எனக்கே தாங்கலை.. அவங்க அப்பாவுக்கு எப்படி இருக்கும் பாவம்! அப்படியே உடைஞ்சு போயிட்டாரும்மா வீரேன்! காதல் ஒரு மனிதனை உருக்குலைக்கும்கறதை இப்ப தான் நான் முதன் முதலாப் பாக்கறேன். இப்ப, நீதான் ஒரு முடிவெடுக்கணும்! சீர் செய்ய முடியாத தப்புங்கறது உலகத்துலேயே இல்லை...

"பெண்மைக்கு அர்த்தமே மன்னிக்கிற குணமும், தப்பை மறக்கிற மனசும்தாம்மா!" கேசவன் அவளை ஆதரவுடன் அணைத்தபடி கூறினார்.

அவள் யோசனையுடன் ஜன்னலருகில் சென்று வெளியே பார்த்த போது, விழிகளில் கண்ணீர் மலர்கள் மெலிதாய் அரும்பின.



மனதிற்குள் பலப்பல நினைவுகள் ஊடுருவ, அதன் மையப்பகுதியில் செதுக்கி வைத்த கிரேக்கச் சிற்பமாய், அவன் உருவம்!

அன்று அவன் பேசிய வார்த்தைகளோ, பெரும் பலம் தருவதாய்...!

* * *

இரவு முழுவதும், வேதனையும் அழுகையும் அவளை ஆக்ரமித்துக் கொண்டன.

மனதிலும் புதிதாய் ஒரு மாற்றம் நிகழ, விடிவதற்கு முன்பே ஒரு முடிவுடன் எழுந்தாள் தீக்ஷண்யா.

அழுகை குறைந்து யோசித்த போது, அவளுக்குள் காதல் என்றொரு பெரும் கேள்வி, தன்னால் வந்தது புரிந்தது...

தனக்குள், இன்பம் என்றொரு இனியராகம், அவனால் வந்ததும் தெரிந்தது!

தன் மனதை அவனால் மட்டுமே உயிர்ப்பிக்க முடியும் என்ற உணர்வு இதமாய் உள்ளே பரவ, தன்னை இந்த அளவு பாதித்தவனால் மட்டுமே தன் வாழ்வை மலரச் செய்ய முடியும் என்ற உண்மையும் புரிவதாய்...!

பெண்ணின் அன்பே தெரியாமல், வறண்ட பாலைவனமாக இருந்த அவன் மனதைத் தன் அன்பெனும் மழையால் நனையச் செய்து, அவனை மனிதம் நிறைந்தவனாக மாற்ற வேண்டும் என்ற உறுதியும் எழுந்தது.

அவனுடைய நினைவுகள் இதமாய்க் கோதிவிட்ட தன் மனதில், அவன் விரல்களின் ஸ்பரிசம் தேடி மனம் காத தூரம் தொலைந்தது.

மெல்லத் தன்னை நிலைப்படுத்தி எழுந்த தீக்ஷண்யா, கண்களைத் துடைத்து எழுந்து தயாராகி ஒரு தீர்மானத் துடன் வீரேனின் வீட்டிற்குச் சென்றாள்.

* * *

**வி**டிந்தும் விடியாத அந்தப் பொழுதில், தோட்டத்து நடைபாதையில் ஜாகிங் செய்து கொண்டிருந்த வீரேனின் உருவம், அவளுக்குள் பனி விலகிய சூரியனாய்...!

இளம் பனித் துளி விழுகின்ற அந்த நேரத்தில், தோட்டப் பாதையில் அவள் நடந்து வந்தபோது, பூமிக்கும் வலிக் காமல் பூ ஒன்று நடந்து வருவது போல்... அவளுடைய கால்தடங்கள் ஓவியங்களாய்...!

உடம்பில் உறைந்த உயிர் உருக, அவன் பார்வைத் தென்றல் வருட மனம் பாடும் வானம்பாடியாய் சிறகடித்துப் பறந்தது அவளுக்கு!

அவளருகில் சென்றதும் மெதுவாக நிமிர்ந்து, "தேங்க்ஸ்" என்றபோது, ஜாகிங் உடையில் மிகவும் மெலிந்திருந்த வனின் உருவம் அவள் மனதை ஆழமாய்த் தைத்தது.

"எதுக்கு...?" என்ற போது, அவன் குரலில் உணர்ச்சிகள் துடைக்கப்பட்டிருந்தன.

"ம்... அப்பாவப் பாத்துக்கிட்டதுக்கு ரொம்ப நன்றி!" தவிப்புடன் வந்தது அவள் குரல்.

அவளையே ஒரு கணம் ஆழமாக ஊடுருவியவன் "ம்... அப்புறம்..?" என்றான் கேள்வியாக.

ஒரு சீறலான மூச்சுடன் நிமிர்ந்தவளின் பார்வையில், மயிலிறகின் மென்மையான வருடலை உணர்ந்தான் வீரேன்.



தன் மனதிலிருந்த காதலை... மாற்றத்தை அவள் இதழ்கள் கூறவில்லை.... விழிகள் கூறின!

பாலைவனம் தேடி நதி ஒன்று வந்ததும், வார்த்தை யின்றி விழிகளால் நூறு கோடி அன்பு தந்ததும் புரிந்து, மனதில் வானத்தையும் வசப்படுத்திய பிரமிப்பு வந்தது, அவனுக்குள்!

அந்த தேவதையை தனக்கு வரமாக அளித்த கட வுளுக்கு, முதலில் உள்ளம் நன்றி கூறியது.

தன்னை அவள் புரிந்து கொண்ட நிஜம், மனதை பரவச மாய் சிலிர்க்கச் செய்ய, முகம் கொள்ளாத மகிழ்ச்சியுடன் மெல்ல அவளருகில் வந்தான் வீரேன்.

இதழ்கள், "தீக்ஷா..." என்று மென்மையாய் வார்த்தை களை உதிர்த்தன... உணர்ச்சிப் பெருக்கில் தத்தளித்தன!

விழியோரம் கசிய நிமிர்ந்தவள், "நேத்து... அந்த கிஃப்ட்... சாரி.." தவித்து நின்ற தீக்ஷாவை, மென்மை யாக அணைத்து, அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, நெற்றியில் தன் உதடுகளின் தடம் பதித்தான் வீரேன்.

நாணத்தில் அவளுடைய முகம் மலர்ந்து விகசித்த போது, வீரேனுக்கு சொர்க்க லோகமே சொந்தமானதைப் போல்... முப்பது நாளும் பௌர்ணமியாய்!

"நான் என்ன கேட்டாலும் வெட்கத்தையே தருகிறாயே..? வெட்கத்தைக் கேட்டால் என்ன தருவாய்..." தபூ சங்கரின் கவிதை வரிகள், அவனுக்கு அந்த நிமிடம் நினைவிற்கு வந்தன.

அந்தக் கணமே, அதிகாலைக் குயிலொன்று இனிமையாய்க் கூவியது.

முன்பு... முதன் முதலாக.. சிறு துளியாய்.. உயிர்த் துளியாய் வீரேனுக்குள் விழுந்த தீக்ஷண்யா, இன்று பெரு மழையாய் அவனை ஆட்படுத்திக் கொண்டாள்.

நெஞ்சமெங்கும் சந்தோஷம் பொங்கிப்பரவ, இதயங்களிரண்டும் கலந்ததால், அங்கு புது அர்த்தம் பிறந்தது.

வீரேனின் மார்பில் மாலையாய் அவள் படர்ந்திருக்க, வாழ்க்கை தன் பயணத்தில் வசந்தத்தை வசப்படுத்திக் கொண்டது.

இரவு முழுவதும், கடல்கன்னியின் அணைப்பில் சுகித்திருந்த சூரியன், நாணிச் சிவந்து உதயமாகிக் கொண்டிருந்தான்.